# ஆண்டறிக்கை

# 2013



நீடித்து நிலைத்திருப்பதற்காக
வளர்ச்சியடைகின்றது

RDB
ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
Regional Development Bank

## எமது நோக்கு

“சௌபாக்கியமான இலங்கையை உருவாக்குவதன் பொருட்டு பிரதேச அபிவிருத்தியின் ஊடாக மக்களை வலுவூட்டல்”

## எமது குறிக்கோள்

“சேவைக்கு அர்ப்பணிப்பும் வினைத்திறமை மிக்க தொழில்சார் ஊழியர்கள் மூலம் நவீனமயப்படுத்தலுடன் கூடிய வங்கிச் சேவையை வழங்கி பிரதேச சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கம் கொண்ட பலமான நிறுவனமாதல்”

ஆண்டறிக்கை
2013

# நீடித்து நிலைத்திருப்பதற்காக வளர்ச்சியடைகின்றது

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
Regional Development Bank

# புற அட்டை விவரிப்பு

## நீடித்து நிலைத்திருப்பதற்காக வளர்ச்சியடைகின்றது.

எமது கற்பனைத் திறனை மிகுந்த அளவில் தாண்டிச் செல்கின்ற பிரபஞ்சத்தை ஒருவரது அதிர்வொலி கூட சென்றடைகின்றது. அத்துடன் அது இன்னும் வளர்ச்சியடைவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எவ்வாறாயினும் இந்த விவரிக்க முடியாத விண்வெளியில் கணிப்பிட முடியாத நோக்கங்களுக்கிடையே விலங்குகள் மற்றும் தாவரங்கள் போன்ற உயிர் வாழும் இனங்களின் தன்மை காரணமாக பூமி தனிச் சிறப்பைக் கொண்டுள்ளது என்பது விஞ்ஞானிகளின் கருத்தாகும்.



இந்த உயிர் இனங்களில் மனித இனம் பல பிரிவுகளாகப் பிரிகின்ற மனித வர்க்கத்திற்கு உரித்துடையதாகக் காணப்படுகின்றது. பிரபஞ்சத்திற்கிடையே பூமியைப் போன்று மனிதன் தனித் தன்மை கொண்டதாக அவற்றின் மீது மிகுந்தளவில் தங்கியிருக்கின்ற பூமியின் முடிவில் சாத்தியமான நிலையான தன்மையைக் கொண்டுள்ளது. நூறு ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் வாழ்க்கை நிலை பெற்றிருந்த “மல்டெக்” என்றழைக்கப்படுகின்ற கிரகம் இதில் உயிர் வாழ்ந்த சக்தி வாய்ந்த இனங்களின் பசிக் கொடுமை காரணமாக அழிந்ததாக கூறப்படுகின்றது.

முக்கிய இடத்தை வகிக்கின்ற நிலையான தன்மை மற்றும் அவற்றின் வளர்ச்சிக் கூறுகளின் தேவை மனித உடலிற்கு மட்டுமன்றி மேற்கூறப்பட்ட மல்டெக் போன்ற கிரக அழிவால் உள்ளத்திற்கு ஏற்படுகின்ற அச்சத்தை தடுப்பதற்கும் அத்தியாவசியமானதாகும்.

ஒரு சிறந்த நாளைய தினத்தை உருவாக்குவதற்கு மனித சிந்தனைகள் போன்று பூமியில் விதைகளை நடுதல் எமது பெறுமதி வாய்ந்த உலகின் உயிர் வாழ்வு தொடர்ச்சியாக நடை–டபெறுவதையும் உறுதி செய்கின்றது.

மேற்கூறப்பட்ட மார்க்கங்களினூடாக தளர் நடைபோடுகின்ற பிரதேச அபிவிருத்தி வங்கியானது விவசாயம், கடற்றொழில் மற்றும் விலங்கு வளர்ப்பு போன்ற ஆரம்ப உற்பத்தி செயற்பாடுகளில் பெரும்பாலான மக்களை உள்ளடக்கி வாடிக்கையாளர்களுக்கு நிதி உதவிகளை வழங்கி செழிப்புக்காக இந் நிறுவனம் தனித்தன்மையைக் கொண்டுள்ளது. அத்துடன் நிலைத்திருப்பதற்காக ஒத்தியங்கும் மற்றும் வளர்ச்சி ஆகிய இரண்டையும் அமைத்து மனித விழுமியங்கள் மற்றும் தேர்ச்சி நிலை நிறுத்த ஒத்துழைக்கும் நிறுவனமாகவும் திகழ்கின்றது.........

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1 | பிரதேச அபிவிருத்தி வங்கி பற்றி |
| 2 | நிதிசார் கண்ணோட்டங்கள் |
| 7 | தலைவியின் மீள்நோக்கு |
| 12 | பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரியின் மீள்நோக்கு |
| 15 | பணிப்பாளர் சபை |
| 21 | கூட்டுறவு முகாமைத்துவக் குழு |
| 22 | பிராந்திய பொது முகாமையாளர்கள் மற்றும் சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர்கள் |
| 24 | தலைமையத்திலுள்ள உதவிப் பொது முகாமையாளர்கள் |
| 25 | பிராந்தியத்திலுள்ள உதவிப் பொது முகாமையாளர்கள் |
| 28 | முகாமைத்துவக் கலந்துரையாடல் |
| 33 | விஷேட நிகழ்வுகள் |
| 42 | கூட்டுறவு சமூகப் பொறுப்புக்கள் |
| 44 | உற்பத்தி மற்றும் சேவைகள் |
| 48 | இடர் முகாமைத்துவம |
| 53 | கூட்டுறவு ஆளுமை |
| 75 | சபை மற்றும் குழுக்களின் வருகை |
| 76 | பணிப்பாளர்களின் கூற்று பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உறுதிப்படுத்தல் அறிக்கை |
| 78 | உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பாக பணிப்பாளர்களின் கூற்று |
| 80 | பணிப்பாளர்களின் அறிக்கை |
| 85 | கணக்காய்வுக்குழு அறிக்கை |
| 87 | ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழு அறிக்கைகள் |
| 88 | நிதித் தகவல்கள் |
| 89 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை |
| 91 | வருமானக் கூற்று |
| 92 | முற்றடக்க வருமானக் கூற்று |
| 93 | நிதி நிலைக் கூற்று |
| 94 | காசுப் பாய்ச்சற் கூற்று |
| 95 | உரிமை மாற்றம் பற்றிய கூற்று |
| 96-139 | நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் |
| 140 | கிளை வலையமைப்பு |
| 142 | கூட்டுறவு தகவல் |






# பிரதேச அபிவிருத்தி வங்கி ( RDB ) விருட்சத்தின் கதை

பிரதேச அபிவிருத்தி வங்கியின் (RDB) ஆரம்பத்தை 1985 இற்குத் திரும்பிச் செல்வதன் மூலம் நோக்க முடியும். அப்போது பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் (RRDB) கீழ் மாவட்ட மட்ட வங்கிகளாக ஸ்தாபிக்கப்பட்டன. 1997 பிந்திய பகுதியில் இவ்வாறாக தொழிற்பட்ட பதினேழு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் ரஜரட்ட, ருஹுணு, வயம்ப, ஊவா, கந்துரட்ட மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி வங்கிகளாக, ஆறு மாகாண மட்ட வங்கிகளாக எழுச்சி பெற்றன.

2010 மே மாதத்தில் இந்த ஆறு வங்கிகளும் ஒரே தேசிய மட்ட வங்கியாக எழுச்சி பெற்றதுடன் பிரதேச சங்வர்த்தனை வங்கி (பிரதேச அபிவிருத்தி வங்கி / RDB) ஆக மாற்றம் பெற்றது. இந்த வங்கி 2008 ஆம் ஆண்டு 41ஆம் இலக்க பிரதேச சங்வர்த்தனை வங்கிச் சட்டத்தின் கீழ் அரச நிறுவனமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கிராமிய மக்களுக்கு கிராமிய பொருளாதாரத்துக்கு பலமூட்டுவதற்கு பங்களிப்புச் செலுத்தக் கூடிய வகையில் அடையக் கூடிய மற்றும் செலுத்தக் கூடிய கடன் வசதிகளை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் 100% அரசுக்குச் சொந்தமான வங்கியாக உருவாக்கப்பட்டது. “வெற்றுக்கால் வங்கி எண்ணக்கரு” (bare foot banking concept)என்ற அசலான அடிப்படையில் வருமான முக்கோணத்தில் நடுத்தர மற்றும் அடித்தள வருமானம் கொண்டவர்களுக்கு சுலபமான நிதித் தீர்வுகளை ஆக்க பூர்வமாக வழங்குவதற்கு இவ்வங்கி பாடுபடுகின்றது. நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில்களிலுள்ள அதன் வாடிக்கையாளர்கள் மற்றும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செலுத்துகின்ற விவசாயம், கால்நடை மற்றும் மீன்பிடித்துறை, கைத்தொழில்கள் போன்று மகளிர்களுக்கும் வலுவூட்டுவதற்கு மிகத் திறமையாக இவ்வங்கி செயற்படுகின்றது. மேலும் இவ்வங்கி கிராமிய மக்களிடையே சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்களுக்கு அவ்வாறே பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் பருவமடைந்தோருக்கான சேமிப்புக்கு மிக உயர்ந்த இலாபத்தை வழங்கி அவர்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கின்றது. பெறுபேறுகள் மிக்க ஊக்கத்தைக் கொண்டுள்ளன. அத்துடன் இன்று இந்த வங்கி 5 மில்லியனுக்கு மேற்பட்ட நேர்மையான வாடிக்கையாளர்கள் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதையிட்டு அத்துடன் 3000 பேருக்கும் அதிகமான ஊழியர்களுக்கும் தொழில் வாய்ப்பை வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமையடைகின்றது. களுத்துறையில் 1985 இல் நடப்பட்ட விதை இப்பொழுது 265 கிளைகளுடன் நன்கு வளர்ச்சி பெற்ற விருட்சமாக விளங்குகின்றது.

# நிதி சார் கண்ணோட்டம்

## சொத்துக்கள் திரட்டு




## கடன் பொறுப்பு திரட்டு




## வைப்புக் கூட்டு




## கடன் நிலுவைகள் நோக்க ரீதியானது




## சேமிப்பு வைப்புக் கூட்டு




## விவசாய அடிப்படையான முற்பணக் கூட்டு



## கடன் பொறுப்பு வளர்ச்சி




## சொத்துக்கள் வளர்ச்சி




## மாகாண ரீதியான வைப்புக்கள்




## மாகாண ரீதியான கடன் நிலுவைகள்




## வழங்கப்பட்ட கடன்கள் - நோக்க ரீதியானது




## வழங்கப்பட்ட கடன்கள் - மாகாண ரீதியாக



## வருமானக் கூட்டு




## செலவினக் கூட்டு




## வட்டி வருமானம்




## வட்டிச் செலவினம்




## NPL VS மதிப்புக்குறை ஏற்பாடு




## மொத்த வைப்புக்கள்/மொத்த கடன்கள்




RDB
RDB
Empowering Sri Lankans
ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
Regional Development Bank
Head Office



# தலைவியின் மீள்நோக்கு

2013 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் நான்காவது வருடாந்த அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளைச் சமா்ப்பிப்பதையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்

பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஆரம்பத்தை 1985 நோக்கி திரும்பிச் செல்கையில் அதனை அறிந்து கொள்ள முடியும். பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் மாவட்ட மட்டத்திலான வங்கிகளாக ஸ்தாபிக்கப்பட்டன.

1997 பிந்திய காலப்பகுதியில் ரஜரட்ட, ருஹுணு, வயம்ப, ஊவா, கந்துரட்ட மற்றும் சபரகமுவ அபிவிருத்தி வங்கிகளாகத் தொழிற்பட்ட ஆறு மாகாண மட்ட அபிவிருத்தி வங்கிகளாக, இத்தகைய பதினேழு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் எழுச்சி பெற்றன. இந்த ஆறு வங்கிகளும் ஒரு தேசிய மட்ட வங்கியாக ஒருங்கிணைக்கப்பட்டு பிரதேச சங்வா்த்தனை வங்கியாக உருவாக்கப்பட்டது. இவ்வங்கி அரச நிதி நிறுவனமாக 2008 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க பிரதேச சங்வா்த்தனை வங்கிசட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது.

தேசிய மட்டத்திலான பிரதேச சங்வா்தன வங்கி என்றவகையில், இவ்வங்கியின் நோக்கம் விவசாயம், கைத்தொழில், வியாபாரம், வா்த்தகம், கால்நடை வளா்ப்பு, கடற்றொழில் மற்றும் மகளிா் வலுவூட்டல் போன்ற அபிவிருத்தி செயற்பாடுகளை மேம்படுத்துவதன் மூலம் குறிப்பாக நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் சிறிய, நடுத்தர அளவு கைத்தொழில்களுக்கு நிதி உதவியை வழங்குவதன் மூலம் இலங்கையின் பிரதேச பொருளாதார அபிவிருத்தியை எளிதாக்குவதே இவ்வங்கியின் நோக்கமாகும்.

## வறுமை ஒழிக்கப்பட்ட இலங்கை

பல ஆண்டுகளாக ஆறு பல்வேறுபட்ட தனித்துவம் வாய்ந்த கொள்கைகள் மற்றும் செயற்பாட்டு நடைமுறைகள் அனைத்தையும் ஒழுங்குபடுத்தி ஒன்று திரட்டக்கூடியதாகவுள்ளதையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். பிரதேச பொருளாதார அபிவிருத்தியினூடாக குறைந்த வருமானம் பெறுவோரை வலுவூட்டுவதன் மூலம் வறுமையற்ற இலங்கையை உருவாக்கும் இலக்குடன் ஒரே நோக்கில் ஒரே குடும்பமாக நாம் அனைவரும் இப்பொழுது கருமமாற்றி வருகின்றோம்.

நாட்டில் வறுமையை ஒழித்துக்கட்டுகின்ற நோக்கில் கிராமிய பொருளாதாரத்திற்கு பலமூட்டுவதற்கு பங்களிப்புச் செலுத்தக் கூடியதாகவுள்ள கிராமிய மக்களுக்குச் சென்றடைகின்ற, செலுத்தக்கூடியதாகவுள்ள கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் 2013ஆம் ஆண்டின் பொழுது இவ்வங்கி பல செயற்திட்டங்களை ஆரம்பித்துள்ளது. நடுத்தர மற்றும் கீழ் மட்டத்திலுள்ளோருக்கு வைப்பு நகா்த்தல் மற்றும் கடன் விநியோகத்திற்கான சுலபமான நிதிச்சேவைகளை ஆக்க பூா்வமாக வழங்குவதற்கு இவ்வங்கி உயிரோட்டத்துடன் செயற்படுகின்றது.

2013 டிசம்பா் 31 முடிவடைந்த ஆண்டுக்காக வரவு செலவு எதிா்பாா்க்கப்பட்ட இலாபம் ரூபா 790 மில்லியனுக்கு எதிராக வரிக்கு முன்னா் இலாபம் ரூபா 397 மில்லியனை இவ்வங்கி வருமானமாகப் பெற்றுள்ளது. மொத்த வைப்புக்கள் கடன்கள் மற்றும் முற்பணங்கள் முறையே ரூபா 65,797 மில்லியனாகவும் ரூபா 65,684 மில்லியனாகவும் இந்த ஆண்டில் இவ்வங்கி இதன் வைப்புக்களை ரூபா 62,647 மில்லியனாகவும் கடன்கள் மற்றும் முற்பணங்களை ரூபா 60,093 மில்லியனாகவும் அதிகரித்துள்ளது. உலக சந்தையில் தங்க விலை ஏற்ற இறக்கம் வங்கியின் இலாபத்திற்குப் பாதகமான அழுத்தத்தை ஏற்படுத்தியது. இந்த விலை இறக்கம் காரணமாக இலாப நட்டக் கணக்கினூடாக இவ்வங்கி ரூபா 444 மில்லியனை ஒதுக்கீடு

செய்ததன் விளைவாக இவ்வங்கி ரூபா 2,289 மில்லியனை செயற்படாத பிரிவுக்கு மாற்றம் செய்துள்ளது. மேலும் ரூபா 348 மில்லியன் தொகை முன்னேற்பாட்டுடன் எதிர்பார்க்கப்பட்ட மூலதன இழப்புக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அபிவிருத்தி நிலையங்களின் உருவாக்கம்

சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனங்கள் (SMEs) எல்லா வியாபாரங்களினதும் 80% இலங்கையின் பொருளாதாரத்தின் பெரும்பகுதியைக் கொண்டுள்ளது. இவை பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் காணப்பட்டுள்ளதுடன் பல்வேறு திறமைகள், அரை வினைத்திறன் மற்றும் தேர்ச்சியடையாத வருமானத்தைப் பெருக்குகின்ற தனிப்பட்டவர்களுக்கு பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலுள்ளோருக்கும் வேலை வாய்ப்புக்களை வழங்குகின்றன.

இத்தகைய நிறுவனங்கள் நாட்டின் எல்லாத்துறைகளிலும் கண்டறியப்பட்டுள்ளதுடன் வருமானத்தைப் பரவச் செய்கின்ற தேர்ச்சி பெற்ற, அரை தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சியில்லாதவர்களுக்கும் வருமான பெருக்கத்திற்கு வழியமைக்கின்றது.

கொள்கை கலந்துரையாடலில் சிறிய, நடுத்தர கைத்தொழில் மீதாக மையப்பகுதி நிறுவன ரீதியாக பொருளாதாரத்தின் பெரும்பகுதியைக் கொண்டுள்ளது. இவை பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் தேர்ச்சி, கண்டுபிடிப்புக்கள் பொருளாதாரவளர்ச்சியை மேம்படுத்துவதில் அவர்களது பங்களிப்பை வெளிப்படுத்துகின்றது. ஆகவே SME துறை வளர்ச்சியின் இயந்திரமாகவும் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும் கணிக்கப்படுகின்றது. இதற்கு அமைவாக இவ்வங்கியின் பணிப்பாளர் சபை தலைமையகம் மற்றும், மாகாண மற்றும் கிளை மட்டத்திலும் SME அபிவிருத்தி நிலையங்களை நிறுவுவதற்கு முன்னுரிமையாக கவனத்திற் கொண்டு அதிகளவு கவனத்தை ஒழுங்குபடுத்தியுள்ளது.

SME துறையை வழங்குவதற்கு நாம் தலைமையகத்திலும் மாகாண மட்டங்களிலும் விஷேட கடன் SME பிரிவுகளை ஸ்தாபிக்கக்கூடியதாக இருந்துள்ளோம். மேலும் இந்நோக்கத்திற்காக அறுபத்து ஒன்பது SME உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டு அவர்களை இந்நோக்கங்களை எதிர்கொள்வதற்கு தலைமையகம், மாகாண SME பிரிவுகள் மற்றும் கிளைகளுக்கும் பொறுப்பு வழங்கியுளோம்.

உலக வங்கி திட்டத்தின் கீழ் SME துறைக்கு கடன் வழங்கும் புஜமாக நிதி அமைச்சினால் இவ்வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளதையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இத்திட்டத்தின் கீழ் வங்கி ரூபா 300 மில்லியனை ஒதுக்கியுள்ளதுடன் மேலும் ரூபா 300 மில்லியன் கடன் வழங்குவதற்கு ஊக்குவிக்கவிக்கப்பட்டுள்ளது.

## தலைமையகத்தில் நுண் நிதிப் பிரிவை உருவாக்குதல்

கடந்த காலத்தில், வங்கிக்கும் சுய உதவிக்குழுக்கள் (SHGs) இடையில் தனித்திறன் ஆற்றல் வளர்ச்சியை நாம் கண்டுள்ளோம். வங்கி நிதியங்கள் குறித்து கடன் வழங்குகின்ற மீள் நிதி வளர்ச்சிக்கு இந்த குழுக்கள் துணை புரிந்துள்ளன. இலங்கையின் ஒவ்வொரு பகுதியிலும் இவ்வங்கியின் வரலாற்றினூடாக கிராமிய நிதி வளமாக குறிப்பாக பெண்களுக்கு மிகக் கவனத்தை ஈர்க்கின்ற கவர்ச்சியை இந்த சுயஉதவிக் குழுக்கள் கொண்டுள்ளன.

ஆகவே, இவ்வங்கி நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு மற்றும் தமது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்குப் பங்களிப்புச் செலுத்துகின்ற நுண் மட்டத்தில் அதன் வாடிக்கையாளர்களுக்கு வலுவூட்டுவதில் திறமை பெற்றுள்ளது.

நுண் மட்ட வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்குவதற்கு நுண் நிதிப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. நுண் மட்ட வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு நுண் நிதிப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. வறியவர்களை ஒழுங்குபடுத்தி அவர்களது வியாபாரங்களில் செயற்பாட்டுப் பிரச்சினையைத் தீர்த்தல், பணத்தை வழமைக்கு மாறான சேமிப்புக்களுக்குப் பதிலாக வழமையான சேமிப்புத் துறையில் ஊக்கமளித்தல் போன்றவற்றில் பாரியளவில் சேமிப்பதற்கு அவர்களுக்கு பங்களிப்பைச் செலுத்துகின்றது

## விஷேட திட்ட பிரிவு

முழுமையான அரசுக்குச் சொந்தமான வங்கி என்ற வகையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனங்கள் மற்றும் கிராமியத்துறைக்கு நிதிசார் சேவைகளை வழங்குவதில் நாம் பிரதான பங்கினை வகிக்க வேண்டுமென பணிப்பாளர் சபை மற்றும் முகாமைத்துவம் இதில் கண்ணோட்டத்தைச் செலுத்துகின்றது. ஆகவே நிதிசார் காரணிகளைப் பின்னணியாகக் கொண்ட விநியோகத்தைவிட வங்கி ஆராய்ச்சி அடிப்படையான நிதிசார் சேவைகளைக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. பயனிக்கக்கூடிய முறையில் நிதிசார் சேவைகளைப் பயன்படுத்த முடியுமான ஒவ்வொரு நபரின் தேவைகளை எதிர்கொள்வதற்கு சுலபமான நிதிசார் சேவைகளை வழங்குவதற்கான மதிப்பீடுகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு இவ்விஷேட திட்டப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டின் பொழுது விஷேட திட்டப்பிரிவு “ஜனஹமு தஸ தஹஸக்” “யாய செயற்திட்டம்” “ஹெல ஒசு சவிய” “குழுக்களை நிறுவுதல்” “வீட்டுத்தோட்டப் போட்டி” “விதை உருளைக்கிழங்கு உற்பத்தி” “பெரிய வெங்காய விதைகள் உற்பத்தி” “விதைநெல் உற்பத்தி செயற்திட்டம்” “திவி நெகும சேமிப்புத்திட்டம்” மற்றும் “கமத்த செயற்திட்டம்” போன்ற பலதிட்டங்களைக் கண்டுபிடித்துள்ளது.

## “ஜனஹமு தஸதஹஸக்” செயற்திட்டம்

எந்தவொரு நிதிசார் முறையும் குறிப்பிட்ட நிதிசார் சேவைகளைச் சிக்கனமாகவும், ஆக்கபூர்வமான முறையிலும் வறியோர் உட்பட தமது தேவைகளை எதிர்கொள்ளக்கூடிய முறையில் உண்மையாகப் பயன்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் கடன் மற்றும் சேமிப்புக்கள் போன்ற தமது நிதிசார் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் வங்கிகளை அணுகுவதில்லை எனக்கண்டறியப்பட்டுயள்ளது. ஆகவே இவ்வங்கி அவர்களது வதிவிட அமைவிடங்களில் அவர்களுக்காக உரையாடுவதற்கு. இத்தகைய பத்தாயிரம் செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிளையும் குறைந்த பட்சம் மாதாந்தம் ஒரு கூட்டத்தை நடாத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.எமது கிளைகள் மக்களுடன் பத்தாயிரம் கூட்டங்களை நடாத்தி இதன் இலக்குகளை அடையக் கூடியதாக இருந்துள்ளது என்பதையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் இவ் வங்கி 31.12.2013 ஆம் திகதியன்று 16,026 கூட்டங்களை நடாத்தக்கூடியதாக இருந்தது. இக்கூட்டங்களில் 498,800 மக்கள் பங்குபற்றியுள்ளதுடன் இவ்வங்கி 334,784 புதிய கணக்குகளைத் திறக்கக்கூடியதாக இருந்துள்ளது.

## “திவிநெகும” வின் கீழ் நடமாடும் சேமிப்பு

வறிய மக்களும் சேமிக்க வேண்டிய தேவை உள்ளது அவர்களில் பலர் சேமிக்கின்றனர் ஆனால் அவர்களது பலதரப்பட்ட தேவைகள் அதிகரித்தல் காரணமாகவும் வைப்பு தொடர்பான சேவைகள் குறைபாடு காரணமாகவும் அவர்கள் சங்கடமான நிலைக்குள்ளாகின்றனர். வறியவர்களுக்கான நிதிச் சேவைகள் குறித்து பல கலந்துரையாடல்களில் அடிக்கடி சேமிப்பு தொடர்பான விடயம் மறக்கப்படுகின்றது அல்லது கலந்துரையாடப்படுவதில்லை. பொருத்தமான சேமிப்பு சேவைகள் கிடைப்பது பற்றாக்குறையின் விளைவாக வறிய மக்களும் குறைந்த வருமானம் பெறுவோரும் பல்வேறு முறைகளில் வழமைக்கு மாறான வழிகளில் சேமிக்கின்றனர். இந்த சேமிப்பு முறைகளில் உள்ள பிரச்சினை என்னவெனில் அவர்கள் இடர்பாட்டைக் கொண்டுள்ளனர் அல்லது ஸ்திரமில்லாத நிலையில் உள்ளனர். இதன் காரணமாக இவ்வங்கி குழு உருவாக்கத்தினூடக இவ்வங்கி சேமிப்புப் பழக்கத்தை உணர்த்தியுள்ளது.

இதன் ஒரு பகுதியாக இவ்வங்கி திவிநெகும நலன்பெறுவோரை உள்ளடக்கக்கூடியதாக “திவிநெகும” அடையாளப் பெயரின்கீழ் பிரத்தியேகமான சேமிப்பு உற்பத்திகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இது 2012ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வங்கி 591,666 திவிநெகும சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிக்கக்கூடியதாக இருந்துள்ளது. அத்துடன் 31.12.2013 அன்று சேமிப்பை 2.1 பில்லியனுக்கு மாற்றி நகர்த்தக்கூடியதாகவுள்ளது.

## “யாய” செயற்திட்டமும் மற்றும் உணவு பாதுகாப்பும்

2012 ஆம் ஆண்டில் அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் எமது உணவுப் பாதுகாப்பை ஒன்று திரட்டுவதற்கு பாதுகாப்பான வழி தன்னிறைவு இலக்கை விரிவடையச் செய்வதே என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இலக்கு அரிசியையும் தாண்டி நிலக்கடலை, கிரீன்பீஸ், கருஞ்சீரகம், எள் மற்றும் சோளத்தையும் உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட தானியங்களுக்கு மேலதிகமாக குரக்கன் வங்கியின் திட்டத்தில் உற்பத்தியை அதிகரிப்பதற்காக உட்படுத்தப்பட்டுள்ளதுடன் உயர் விருத்தி விதைகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.

இவ்வங்கி கௌரவ விவசாய அமைச்சர் மற்றும்அமைச்சு அதிகாரிகளுடனும் பல கலந்துரையாடல்கள் செயற்திட்டங்களை ஆரம்பித்துள்ளது. விவசாயத் திணைக்களத்தினால் ஆலோசிக்கப்பட்டவாறு, காலநிலை மற்றும் மண் நிலைமைகளுக்கமைய ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொருத்தமான தானியம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இத்தானியங்கள் அனைத்தும் சிறிய விவசாயிகளினால் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டதனால், அவர்களைக ‘குடியமர்த்துவதற்கு 2013ஆம் ஆண்டில் விவசாயக் கொள்கையில் RDB பிரதான பங்களிப்பைச் செலுத்தியுள்ளது.

தேவைப்பட்ட நிதிசார் சேவைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன அத்துடன் நாட்டின் பல பாகங்களில் தொடர்பான செய்பாடுகளை மேம்படுத்துவதற்கு அவை கிடைக்கக்கூடியதாகவுள்ளன.

உள்ளூர் விவசாயிகளிடமிருந்து குரக்கன் தேவையை (Finger millet) கொள்வனவு செய்யக் கூடியதாக உணவு பதனிடும் கைத்தொழிலாளர்களுடன் நாம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளோம். இத்திட்டம் மிகவும் வெற்றியளித்துள்ளது.

## “கமத்த” செயற்திட்டம்

கலன்பின்துனுவெவ பெருந்தொகையான சோளம் உற்பத்தி செய்யும் பிரதேசமாகும். விவசாயிகளில் பெரும்பாலானோர் பெண்களாவர். பொருத்தமான தரத்திற்கு ஈரலிப்புத் தன்மையை குறைப்பதற்கு உலர்த்துவதில் பல பிரச்சினைகளை சோளம் பயிர்ச்செய்கை பெண்கள் ஸ்தாபனம் முகம் கொடுக்கின்றன. அவர்களது வேண்டுகோளின்பேரில் கொங்கிரீட்டினால் செய்யப்பட்ட போரடித்தரையை தயாரிக்கக் கூடியதாக கடன்திட்டத்தை இவ்வங்கி வடிவமைத்துள்ளது தானியங்களின் போரடிக்கும் களத்திற்காக 110 பெண்களுக்கு கடன் வழங்கக் கூடியதாகவுள்ளது. அவ்வாறே இவ்வங்கி ஏனைய விவசாயிகளுக்கும் வருங்காலத்தில் அறிவூட்டப்பட்டுள்ளது. இந்த போரடிக்கும் தரைகள் இப்பொழுது பலநோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

## பெரிய வெங்காய விவசாயிகளுக்கு களஞ்சிய வசதிகள்

பெரிய வெங்காய விவசாயிகள் களஞ்சிய வசதிகளைக் கொண்டிருப்பதில்லை. இதனால் அவர்கள் தமது உற்பத்திகளை அறுவடையின் பின்னர் உடனடியாக சந்தைக்கு அனுப்புகின்றனர். இதன் விளைவாக விலையில் பாரிய வீழ்ச்சி ஏற்படுகின்றது. இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு வங்கி நிதி, திட்டமிடல் அமைச்சின் வழி காட்டலின் கீழ் ஓர் கடன் செயற்திட்டத்தை வடிவமைத்துள்ளது. நிதிகள். உலக வங்கியினால் அரசுக்கு வழங்கப்பட்டுள்ளன ஆகவே வங்கி இந்தக் கடன்களை மாத்தளை, அனுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களிலுள்ள விவசாயிகளுக்குக் குறைந்த வட்டி வீதத்தில் வழங்கக்கூடியதாக உள்ளது.வட்டி வீதம் வருடத்திற்கு 9% ஆகும் ரூபா 19.9 மில்லியன் தொகையான கடன்கள் 197 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.மேலும் இந்த திட்டம் பெருந்தொகையான விவசாயிகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

## வீட்டுத் தோட்ட செயற்திட்டம்

வங்கி நாடளவிலான செயற்திட்டமாக வீட்டுத்தோட்ட போட்டியை ஆரம்பித்துள்ளது. அவ்வாறே குடும்பங்களின் போசாக்கு மற்றும் வாழ்க்கைத் தரங்களை அபிவிருத்தி செய்வதற்கு வீட்டுத்தோட்ட போட்டியை இலக்காகக் கொண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் செயற்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. கிராமியப் பிரதேசங்கள் போன்றே நகர, அரை நகரங்களிலுள்ள மக்களும் இந்தப் போட்டிகளில் ஊக்கத்துடன் பங்குபற்றியுள்ளனர் என்பதைக் குறிப்படுவதில் நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒவ்வொரு கிளைக்கும் 50 வீட்டுத் தோட்டத்திற்கான இலக்கு கொடுக்கப்பட்டுள்ளது அத்துடன் எமது 265 கிளைவலைப்பின்னலில் அனைத்தும் இந்த இலக்குகளை அடைந்துள்ளன என்பதை குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஒவ்வொரு மாவட்டத்தினதும் மிகச் சிறந்த வீட்டுத் தோட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு எதிர்வரும் ஆண்டில் மிகச் சிறந்த 25 போட்டியாளர்களுக்கு வெளிநாடு செல்வதற்கான வெகுமதி வழங்கப்படவுள்ளது, அவர்களில் பெரும்பாலானோர் பெண்களாவர்.

## “ஹெல ஒசு சவிய” செயற்திட்டம்

இலங்கை வளமான பாரம்பரியம் கொண்ட ஒரு நாடாகும் அதில் ஒன்று சுதேச மருந்து முறையாகும். சுதேச மருந்துகள் நோய்கள் குணமளிக்கக்கூடிய, பாதுகாக்கக் கூடிய நடைமுறையினூடாக ஆயுர்வேத சேவைகளை வழங்குகின்றது. எவ்வாறாயினும் பல மூலிகை உற்பத்திகள் பல்வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன என அறியப்பட்டுள்ளது. அவற்றில் பல எமது நாட்டில் உற்பத்தி செய்யக்கூடியதாக உள்ளன. ஆகவே பிரதான திட்டமாக வங்கி ஊவாமாகாண சபையுடன் கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளது. அத்துடன் ஊவா ஆயுர்வேத திணைக்களம் இப்பிரதேசத்தில் பல்வேறு மூலிகைகளை உற்பத்தி செய்வதற்கு பொருத்தமான செயற்திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

வங்கி மற்றும் சுதேச வைத்திய அமைச்சினதும் நோக்கம் சிறிய அளவில் கூட இப்பிராந்தியத்தில் மூலிகை உற்பத்திகளைத் தயாரிப்பதற்கு திவிநெகும நன்மை பயப்போரை ஊக்குவிப்பதற்கும் ஊவா மாகாண சபையின் ஆயுர்வேத திணைக்களத்தினால் சந்தைப்படுத்தல் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதன் பலனாக நாடு பரந்தளவில் “ஹெல ஒசு சவிய” வை தேசிய மட்டத்தில் நடாத்துவதற்கு சுதேச மருத்துவ அமைச்சுடன் கலந்துரையாடல்களை நாம் நடாத்தி வருகின்றோம்.

## பெரிய வெங்காய விதை உற்பத்தி

மத்திய மாகாணத்தின் விவசாயத் திணைக்களம் மற்றும் மாத்தளை அரசாங்க அதிபருடன் கூட்டாக இணைந்து 2013இல் வங்கியினால் பெரிய வெங்காய பயிர்ச் செய்கையாளர்களுக்கு உதவுவதற்கு ஒரு விஷேட திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர்ச் செய்கையாளர்கள் விவசாயத் திணைக்களத்திடமிருந்து தேவையான தொழில்நுட்பம் மற்றும் உதவிகளைப் பெற்றுக்கொள்கின்றனர். அத்துடன் வங்கியிடமிருந்து வருடத்திற்கு 9% சலுகை வட்டி வீதத்தில் ரூபா 400,000 வரை இலகு கடன்களைப் பெற்றுக்கொள்கின்றனர். இவ்வசதிகள் மத்திய வங்கியினால் வழங்கப்படுகின்ற மீள்நிதியத்துடனே வழங்கப்படுகின்றன. அடுத்த பருவகாலத்தில் விளைச்சலைப் பாதுகாப்பதற்கு களஞ்சியங்கள் நிர்மாணிக்கப்படுவதற்கு மேலும் நிதி உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பதே எனது அபிப்பிராயமாகும்.

தற்பொழுது நாம் நல்ல தரமான விதைகளை உற்பத்தி செய்கின்ற பெரிய வெங்காய உற்பத்தியாளர்களை நாம் காண்கின்றோம்.அவர்கள் மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள, கிம்பிஸ்ஸ, கலேவெல, தேவஹுவ, நாஉல மற்றும் கோன்கஹாவல பிரதேசங்களிலும் பரந்து காணப்படுகின்றனர். 2016ஆம் ஆண்டுக்குள் எமது நாட்டில் பெரிய வெங்காய தேவையை பூரணமாக உற்பத்தி செய்வதற்கு மாத்தளை அரசாங்க அதிபர், விவசாயத்திணைக்களம் மற்றும் எமது வங்கியும் இலக்கைக் கொண்டுள்ளோம்.

## உருளைக்கிழங்கு விதை உற்பத்தி

2013ஆம் ஆண்டில் வங்கியினால் நுவரெலிய அரசாங்க அதிபர் மற்றும் மத்திய மாகாணத்திலுள்ள விவசாயத்திணைக்களத்துடன் கூட்டாக இணைந்து விதை உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு உதவுவதற்கு ஒரு விஷேட திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. நுவவரெலிய மாவட்டதின் காலநிலை விதை உருளைக்கிழங்கு உற்பத்திக்கு மிகப் பொருத்தமானதாகும். ஆகவே பிரதான

திட்டத்தில் எல்லா விதை உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகளும் நுவரெலியா மாவட்டத்தின் குடாஓயா, மீபிலிமான மற்றும் பட்டிபொலவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்த தலைமை திட்டத்திற்கு 116 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு விவசாயத்திணைக்களத்திலிருந்து தேவையான தொழில்நுட்ப மற்றும் ஏனைய வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மீள்நிதியத்துடன் வங்கியிடமிருந்து வருடத்திற்கு 9% சலுகை வட்டியில் 200,000/- ருபா இலகு கடன் வழங்கப்பட்டுள்ளது. பிரதான இடைஞ்சல் விளைச்சலைப் பாதுகாப்பதற்கான களஞ்சிய வசதிகள் கிடைக்காமையாகும். எதிர்வரும் ஆண்டில் விதை உருளைக்கிழங்கு உற்பத்திக்காக போபத்தலாவ, அக்கரபத்தன மற்றும் ராகலவிலுள்ள 1000,500,250 விவசாயிகளை அபிவிருத்தி செய்வதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம் என்பதைக் குறிப்பிடுவதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

## பாராட்டுரை

இவ்வங்கிக்காக மிகச் சிறந்த இலக்கை அடைந்து கொள்வதற்கு தமது தொடர்ச்சியான ஒத்துழைப்பு, ஆதரவு வழங்கியமைக்காக பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, முகாமைத்துவக் குழு மற்றும் சக ஊழியர்களுக்கும் சபையின் சார்பாக எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளவிரும்பகின்றேன்.

இக்காலப்பகுதியின் நிதி அமைச்சர் என்ற வகையில் அதிமேதகு ஜனாதிபதி, திறைசேரி செயலாளர் மற்றும் அதிகாரிகள், இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் மற்றும் அதன் அதிகாரிகள் எல்லா அரசாங்க அதிகாரிகள் மற்றும் பணிப்பாளர் சபையினதும் வழிகாட்டல் மற்றும் ஒத்துழைப்பு எமக்கு மிகவும் உதவியாகவும் ஊக்க மூட்டுவதாகவும் அமைந்திருந்தன. ஆண்டு முடிவுக்குள் கணக்காய்வு நடாத்தியமைக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இறுதியாக, எமக்கு சாத்தியமான வளர்ச்சியை அடைவதற்குத் துணைபுரிந்த எமது மிகப் பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களின் பங்கெடுப்பு மற்றும் பங்குபற்றுதலுக்காகவும் எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளவிரும்புகின்றேன். இவ்வங்கியின் பங்குதாரர்களின் ஒத்துழைப்பில் நாம் மிக்க நம்பிக்கை கொண்டுள்ளோம். எதிர்காலத்திலும் எமது நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு எமது தொடர்ச்சியான சேவைகளை நாம் நீடிக்கவுள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

Keasla Jayawardana

கேஷலா ஜயவர்தன
தலைவி



# பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரியின் மீள்நோக்கு

நாட்டின் கிராமிய மற்றும் பிராந்திய மக்களின் சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்ட வங்கியான “பிரதேச சங்வர்த்தனை வங்கி (RDB)” ஒரு தேசிய மட்ட வங்கியாக நிலைகொண்டுள்ளதன் நோக்கம் எமது பெயரிலேயே காண்பிக்கப்படுகின்றது என நான் நம்புகின்றேன். முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமானது என்றவகையிலும் 1985 தொடக்கம் தேசத்திற்குச் சேவையாறறக் கொண்டிருக்கின்ற அத்துடன் வெறுமனே ஒரு வங்கியாக மாத்திரமன்றி கிராமிய மக்களிடையே சேமிப்புப் பழக்கம் உட்பட தேவையான போது நிதி ஒத்துழைப்பை வழங்குகின்ற நம்பிக்கைப்யையும் வெற்றி கொண்டுள்ளது. ஆகவே 2013ஆம் ஆண்டின் பொழுது மேலும் ஓர் அபிவிருத்தி வங்கி என்ற நிலையைத் தாமாகவே பூர்த்தி செய்துள்ளது.

வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி என்ற வகையில் எமது நிலைப்பாட்டின் காரணமாக/உச்சஅளவு சேமிப்பு நோக்கத்தைக் கண்டுள்ள பங்குதாரர்களுக்கு பெறுமதி சேர்க்கின்ற வழியில் வியாபாரத்தை இயக்கிச் செல்வது எனது கடமையாகும். 4வது வெற்றி வருடமாக பொது முகாமையாளரின் மீள்நோக்கைச் சமர்ப்பிப்பது எனது சிறப்புரிமையாகும். மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் முழு வங்கித் துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்திய தங்க விலை ஏற்ற இறக்கத்திற்கு மத்தியிலும் நியாயமாக நிறைவேற்றுவதில் வெற்றி கண்டுள்ளோம் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்த ஆண்டின் செயற்பாடு இலக்கு அமைவுகளை அடைந்து கொள்ள முடியாதிருந்த போதிலும், மிகத் தரம் உயர்ந்த முறையிலும் தூய்மையான வழிகளிலும் நாட்டுக்கு 25 ஆண்டு கால சேவையை நீடிப்பதன் மூலம் நாம் கிராமிய மக்களுக்குச் சேவையாற்றக் கூடியதாக இருந்துள்ளோம்.

## எமது இரண்டு புதிய பிரிவுகள்

எழுச்சி பெற்று வரும் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் எமது நாட்டின் வியாபாரச் சமூகத்திற்கு எமது ஒத்துழைப்பை நீடிப்பதிங்கு அர்ப்பணிக்கப்பட்ட கீழ்க்காணும் இரண்டு பிரிவுகளை ஸ்தாபிப்பதன் மூலம் எமது வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதற்குக் கடந்த ஆண்டில் ஓர் அபிவிருத்தி வங்கியின் பொறுப்புக்களுக்கு முன்னுரிமையளித்து RDB அதன் சிறகுகளை நீடித்துள்ளது.

## சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சியாளர் அபிவிருத்திப் பிரிவு

நாட்டின் கிராமிய சமூகத்தினுள் பரந்துள்ள எழுச்சி பெற்று வருகின்ற அத்துடன் ஸ்தாபிதம் பெற்ற தொழில்முயற்சியாளர்களின் நிதித்தேவைகளை நிறைவேற்றுவதற்கும் ஊக்குவிப்பதற்கும் ஒரு பிரிவு விஷேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பிரதேச மட்ட SME பிரிவுகளில் ஏற்கனவே அர்ப்பணிக்கப்பட்ட செயற்பாட்டு ஊழியர் குழாம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது அத்துடன் மேலும் பிரதேச மட்ட பிரிவுகளின் செயற்பாடுகளை இலகுவாக்கும் மற்றும் மத்தியப்படுத்தக்கூடிய வகையில் SME பிரிவை தலைமையக மட்டதில் ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## விஷேட திட்ட முகாமைத்துவப் பிரிவு

இந்த பிரிவு வங்கியின் குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு, வங்கியின் தற்பொழுதுள்ள வியாபார காலத்தை விரிவுபடுத்துவதற்கும் பிரதேச மற்றும் தலைமையகம் ஆகிய இரண்டாவது மட்டத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள விஷேடமாக கணிக்கப்பட்ட அபிவிருத்தித்திட்டங்களை மேம்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப்பிரிவு ஓர் உதவிப் பொதுமுகாமையாளரின் தலைமையின் கீழ் அத்துடன் தலைவி மற்றும் எனது நேரடியான மேற்பார்வை மற்றும்

கண்காணிப்பின் கீழ் உள்ளது. உள்ளூர் நிதித் துறையில் அபிவிருத்தி வங்கியாக எமது பங்களிப்பைப் பலப்படுத்துவதற்கு மேற்கூறப்பட்ட இரண்டு பிரிவுகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதே உண்மையானதாகும். ஆனால் குறைந்த செலவு நிதித்தீர்வுகளைஅறிமுகப்படுத்துகின்ற இலக்கினைக் கொண்ட பொருளாதார குழுக்களை அடைந்துகொள்வதற்கு நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட வலைப்பின்னலை ஆரம்பிப்பதனை நாம் மையமாகக் கொண்டுள்ளோம்

## புதிய உற்பத்தியை அறிமுகப்படுத்தல்

நாட்டின் கிராமிய சனத்தொகையில் எமது தற்பொழுதுள்ள பலம்வாய்ந்த வாடிக்கையாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை புதுப்பிப்பதனைக் கவருகின்ற நோக்கில் குறைந்த செலவு வைப்பு நடமாடும் செயற்திட்டத்தை அறிமுகப் படுத்துவதன் அவசியத்தை 2013 ஆம்ஆண்டில் RDB உணர்ந்துள்ளது. இதன் அவசியத்தைத் திருப்திப்படுத்துவதற்கு உபாய அணுகுமுறையாக “RDB இதுறும் வாசனா” என்ற பெயரின் கீழ் விஷேட சீட்டிழுப்பு ஆரம்பிக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டின் பொழுது வங்கியின் வைப்பு கலப்பு போன்றே வைப்பு வளர்ச்சி தொடர்பான சாதகமான அழுத்தத்தை இது ஏற்படுத்தியுள்ளது.

இந்த சீட்டிழுப்பு ஆரம்பத்துடன் நாம் எமது சிறகுகளைப் பொதுமக்களுக்கு மாற்று ஊடகங்கள் மூலம் விரிவுபடுத்தியுள்ளதுடன் பரவலான பிரசித்தத்தை நாம் அடையப்பெற்றுள்ளதுடன் உள்ளூர் வியாபாரத்துறையில் RDB அடையாளத்தை நாம் உருவாக்கியுள்ளோம். 2010 ஆம் ஆண்டில் தேசிய மட்டவங்கியாக ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் குறுகிய நான்கு ஆண்டு காலத்தில் RDB பிராண்ட் பெயருடன் மிகப்பிரசித்தத்தை நாம் அடையப்பெற்றுள்ளமையைக் குறிப்பிடுவது பெறுமதிமிக்கதாகும்.

## நிதி மற்றும் செயற்பாட்டு தொழிற்பாடு

வங்கி கடந்த நிதிஆண்டில் மொத்த வருமானமாக ரூபா 10,994ஐ அடைந்துள்ளது. இது கடந்த நிதி ஆண்டிலிருந்து 15% அதிகரிப்பைக் காட்டுகின்றது. எவ்வாறாயினும் 2012ஆம் ஆண்டில் ரூபா 4,437க்கு எதிரிடையாக 2013ஆண்டு இறுதிக்குள் தேறிய வட்டி வருமானம் ரூபா4,502 இனால் அதிகரிக்கப்பட்டு எல்லை YOY வளர்ச்சியைப் பிரதிபலித்துள்ளது.பொதுவாக 2013ஆம் ஆண்டில் இலங்கையிலுள்ள எல்லா வங்கிகளிடையேயும் அதிகரித்த வட்டிச் செலவு வங்கியின் ஆகக்குறைந்த தேறிய வட்டி வருமான வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்துள்ளது.

2012ஆம் ஆண்டில் ரூபா 1492.43மில்லியனுக்கு எதிரிடையாக வரிக்கு முன்னர் இலாபம் ரூபா 686.79 மில்லியனை பெற்றுள்ளது. இது அடகு மூலதன நட்டத்திற்காக ரூபா348 விஷேட ஒதுக்கம் செய்ததன் பின்னர் அடகு முற்பணத் திற்காக இந்த ஆண்டின் வருமானத்திலிருந்து 12 மற்றும் 15 மாத காலப்பகுதிக்கிடையில் வருமானத்திலிருந்து அடகு வட்டி வருமானம் ரூபா 440 மில்லியன் கழிக்கப்பட்ட பின்னர் 54%

**துறை ரீதியாக கடன் ஏடு**




வீழ்ச்சியைக்காட்டுகின்றது. கடந்த ஆண்டு கடன் விரிவாக்கம் ரூபா 60,093.29 மில்லியனாகக் காணப்பட்டுள்ளதுடன் இது2012 இல் ரூபா 53,667.17 உடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பை காட்டுகின்றது. வங்கியின் மொத்த ஆளணி செலவு 25% வரை பங்களிப்பைச் செலுத்தியுள்ளது. வங்கியின் மாற்றமடைந்த கடன் ஏடு கீழ்க்காணும் பிரதான துறைசார் வகைகளைப் பிரதிபலிக்கின்றது. வங்கியின் நிலையான வைப்பக்கான பொதுவான சேமிப்பு வங்கி இக்காலப்பகுதியில் வீதத்தை 38% இலிருந்து 39% வரை பலப்படுத்தக்கூடியதாக இருந்துள்ளது. இந்த ஆரோக்கியமான பயணம் அடுத்துவரும் ஆண்டுகளில் வைப்பு ஏட்டை மேலும் ஊக்கமடையச் செய்யும்.

**மொத்த சேமிப்புக்களின் வீதமாக பொதுவான சேமிப்புக்கள்**




## எமது சேவை விரிவாக்கம்

இக்காலப்பகுதியில் நாட்டின் பிரதானமாக வட மற்றும் கிழக்கு மாகாணங்களை மையமாக வைத்து தொடர்ச்சியாக எமது கிளை விரிவாக்கத்தைச் செய்துள்ளோம்.களுவாஞ்சிக்குடி, கொக்கட்டிச்சோலை, மூதூர், போகஸ்வெவ போன்ற நான்கு

முக்கியமான கிளைகள் இப்பகுதிகளில் பொருளாதார வளர்ச்சிக்கு மெருகூட்டியது. மேலதிகமாக இக்காலப்பகுதியில் 15 கிளை புதுப்பித்தல் மீள் அமைவிடங்கள் வங்கிச் சேவைக்கு ஊக்கமூட்டியது.

## தேசிய அபிவிருத்தி திட்டத்தில் வருங்கால பூர்வாங்க ஆரம்பமும்/ பங்கேற்றலும்

அரசுக்குச் சொந்தமான முன்னணி வாய்ந்த அபிவிருத்தி வங்கி என்ற வகையில், 2014ஆம் ஆண்டுக்காக அரசாங்க அபிவிருத்தி திட்டத்தின் சார்பாக பல வரவு செலவு திட்டப் பிரேரணைகளை செயற்படுத்துவதற்கு நாம் சிறப்புரிமை பெற்றுள்ளோம். அவற்றிடையே பெரும்பாலும் கிராமிய தொழில் அற்ற பெண்களிடையே கவர்ச்சியை வெற்றி கொள்வதற்கு பெண்தொழில் முயற்சியாளர்களுக்கு வலுவூட்டும் கடன் திட்டம் பிரதானமானதாகும். இந்த விஷேட கடன் திட்டம் அமுலாக்கலுடன் எவ்வித வட்டியுமின்றி அவர்கள் ரூபா 250,000 வரை கடனைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். 2014ஆம் ஆண்டுக்காக இது ஆரம்பிக்கப்பட்டவுடன் சமூகத்தின் மகளிர் வலுவூட்டலுக்கு பரவலான பங்களிப்பைச் செலுத்தக் கூடியதாக இருக்கும்.

வங்கியின் கணனி வலையமைப்பு (Core Banking) முறை அமுலாக்கலிலிருந்து நாணய மற்றும் நாணயமல்லா நன்மைகளும் காத்திருக்கின்றன.

2014ஆம் ஆண்டு ஆரம்பதின் பொழுது இலங்கை மத்திய வங்கி பல கொள்கை மதிப்பீடுகளை எடுத்துள்ளது. லொத்தர் திட்டங்களினூடாக குறைந்தசெலவு வைப்புகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளமை அவற்றில் ஒருகொள்கை மதிப்பீடுகளில் ஒன்றாகும். “இதுறும் வாசனா” வின் அறிமுகம் குறைந்த செலவு வைப்புகள் நகர்வு துரிதப்படுத்தல் தொடர்பாக எமக்குப் பங்களிப்புச் செய்த போதிலும் எதிர்வரும் ஆண்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்புடன் கட்டுப்படுத்தப்பட்ட வைப்பு மார்க்கத்திலிருந்து அப்பால் சென்று நகர்வு உபாயங்களை மேற்கொள்வதற்கு RDB திட்டமிட்டு வருகின்றது.

இந்த எல்லா செயற்திட்டங்களுடன் அத்துடன் 2014 இலக்கு அமைவு நம் அனைவருக்கும் சவால் கொண்டுள்ள ஆண்டாக இருக்கும் எனது திறமை வாய்ந்த சக ஊழியர்கள் வங்கியை பொற்காலத்திற்கு இட்டுச்செல்வதற்கு என்னுடன் இணைந்து செயற்படுவார்கள் என நான் நம்புகின்றேன்.

## பாராட்டுரை

கடந்த நிதி ஆண்டில் எனக்கு வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்காக திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் அவரது ஊழியர் குழாம், மத்திய வங்கி ஆளுனர் அவரது சக ஊழியர்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அவரது சக ஊழியர்களுக்கும் எனது இதயபூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். 2013 ஆம் ஆண்டின் பொழுது தமது தொடர்ச்சியான ஒத்துழைப்பை, ஊக்கத்தை மற்றும் வழிகாட்டலை நல்கிய தலைவி மற்றும் பணிப்பாளர் சபைக்கும் எனது நன்றி சென்றடைகின்றது.

வங்கியின் வெற்றிகரமான பெறுபேறுகளை அடைவதற்கு முழுமையான ஒத்துழைப்பை நல்கியமைக்காக RDB முழுமையான வலைப்பின்னலின் குழு அங்கத்தவர்கள் மற்றும் எமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்கள் வங்கியுடன் உறவைப் பேணியமைக்காகவும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளவிரும்புகின்றேன்.

ஆர்.சிறிவர்தன

பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி



“ RDB எமது கடினமான உழைப்பு மற்றும் வழிகாட்டல் ஒளியும் நிச்சயமாக எமது வெற்றிக்கு பங்களிப்புச் செய்யும் என்பதில் ஐயமில்லை.......”





# பணிப்பாளர் சபை

# பணிப்பாளர் சபை



1

## திருமதி. கேஷலா ஜயவர்தன
## தலைவி

திருமதி. கேஷலா ஜயவர்தன 2011 டிசம்பரில் பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலைவியாகப் பொறுப்பேற்றார். அவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகத் தனது தொழிலை ஆரம்பித்தார். அங்கு அவர் அரசியல் விஞ்ஞானத்தில் விஷேட பட்டத்தைப் பூர்த்தி செய்தார். மேலும் அதே பல்கலைக்கழகத்திலிருந்து பொது நிருவாகத்தில் எம்.ஏ பட்டம் பெற்றார். அத்துடன் 14 வருடங்களுக்கு மேலாக இப்பல்கலைக் கழகத்தில் கடமையாற்றினார். அவர் கந்துரட்ட அபிவிருத்தி வங்கியின் தலைவியாகத் தனது வங்கித்தொழிலை ஆரம்பித்தார். இந்தப்பதவியில் 4 ஆண்டுகள் பதவியாற்றியதன் பின்னர் 2009 இல் பொது மக்களுக்கு சேவையாற்றுகின்ற நோக்குடன் அரசியலில் பிரவேசித்தார் மத்திய மாகாண சபையின் ஓர் அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் அங்கு அவர் அப்பிரதேசத்திலுள்ள மக்களுக்கு பரந்தளவில் உதவுவதற்கு கீழ்க்காணும் திட்டங்களை அமுல்படுத்துவதில் பிரதான கர்த்தாவாக இருந்தார்.

- இளம் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் பாடசாலையை விட்டு வெளியேறியோருக்காக திறன் அபிவிருத்தி பயிற்சியளித்தல் செயற்திட்டங்கள்.
- சுயவேலை வாய்ப்புக்களை வழங்கி கிராம வறிய மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துதல்.
- தற்பொழுது அவர் NAITA வின் (தேசிய தொழிற் பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை) யின் பணிப்பாளராகவும் கடமைபுரிகின்றார்.

## கலாநிதி பி.எம்.எஸ். பட்டகொட
## பணிப்பாளர்

2

கலாநிதி பட்டகொட ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து (புவியியலில்) பி.ஏ. சிறப்புப் பட்டம் பெற்றவர். அத்துடன் யுகே, அங்கிளியா கிழக்குப் பலகலைக்கழகத்திலிருந்து சூழல் விஞ்ஞானத்தில் பிஎச்.டி பட்டத்தையும் பெற்றுள்ளார். மிச்சிகான் யு .எஸ்.ஏ அரச பல்கலைக்கழகத்திலிருந்து இயற்கை வள முகாமைத்துவத்தில் எம்.எஸ்.சி பட்டம் பெற்றதுடன் இலங்கை சுப்ரீம் நீதிமன்றத்தின் சட்டத்தரணியும் ஆவார்.

மேலதிகமாக, இலங்கை, அபிவிருத்தி நிருவாக நிறுவனத்திலிருந்து பொது நிருவாகத்தில் சான்றிதழ் வைத்துள்ளார். கலாநிதி. பட்டகொட இலங்கை மின்சார சபை, லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட், சார்க் அபிவிருத்தி நிதியம், லங்கா சீனி கம்பனி, ஸ்ரீ லங்கா காப்புறுதி, கொள்கை கற்கைகள் நிறுவனம் மற்றும் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம், இலங்கை கார்பன் நிதியம் மற்றும் ஸ்ரீலங்கா பியூல்பிரைட் ஆணைக்குழு போன்றவற்றின் சபை அங்கத்தவராவார். மேலும் அவர் திறைசேரிக்கான பிரதிச் செயலாளருமாவார். அவர் பொது நிறுவன மற்றும் தேசிய திட்டமிடல் அமைச்சு மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சின் பணிப்பாளர் நாயகமாகவும் இருந்துள்ளார்.

மேலும் அவர் இலங்கையின் அதிமேதகு ஜனாதிபதிக்கான மேலதிக செயலாளராகவும் கடமை புரிந்துள்ளார். கலாநிதி பட்டகொட இலங்கையில் சுற்றாடல் நிலைமை உட்பட இலங்கையில் Mangrove வனங்களின் பதிலான பிரயோகங்களின் பொருளியல் மதிப்பீடு மற்றும் இலங்கையில் நகர காற்று தர முகாமைத்துவம், இலங்கையில் சுற்றாடல் மதிப்பீட்டுக்கான கோட்பாட்டு ரீதியான கையேடு மற்றும் இலங்கையில் எரிபொருட்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பான பிஸ்கால் கொள்கை முதலியன உட்பட கூட்டாக இணைந்து இவரால் எழுதப்பட்டுள்ளன.

3

## திரு. சரத் டி அல்விஸ்
## நிறைவேற்றுப் பணிப்பாளர்

திரு.சரத் டி அல்விஸ் ருஹுன பல்கலைக் கழகத்தில் புவியியலில் பட்டம் பெற்றுள்ளதுடன் கல்வியில் டிப்ளோமா பட்டப்பின் படிப்பைப் பெற்றுள்ளார். அவர் உயர் தர மாணவர்களுக்கு புவியியல் ஆசிரியராக 20 ஆண்டுகள் அனுபவம் பெற்றுள்ளார். 2009 - 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ருஹுன அபிவிருத்தி வங்கியின் தலைவராக இருந்துள்ளார். திரு.அல்விஸ் இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ அமைச்சர் டலஸ் அலஹப் பெரும அவர்களின் ஆலோசகராகப் பணிபுரிகின்றார்.

4

## திருமதி ஏ.வி.கே. மாதவி ஹேரத்
## நிறைவேற்றுப் பணிப்பாளர்

பொருளியலில் பி.ஏ (சிறப்பு) பட்டமும் பேராதனை பல்கலைக்கழகத்தில் உளவியலில் முதுமானிப்பட்டமும் பெற்றுள்ள திருமதி ஏ.வி.கே. மாதவி ஹேரத் 01.03.2009 - 2010.04.31 காலப் பகுதிக்கு கந்துரட்ட அபிவிருத்தி வங்கியின் முன்னாள் தலைவியாகவும் செயற்பட்டுள்ளார். திருமதி. ஹேரத் தற்பொழுது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் பகுதியில் சிரேஷ்ட விரிவுரையாளராகத் தொழில் புரிகின்றார். அத்துடன் அவர் உள்ளக மாணவர்களுக்காக விரிவுரை நிகழ்த்துகின்றார். அத்துடன் பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்கு பணமும் வங்கியியலும், சர்வதேச வர்த்தகம்,சர்வதேச நிதி, பொருளியல் அபிவிருத்தி, பொருளாதார சிந்தனைகளின் வரலாறு, ஒப்பீட்டு பொருளியல் போன்ற பாடங்களில் விரிவுரை புரிகின்றார். திருமதி.மாதவி ஹேரத் பணமும் வங்கியியலும், பொருளியல் அபிவிருத்தி பாடங்களில் ஆராய்ச்சிகளை செய்துள்ளார். அவரது ஆராய்ச்சியும், பிரசுரங்களும் பணமும் வங்கியலும் பொருளியல் அபிவிருத்தி மற்றும் மானியங்களும் பொருளாதார அபிவிருத்தி போன்றவை தொடர்பாக செய்யப்பட்டுள்ளது.

5

## திருமதி. சி. கே. நாணயக்கார
## பணிப்பாளர்

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் உதவி ஆளுனரான திருமதி சி.கே.நாணயக்கார 2011 பெப்ரவரியில் பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். அவர் இலங்கை மத்திய வங்கியில் 35 வருட காலம் கடமையாற்றியுள்ளார். அத்துடன் மத்திய வங்கி செயற்பாடுகளில் பரந்த அனுபவம் பெற்றுள்ளார். பிரதேச அபிவிருத்தி பயிற்சியளித்தல் மற்றும் முகாமைத்துவ அபிவிருத்தித் திணைக்களத்தில் சிரேஷ்ட பதவி வகிக்கின்றார். மத்திய வங்கியில் இருக்கின்ற பொழுது, மத்திய வங்கியின் செயலாளராக அவர் வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட பல கிராமிய கடன் திட்டங்களை அமுல்படுத்துவதில் சார்ந்துள்ளார். மேலும் கம்பஹா, களுத்துறையிலுள்ள முன்னாள் பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் இருந்துள்ள திருமதி நாணயக்கார கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து புவியியலில் சிறப்புப் பட்டம் பெற்றுள்ளார். அத்துடன் அதே பல்கலைக்கழகத்திலிருந்து உளவியலில் பட்டமும் பெற்றுள்ளார். மேலும் அவர் யு.கே. லண்டன் பொருளியல் பாடசாலையில் பொருளியலில் பட்டப்பின் படிப்பைத் தொடர்ந்துள்ளார்.

## திரு. ரி. ஏ. ஆரியபால
பணிப்பாளர்

6

திரு. ஆரியபால 1978 இல் மக்கள் வங்கியில் இணைந்துள்ளார். அத்துடன் கூட்டுறவு அபிவிருத்தி SME வங்கியின் பொறுப்பாளராக இருக்கின்றார். அவர் வியாபார நிருவாகத்தில் பி.எஸ்.சி பட்டம் பெற்றுள்ளார். அத்துடன் சட்டத்திலும் பட்டம் பெற்றிருப்பதுடன் சட்டத்தரணியும் ஆவார். அவர் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் இணை அங்கத்தவருமாவார் (FIBSL) அத்துடன் இலங்கை கணக்கியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (MAAT) இன் இணை அங்கத்தவருமாவார். அவரது தொழில் அனுபவம் கிளை முகாமையாளர், உதவி பிரதேச முகாமையாளர், பிரதேச முகாமையாளர், வலைய உதவிப் பொது முகாமையாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் மட்டங்களில் அனுபவம் பெற்றுள்ளார். பரவலாக உள்ளுர் மற்றும் வெளிநாட்டு பயிற்சி பெற்றுள்ளார். அத்துடன் கூட்டுறவு, திட்ட கடன் வழங்கல், நுண் நிதியியல், மனித வள முகாமைத்துவம், கிளை வியாபாரம் / வங்கியியல் போன்றவற்றில் வெளிப்படையாக தொழிற்பட்டார்.

7

## திரு. எஸ். டி. என். பெரேரா
பணிப்பாளர்

திரு. தம்மிக்க பெரேரா 2010 மே மாதம் அதன் உருவாக்கத்திலே பிரதேச அபிவிருத்தி வங்கியின் சபையில் சேர்ந்தார். தற்பொழுது திரு. தம்மிக்க பெரேரா தேசிய சேமிப்பு வங்கியின் சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளராகப் பணிபுரிகின்றார். அவர் 1986 இல் தேசிய சேமிப்பு வங்கியில் இணைந்தார். அங்கு அவர் பிரதி பிரதம உள்ளகக்கணக்காய்வாளர், பிரதம உள்ளக கணக்காய்வாளர் உதவிப் பொது முகாமையாளர் (உள்ளககணக்காய்வு) மற்றும் பிரதி பொது முகாமையாளர் (கணக்காய்வு மற்றும் விழிப்புணர்வு) போன்ற பதவிகளை வகித்த அவர் தற்பொழுது வங்கியின் கணக்காய்வு, புலனாய்வுகள், தகவல் தொழில்நுட்பம், கடன், நிருவாகம், மற்றும் பாதுகாப்பு விடயங்களைக் கவனிக்கின்றார். திரு.தம்மிக்க பெரேரா அத்தாட்சிப்படுத்தப்பட்ட தகவல் முறைகள் கணக்காய்வாளர் ஆவார். தகவல் முறைகள் இலங்கை அத்தியாய, கட்டுப்பாட்டு சங்கத்தின் தலைவராக இருந்துள்ளார். அவர் யுஎஸ்ஏ, உள்ளக கணக்காய்வாளர் நிறுவனத்தின் அங்கத்தவராகவும் இருக்கின்றார். இலங்கை, உள்ளக கணக்காய்வாளர் நிறுவனத்தின் ஆளுனர் சபையிலும் கடமைபுரிகின்றார். அவர் பி.கொம் மற்றும் வங்கி முகாமைத்துவத்தில் டிப்ளோமா பட்டமும் பெற்றுள்ளார். அத்துடன் இலங்கை, பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனத்தின் இறுதி ஆண்டில் உள்ளார். அவர் இலங்கை கிளை, ISACA இனால் ஒழுங்கு செய்யப்பட்ட பல கருத்தரங்குகளில் அத்துடன் பட்டயக்கணக்காய்வாளர் நிறுவனத்தில் உள்ளககணக்காய்வு மற்றும் தகவல் முறைகள் கணக்காய்வு தொடர்பாகவும் கணக்காய்வு மற்றும் ஊழல் புலனாய்வுகள் தொடர்பாகவும் விரிவுரை நிகழ்த்தியுள்ளார்.

## திரு. ரஸெல் டி மெல்
பணிப்பாளர்

8

திரு.ரஸ்ஸெல் டி மெல் 30 ஆண்டுகளுக்கு மேலாக தேசிய அபிவிருத்தி வங்கியில் பாரிய அளவில் கூட்டுறவு வங்கித்துறையில் கடமையாற்றினார். பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட முன்னர் அவர் கூட்டுறவு வங்கியியல் குழுமத்தின் தலைமையின் உப தலைவராகவும் கடமையாற்றினார். இடர்முகாமைத்துவ குழுமத்தின் உப தலைவராகவும் இருந்தார்.

தேசிய அபிருத்தி வங்கியில் தொழிலின் ஆரம்பப் பகுதியில், அவர் திட்டம் மற்றும் அத்தியாவசிய நிதித்துறையில் பல முக்கியமான பதவிகளை வகித்துள்ளார். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தேசிய அபிருத்தி வங்கியில் உள்ளுர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் பங்குடைமையில் இணைந்து கொண்ட போது முக்கியமான வர்த்தகத் திட்டங்கள் சிலவற்றுடன் ஊகக்கமாக இணைந்து கொண்டார். பெருந்தோட்டத் துறையை தனியார் மயப்படுத்தலில் முக்கியமான பங்கினை வகித்தார். திரு.ரஸெல் டிமெல் யு.கே., பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் இணை அங்கத்தவராவார். மேலும் அவர் பல தொழிற்துறைசார் நிறுவனங்களில் அங்கத்தவராகவும் உள்ளார்.

## 9 திருமதி. ஜே. எம். எஸ். டி. ரத்நாயக்க பணிப்பாளர்

திருமதி ரத்னாயக்க அவுஸ்திரேலியா, மெல்போன் பல்கலைக்கழகத்திலிருந்து (2002) பொது மற்றும் கொள்கை முகாமைத்துவத்தில் முதுமானிப் பட்டத்தையும், அபிவிருத்திக் கற்கை நெறிகளில் பட்டப்பின் டிப்ளோமாவை டோக்கியோ ஜப்பானில் (1997) அபிவிருத்திப் பொருளியல் நிறுவனத்திலிருந்தும், பொருளாதார அபிவிருத்திப் பட்டபின்டிப்ளோமாவை இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்தும், (1996) மற்றும் விஞ்ஞான (கணிதம்) இரண்டாம் வகுப்பு சிறப்புப் பட்டத்தை இலங்கை களனி பல்கலைக்கழகத்திலிருந்தும் (1991) பெற்றார்.

ADB, WB, UNDB (2005) என்பவற்றில் நுண்நிதியியலில் TOT ஆகவும், 2013 மே முதல் இலங்கை கொழும்பு, செயலக கட்டடத்திலுள்ள நிதித் திட்டமிடல் அமைச்சின் தேசிய திட்டமிடல் பகுதியில் மேலதிக பணிப்பாளர் நாயகம் (விவசாயம் மற்றும் பிரதேச அபிவிருத்தி) எனும் பதவியை இன்று வரை வகிக்கின்றார்.

## திரு. ஆர். சிறிவர்தன பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி

திரு. சிறிவர்தன 1998 இல் ரஜரட்ட அபிவிருத்தி வங்கியில் அதன் 1வது பொது முகாயையாளர் /அதிகாரி ஆக இணைந்தார். மாகாண வங்கிகளின் ஒருங்கிணைப்பின் பின்னர், அவர் 2010மே 1ம் திகதியிலிருந்து பிரதேச அபிவிருத்தி வங்கியின் பொது முகாமையாளர் / CEO ஆக நியமிக்கப்பட்டார். அவர் தனது வங்கித் தொழிலை 1976 இல் இலங்கை வங்கியுடன் ஆரம்பித்தார். பின்னர் ஹட்டன் நஷனல் வங்கியில் இணைந்து 12 ஆண்டுகள் கடமையாற்றினார். 1990 இல் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையிலும் பின்னர் தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் மலேசியா பொது வங்கியிலும் இணைந்து கொண்டார். வங்கித் தொழிலில் பல்வேறு துறைகளில் குறிப்பாக அபிவிருத்தி வங்கியியலில் 34 ஆண்டுகளுக்கு மேல் சேவை புரிந்துள்ளார். அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து பி.எஸ்.சி (வியாபார முகாமைத்துவம்) பட்டம் பெற்றுள்ளார். அத்துடன் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து பிரதேச அபிவிருத்தியில் பட்டப்பின் டிப்ளோமா பட்டம் பெற்றுள்ளார். மேலும் அவர் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் இணை அங்கத்தவருமாவார்.

## திருமதி. கசுனி பின்னவல பிரதம சட்ட அதிகாரி/சபை செயலாளர்

சபைச் செயலாளர் மற்றும் பிரதம சட்ட அதிகாரியான திருமதி. கசுனி பின்னவல 2011 இவ் வங்கியில் இக்கடமையை ஏற்க முன்னர் உள்நாட்டு வர்த்தக மற்றும் கூட்டுறவு அமைச்சின் கீழுள்ள நுகர்வோர் விவகார அதிகார சபையில் பிரதி பணிப்பாளர் (சட்டம்) உட்பட பொது மற்றும் தனியார் துறைகளில், அத்துடன் கெப்பிட்டல் மகாராஜா குரூப் இற்குட்பட்ட ஒரு கம்பனியில் பிரதான நிறைவேற்று அதிகாரியாகவும், இலங்கை ஊழியர் சம்மேளனத்தில் கைத்தொழில் தொடர்பான ஆலோசகராகவும் பதவி வகித்துள்ளார். ஐக்கிய ராச்சியம், கீலி பல்கலைக்கழகத்திலிருந்து சட்டம் மற்றும் குற்றவியலில் கலை (சிறப்பு) பட்டத்தையும் பெற்றுள்ளதுடன் வர்த்தக சட்டம், நீதி மன்ற வழக்கு, தெரிவித்தல், கம்பனி செயலகம், தொழில் சட்டம், தொழில் வாய்ப்பு சட்டம், வர்த்தக மத்தியஸ்தம், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், கைத்தொழில் தொடர்புகள், நிருவாகம் மற்றும் மனித வள முகாமைத்துவம் போன்றவற்றில் 13 வருட அனுபவம் பெற்ற சட்டத்தரணியாக விளங்குகின்றார்.

# கூட்டுறவு முகாமைத்துவக் குழு



**திரு.ஆர். சிறிவர்தன**

பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி
B.Sc (வியாபார முகாமைத்துவம்)ஸ்ரீ ஜயவர்தனபுர
பிரதேச அபிவிருத்தியில் பட்டப்பின் டிப்ளோமா- (கொழும்பு) AIB (SL)



**திரு.ரி. குகன்**

பிரதி பொது முகாமையாளர் (மனித வளம்)
பிரதம இடர் முகாமைத்துவ அதிகாரி
M.A.(நிதி பொருளியல்) கொழும்பு பட்டப்பின் டிப்ளோமா
(பொரு.அபி.) கொழும்பு பட்டப்பின் டிப். வங்கி முகா.(இலங்கை) AIB (SL)



**திரு.எஸ்.ஏ. அழகக்கோன்**

பிரதி பொது முகாமையாளர்
கடன் மற்றும் அறவீடு
B.com. (விஷேடம்) ஸ்ரீ ஜயவர்தனபுர
ACA,AIB(SL)



**திரு. வஜிர ஜயசிங்க**

பிரதி பொது முகாமையாளர்-(IT)
B.Sc. பொறியியல் (மொரட்டுவ) M.Eng. (தாய்லாந்து)
MBA(USA) Eng. MCSSL, CITP(BCS) , PMP



**திரு.சி. களுபஹன**

நிதி மற்றும் திட்டமிடல் பிரிவுத் தலைவர்
FCA, FMAAT, FCPM, CPA(T)

# பிராந்திய பொது முகாமையாளர்கள் மற்றும் சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர்கள்



**வட மேல் மாகாணம்**
பிரதேச பொது முகாமையாளர்
**திரு.யூ.பி. சேமசிங்க**
B.Com (விஷேடம்) கொழும்பு



**மத்திய மாகாணம்**
பிரதேச பொது முகாமையாளர்
**திரு.கே.பி. தஹநாயக்க**
B.com (விஷேடம்) ருஹுன
முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா, ரஜரட்ட



**திரு.டப்ளிவ். ஜி. ஜே. பிரேமதாஸ**
சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர்
(நிதி மற்றும் திட்டமிடல்)
பி.கொம்.(விஷேடம்) ஸ்ரீ ஜயவர்தனபுர
வர்த்தகத்தில் உயர் தேசிய டிப்ளோமா A.M.P.M.A.(UK)



**தென் மாகாணம்**
பிரதேச பொது முகாமையாளர்
**திரு.சி.எல். பிஹில்லந்த**
பி.கொம்.(விஷேடம்) களனி
முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா- பேராதனை



**மேல் மாகாணம்**
பிரதேச பொது முகாமையாளர்
**திரு.ஏ.எச்.எம்.எம்.பி. ஜயசிங்க**
BBA (ஸ்ரீ ஜயவர்தனபுர)
முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா- வயம்ப
பிரதேச அபிவிருத்தியில் பட்டப்பின் டிப்ளோமா NIBM மற்றும்
RVB நெதர்லாந்து
வங்கி முகாமைத்துவத்தில் பட்டப்பின் நிறைவேற்று டிப்ளோமா (IBSL)



**வடமத்திய / வட மாகாணம்**
பிரதேச பொது முகாமையாளர்
**திரு.டி.எம். சேனாரத்ன பண்டார**
பி.கொம் (விஷேடம்) ஸ்ரீ ஜயவர்தனபுர



**சபரகமுவ மாகாணம்**
பிரதேச பொது முகாமையாளர்
**திரு.சனத் சேனாதீர**
பி.கொம். (விஷேடம்) களனி



**ஊவா / கிழக்கு மாகாணம்**
பிரதேச பொது முகாமையாளர்
**திரு.டி.எம்.ரி.எஸ். குமார**
பி.எஸ்.சி.வியாபார நிருவாகம் (விஷேடம்) ஸ்ரீ ஜயவர்தனபுர



**திரு.எஸ்.ஏ.யு.ஆர்.கே. சின்ஹலகொட**
சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர்
(செயற்பாடுகள்)
பி.கொம்.(விஷேடம்) களனி



**திரு.டப்ளிவ்.எஸ். ஹேவாவசம்**
சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர்
(மனித வள அபிவிருத்தி நிருவாகம்)
பி.ஏ. பொருளியல் (விஷேடம்) ஸ்ரீ ஜயவர்தனபுர

# தலைமையகத்திலுள்ள உதவிப் பொது முகாமையாளர்கள்



**திரு.எஸ்.சி. பெர்னாண்டோ**

உதவிப் பொது முகாமையாளர்
(வியாபார அபிவிருத்தி. மற்றும் சந்தைப்படுத்தல்)
MBA (ஸ்ரீ ஜயவர்தனபுர) FIB (இலங்கை), FSLIM (இலங்கை) FASMI (அவுஸ்திரேலியா)
சான்றிதழ் பெற்ற தொழில் சார் சந்தைப்படுத்துவோர் (ஆசிய பசிபிக் சந்தைப்படுத்தல் சம்மேளனம்)
வங்கி முகாமைத்துவத்தில் டிப்ளோமா (IBSL). சந்தைப்படுத்தல் டிப்ளோமா இலங்கை. (SLIM)
தொழிற்படு சந்தைப்படுத்துவோர் (SLIM)



**திரு. டப்ளியு. எம். டி. எஸ். விக்கிரமசிங்க**

உதவி பொது முகாமையாளர்
(இணக்கப்பாடு அதிகாரி)
பி.கொம் .(விஷேடம்) -ருஹுன
வியாபார முகாமைத்துவ டிப்.பட்டப்பின் படிப்பு- கொழும்பு
வங்கியியலில் இடர்முகாமைத்துவ சான்றிதழ் - சுவீடன்



**திரு.ஐ.ஜே. விஜேசேகர**

உதவிபொது முகாமையாளர்
(கடன் மற்றும் அறவீடு)
பி.கொம். ஸ்ரீ ஜயவர்தனபுர



**திரு.ஏ.எச்.எம்.ஜி.அபேரத்ன**

உதவி பொதுமுகாமையாளர்
(அபிவிருத்தி நிதி)
பி.கொம்.(விஷேடம்) களனி
நுண் நிதி டிப்ளோமா பட்டம் - இலங்கை திறந்த பல்கலைக் கழகம்



**திரு.டி.எஸ்.பி.சி. ஹதுன்ஹேவா**

உதவி பொதுமுகாமையாளர்
(விஷேட பிரிவு)



**திரு.ஜே.பி.கே. ஹேரத்**

உதவி பொது முகாமையாளர்
(நிருவாகம்)
விவசாயத்தில் டிப்ளோமா- கன்னொருவ

# பிராந்தியங்களிலுள்ள உதவி பொது முகாமையாளர்கள்



**திருமதி. சி.எஸ். வேரகொட**
உதவிப் பொது முகாமையாளா
சபரகமுவ மாகாணம்
பி.எஸ்சி. வியாபார நிருவாகம் (விஷேடம்)
ஸ்ரீ ஜயவர்தனபுர



**திரு.டி.பி. தர்மதாஸ**
உதவி பொது முகாமையாளர்
ஊவா மாகாணம
பி.ஏ. பேராதனை



**திரு.டப்லிவ்.எம். நிமல் டி சில்வா**
உதவி பொது முகாமையாளர்
தென் மாகாணம்
பி.எஸ்.சி. வியாபார நிருவாகம் (விஷேட)
ஸ்ரீ ஜயவர்தனபுர



**திரு. கே.ஆரியதிலக்க**
உதவி பொது முகாமையாளர்
தென் மாகாணம்
மனித வள அபிவிருத்தியில் NIBM உயர்
தேசிய டிப்ளோமா



**திரு. ஆர். எம். ஆர். ரன்தெனிய**
உதவி பொது முகாமையாளர்
வட மத்திய மாகாணம்
பி.ஏ. பேராதனை



**திரு.டப்ளியு. வி. ஏ. ஜி. வரக்காகொட**
உதவி பொது முகாமையாளர்
ஊவா மாகாணம்
பி.கொம் (விஷேடம்) ஸ்ரீ ஜயவர்தனபுர



**திரு. எல்.பி. உபாலி**
உதவி பொது முகாமையாளர்
வடமேல் மாகாணம்
பி.கொம். (விஷேடம்) களனி



**திரு. பி. எம். யு. எஸ். பஸ்நாயக்க**
உதவி பொது முகாமையாளர்
வட மத்திய மாகாணம்
விவசாயத்தில் டிப்ளோமா பல்வெஹெர



**திரு.டப்ளியு. கோட்டகே**
உதவி பொது முகாமைளாளர்
மேல் மாகாணம்
பி.கொம். (விஷேடம்) ருஹுன



**திரு. பி. எச். எம். எஸ். பஸ்நாயக்க**
உதவி பொது முகாமையாளர்
மத்திய மாகாணம்
பி.கொம். (விஷேடம்) ஸ்ரீ ஜயவர்தனபுர
முகாமைத்துவ டிப்ளோமா - ஊவா



**திரு.ஜி. எஸ்.டி. டி சில்வா**
உதவி பொது முகாமையாளர்
மேல் மாகாணம்
பி.எஸ்.சி.(வியாபார நிருவாகம் விஷேடம்) ஸ்ரீ ஜயவர்தனபுர



**திருமதி. பி.ஆர் .டி. புஷ்பகுமாரி**
உதவி பொது முகாமையாளர்
வடமேல் மாகாணம்
பி.கொம். (விஷேடம்) களனி

**திருமதி.எச்.எம்.என். மனோஜிகா ஹேரத்**
பிரதம உள்ளக கணக்காய்வாளர்
FMAAT, ACA, வங்கியியல் மற்றும் நிதியியல் (IBSL)
பி.எஸ்.சி. (வியாபார நிருவாகம். நிதியியல் விஷேடம்)
MBA (வயம்ப)

# முகாமைத்துவ கலந்துரையாடல்

வங்கி, அரசாங்கத்திற்குச் சொந்தமான நிதி நிறுவனம் என்ற வகையில் பொருளாதாரத்தின் வறிய துறைகளுக்கு சேவையாற்றுகின்ற விவசாயம், கைத்தொழில், வியாபாரம், வர்த்தகம், கால்நடை மற்றும் மீன்பிடிச் செயற்பாடுகள் மற்றும் நிதி அபிவிருத்தி திட்டங்களுக்கு வலுவூட்டுதல் மூலம் இலங்கையின் முழுமொத்தமான பிரதேச பொருளாதார அபிவிருத்தியை இலகுபடுத்துவதற்கான பொறுப்பை ஏற்றுள்ளது. பிரதேச அபிவிருத்தி வங்கி தற்பொழுது குறிப்பாக உள்ளூர் மற்றும் பொருளதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யவுள்ள திட்டங்களை ஒழுங்குபடுத்துகின்ற குறைந்த வருமான குழுக்களின் சிறிய மற்றும் நடுத்தர அளவு நிதி அபிவிருத்தி திட்டங்களுக்கான பாரிய அபிவிருத்தி நிறுவனமாக விளங்குகின்றது.

நாம் 4,856,000 வாடிக்கையாளர் அடிப்படையைக் கொண்டுள்ளோம். முன்னைய ஆண்டில் 4,250,000 வாடிக்கையாளர்களுடன் ஒப்பிடுகையில் இது 14% அதிகரிப்பை கொண்டுள்ளது. நாட்டின் எல்லாப் பாகங்களிலும் பரந்து காணப்படுகின்ற 265 கிளைகள் கொண்ட கிளை வலையமைப்பு மற்றும் 3 நடமாடும் சேவை நிலையங்களினூடாகவும் எமது வாடிக்கையாளர்களுக்கு நாம் சேவையாற்றியுள்ளோம்.

இவ்வாண்டில், வங்கி பட்டயக்கணக்காளர்கள் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட வருடாந்த அறிக்கை வெகுமதி போட்டியில் "வங்கி நிறுவனங்கள் இணக்கப்பாடு வெகுமதிக்கான" வெகுமதியைப் பெற்றுள்ளது. பிட்ச் ரேடிங்ஸ் லங்கா 'BBB+(lka)'/stable இல் வங்கியின் தேசிய நீண்ட தவணை தரங்களை உறுதி செய்துள்ளது.

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டு வங்கிக்கு பாதகமான ஓர் ஆண்டாகும். 2013இல் வங்கியின் நிதி பெறுபேறுகள் வரவு செலவு மதிப்பிடப்பட்ட இலக்குகளின் பின்னால் வீழ்ச்சியடைந்துள்ளது. வங்கி இலட்சியங்களுக்கு அமைவாக தீவிரமான நடவடிக்கைகளை எடுத்திருந்த போதிலும், நாட்டின் முழுமையான வங்கி மற்றும் கைத்தொழில்களிலும் தாக்கத்தை ஏற்படுத்திய எதிர்பாராத நிலைமைகள் காரணமாக வங்கியின் அசாத்தியமான நிதி சார் செயற்பாடுகளும் வீழ்ச்சி கொண்டுள்ளன. ஆண்டு பூராகவும் தங்க விலையின் பாதகமான ஏற்ற இறக்கம் அடகுத் துறையில் தசாப்தங்களாக நிலவிய மிருதுவான அறவீட்டு செயற்பாடுகளில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் விளைவாக வங்கி அடகு முற்பணங்களுக்கான மூலதன இழப்பு மற்றும் அடகு வட்டியில் நட்டத்திற்காகவும் ரூபா 792 மில்லியன் விஷேட ஒதுக்கம் செய்ய வேண்டியுள்ளது. இந்த நிலைமை இவ்வாண்டு பாதகமான விளைவை ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவாக வங்கியின் NPL விகிதம் 2012 இல் 4% உடன் ஒப்பிடுகையில் 2013இல் 7% வரை அதிகரித்துள்ளது.

கிளை வலைப்பின்னலை விரிவுபடுத்துவதற்கு இந்த ஆண்டில் கிழக்கில் களுவாஞ்சிக்குடி, கொக்கட்டிச்சோலை மற்றும் மூதூர் கிளை அத்துடன் மேல்மாகாணத்தில் களனி கிளை ஆகிய நான்கு புதிய கிளைகள் திறக்கப்பட்டுள்ளன.

## வைப்பு அடிப்படை

வங்கியின் வைப்பு அடிப்படை ரூபா 62.2 பில்லியன் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டுக்கு முரணாக இது 15% வளர்ச்சியை பிரதிநிதிப்படுத்துகின்றது. இவ்வாண்டு வங்கி ரூபா 3.6 பில்லியனால் சேமிப்பு வைப்புக்களை அதிகரிக்கக்கூடியதாக இருந்துள்ளது. நிலையான வைப்பு விகிதம் 62% இலிருந்து 61% ஆகக் குறைவடைகின்ற அதே வேளை 2012இல் 38% இலிருந்து 2013 இல் 39% வரை காலவைப்புக்கு எதிராக நாம் சேமிப்பு வைப்புக்கள் விகிதத்தை அதிகரிக்கக்கூடியதாக இருந்துள்ளோம். இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்ட "இதுறும் வாசனா" மற்றும் "திவிநெகும" ஆகிய விஷேட திட்டத்தை அமுல்படுத்தியதன் காரணமாகவே வங்கி இதனை அடைந்துள்ளது.

இவ்வாண்டு திவிநெகும சேமிப்புக்கள் ரூபா 2120 மில்லியன் வரை 408% ஆல் அதிகரித்துள்ளது. திவிநெகும கணக்கு வைத்திருப்போர் 591,666 கணக்குகளாக 184% ஆல் அதிகரித்துள்ளது.

## இலாபத் தன்மை

கடந்த ஆண்டு ரூபா 9515 மில்லியன் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் வங்கி ரூபா 10,995 மில்லியன் மொத்த வருமானத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளது. இது முன்னைய ஆண்டுக்கு எதிரிடையாக 16% வளர்ச்சியாகும்.

எவ்வாறாயினும் 12 மாதங்களுக்கு மேலாக அடகு முற்பணங்கள் தொடர்பாக அடகு வட்டி செயற்பாட்டிலில்லாத

அடகு முற்பணங்கள் பேரிலும் செய்யப்பட்ட ரூபா 348 மில்லியன் ஒதுக்கம் விஷேட கடன் நட்டத்தை உள்ளடக்கிய விஷேட ஒதுக்கம் ரூபா 792 மில்லியன் செய்ததன் காரணமாக வங்கியின் வரிக்கு முன்னர் இலாபம் ரூபா 687 மில்லியன் வரை குறைவடைந்துள்ளது. இந்த ஆண்டு ரூபா 444 மில்லியன் வருமானமாக எடுக்கப்படவில்லை.

## கடன்கள்

RDB யினால் வழங்கப்பட்ட கடன் திட்டங்கள் இலங்கையர்களை வலுவூட்டக்கூடியதாக உள்ளன. விவசாயம், மீன்பிடி, மற்றும்

சிறிய கைத்தொழில்கள் போன்ற முன்னுரிமைத் துறைகளுக்கு சிறிய கடன்கள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. அசைகின்ற பொருளாதாரத்துடன் துரிதமாக முன்னோக்கி நாடு நகர்கின்றது என்பதன் கருத்து இலக்கினைக் கொண்டுள்ள துறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் அத்தியாவசியமானதாகும். பிரதேச சங்வர்தன வங்கி எப்பொழுதும் விவசாயம், மீன்பிடி, விலங்கு வளர்ப்பு, சிறிய அளவு கைத்தொழிலாளர்கள், தொழிலதிபர்களுக்கு சலுகை விகிதங்களில் சலுகைக் கால அடிப்படையிலும் உதவிகள் வழங்கப்படுகின்றன.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வங்கியின் கடன்களும் முற்பணங்களும் ரூபா 60 பில்லியன் வரை 12% ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது. துறை ரீதியான வெளிப்பாட்டு மாற்றத்திற்குரிய விஷேட முயற்சியைக் கொடுத்துள்ளது. இந்த முயற்சியின் காரணமாக வங்கி விவசாயக் கடன்களை 2012இல் 13% இலிருந்து 2013இல் 15% வரை, கைத்தொழில் கடன்கள் 8% இலிருந்து 10% வரை வர்த்தக கடன்கள் 8% இலிருந்து 10% வீடமைப்புக்கடன்கள் 13% இலிருந்து 15% வரை அடகுக்கடன்கள் 44% இலிருந்து 31% வரை 2012இல் மொத்தக் கடன்களுக்குப் புறம்பாக அதிகரிக்கக் கூடியதாக இருந்துள்ளது. இந்த நிலைமை கீழேயுள்ள அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

முற்பணக்கூட்டு 2012




மேலும் கடன்பக்கத்தின் பகுப்பாய்வு வங்கியின் கடன் வாங்கும் தொழிற்பாடுகளின் அபிவிருத்தி தொடர்பாக மையப் பகுதியைத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றது.

முற்பணக்கூட்டு 2013




**அட்டவணை 01 நோக்கப் ரீதியில் வழங்கப்பட்ட கடன்கள் - 2013**

| துறை | கடன்களின் எண்ணிக்கை | % | பெறுமதி ரூபா மில்லியன் | % |
|---|---|---|---|---|
| விவசாயம் | 663,942 | 51.9 | 19,092.90 | 34.9 |
| விலங்கு வளர்ப்பு | 22,334 | 1.7 | 1,371.00 | 2.5 |
| மீன்பிடித்துறை | 16,626 | 1.3 | 703.9 | 1.3 |
| கைத்தொழில்கள் | 96,305 | 7.5 | 5,885.40 | 10.7 |
| வியாபாரம் வாணிபம் | 122,621 | 9.6 | 7,645.60 | 14.0 |
| வீடமைப்பு | 65,618 | 5.1 | 6,338.70 | 11.6 |
| நுகர்வு | 221,252 | 17.3 | 7,447.80 | 13.6 |
| ஏனையவை | 72,409 | 5.6 | 6,224.80 | 11.4 |
| மொத்தம் | 1,281,107 | 100 | 54,710.10 | 100 |

பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்ற விவசாயம், விலங்கு வளர்ப்பு, மீன்பிடி, கைத்தொழில்கள் போன்ற உற்பத்தி நோக்கங்களுக்கு அண்ணளவான கடன்களின் எண்ணிக்கையின் 72% மும் மொத்தகடன் தொகையின் 63.4% மும் கொடுக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக மேலே கலந்துரையாடப்பட்ட அபிவிருத்திகள் கீழேயுள்ள அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு வெளியீடுகளில் இடம்பெற்றுள்ளன.

| அட்டவணை 02 | புவியியல் விநியோக ரீதியாக வழங்கப்பட்ட கடன்கள் - 2013 | | | |
|---|---|---|---|---|
| | கடன்களின எண்ணிக்கை | % | பெறுமதி ரூபா மில்லியன | % |
| சபரகமுவ | 218,152 | 17.1 | 6,462.8 | 11.8 |
| ஊவா | 197,670 | 15.5 | 7,061.0 | 12.9 |
| மத்திய | 218,783 | 17.1 | 7,872.2 | 14.4 |
| தென் | 210,584 | 16.5 | 10,345.3 | 18.9 |
| வடமத்திய | 207,278 | 16.2 | 8,269.5 | 15.1 |
| வடமேல் | 151,550 | 11.8 | 9,602.9 | 17.6 |
| மேல் | 74,090 | 5.8 | 5,096.4 | 9.3 |
| **மொத்தம்** | **1,278,107** | **100.0** | **54,710.1** | **100.0** |

மேல் மாகாணத்தில் கடன்களின் எண்ணிக்கையின் 5.8% மற்றும் கடன்களின் பரிமாணத்திலான 9.3% மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது. மிகுதி அதாவது, கடன்களின் எண்ணிக்கையின் 94.2% அத்துடன் கடன்களின் பரிமாணத்தின் 90.7% பிரதேச அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்ற வெளியூர்களில் வழங்கப்பட்டுள்ளது. கடன் வழங்கும் செயற்பாடுகளின் குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் என்னவெனில் கடன்வாங்குவோர்களாக பெண்களின் மேலான பங்கெடுப்பாகும். கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளவாறு 2013ஆம் ஆண்டின் பொழுது பால் ரீதியான பகுப்பாய்வு கிட்டத்தட்ட மொத்த கடன்பெறுவோர் 1,278,107 பேரில் 677,396 பேர் பெண்கள் எனவும் மொத்த கடன்பெறுவோரில் கிட்டத்தட்ட 53% பெண்களின் பங்கேற்றலைப் பிரதிநிதிப்படுத்துகின்றது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆண் கடன்பெறுவோர் ரூபா 30,637.70 மில்லியனுடன் ஒப்பிடுகையில் பெண் கடன்பெறுவோரின் மொத்த எண்ணிக்கை ரூபா 24,072.40 மில்லியனாக இருந்துள்ளது.

| அட்டவணை 02 | வழங்கப்பட்ட கடன்களின் பால் ரீதியான விநியோகம்-2013 | | | |
|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | % | பெறுமதி ரூபா மில்லியன | % |
| ஆண் | 600,710 | 47 | 30,637.70 | 56 |
| பெண் | 677,396 | 53 | 24,072.40 | 44 |
| **மொத்தம்** | **1,278,107** | **100** | **54,710.10** | **100** |

வங்கி சேமிப்பு வைப்புக்களாக கடந்த பல ஆண்டுகளில் நகர்த்தப்பட்டது போன்று நகர்த்தப்பட்ட நிதியங்களைப் பயன்படுத்துவதற்கு மீள்நிதியங்கள் திட்டத்தினூடாக அதன் கடன் வழங்கும் செயற்பாடுகளுக்காக பதிலீட்டை அமுல்படுத்துகின்றது. அவ்வாறே இவ்வங்கி இலங்கை மத்திய வங்கி, அரசாங்கத்தால் தேசிய அபிவிருத்தி வங்கியினால் அமுல்படுத்தப்பட்ட 31 மீள்நிதிப்படுத்துகின்ற திட்டங்களில் பங்குபற்றுகின்றது. அவ்வாறே 2013இன் பொழுது கொடுக்கப்பட்ட 57,616 கடன் எண்ணிக்கைக்குப் புறம்பாக ரூபா 5,139.60 மில்லியன் தொகை மீள் நிதி வசதிகளைப் பெற்றுள்ளது. இது 2012இல் பெற்றுக்கொள்ளப்பட்ட மீள்நிதி வசதிகளுக்கு எதிரிடையாக 54.71% அதிகரிப்பைக்காட்டுகின்றது. இந்த ஆண்டுப் பகுதியில் வங்கி வர்த்தக ரீதியான அளவு பாற்பண்ணை அபிவிருத்தி கடன் திட்டத்துக்காக பங்கு கொள்ளும் வங்கியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கை மத்திய வங்கியினால் அமுல்படுத்தப்படுகின்றதுடன் SME திட்டத்தின் இரண்டாவது கட்டம் திறைசேரியினால் அமுல்படுத்தப் படுகின்றது. மேலும் வங்கி SME மற்றும் பசுமை சக்தி திட்டங்களின் நிதிக்காக மீள்நிதித்திட்டத்திற்கான பங்கெடுக்கும் வங்கியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் நிதி உதவியுடன் DFCC வங்கியினால் அமுல்படுத்தப்படுகின்றது.

எமது 2012 ஆண்டறிக்கையில் கலந்துரையாடப்பட்டது போன்று வங்கி சிறிய மற்றும் நடுத்தர நிறுவனத்துறைக்கு வங்கி பாரிய நிதி வழங்கும் தேவையைக் கொண்டுள்ளது. இந்த திட்டத்திற்கான நோக்குடன் வங்கியின் மாவட்ட அலுவலகங்களுடன் இணைந்து அர்ப்பணிக்கப்பட்ட SME நிலையங்கள் நிறுவும் பணியை ஆரம்பித்துள்ளது. அவ்வாறே மீளாய்வுக்குட்டபட்ட காலப்பகுதியில் 09 SME நிலையங்கள் நிறுவப்பட்டன. வங்கி 2014இல் மிகுதியாகவுள்ள 16 மாவட்டங்களில் SME நிலையங்கள் நிறுவுவதற்குத் தேவையான எல்லா ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்த SME நிலையங்களை நிருவகிப்பதற்கு விஷேடமாகப் பயிற்றுவிக்கப்பட்ட அதிகாரிகளை ஒதுக்குதல் அத்தியாவசியமானதாகும். இந்தத் தேவை கவனத்திற் கொள்ளப்பட்டு 2013 இல் 90 அதிகாரிகளுக்கு வதிவிட பயிற்சியளித்தல் வழங்கப்பட்டுள்ளது. பயிற்சியளித்தல் SME திட்ட மதிப்பீடு தொடர்பான எல்லா விடயங்களையும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.பயிற்றப்பட்ட அதிகாரிகள்மாவட்டங்களிலுள்ள SME நிலையங்களுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## மனித வள முகாமைத்துவம்

RDB யில் எமது ஊழியர் குழாம் நாட்டின் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்ற பொழுது வங்கியின் நோக்கு இலக்கு மற்றும் இலட்சியங்களை அடைந்து கொள்வதற்கான வலுப்பெற்ற அறிவு, திறமை மற்றும் ஆற்றல் கொண்ட ஊழியர் குழாமைக் கொண்டுள்ளது.

எமது குழு RDB 3000இற்கு மேற்பட்ட சக ஊழியர் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது

| | |
|---|---|
| நிரந்தர ஊழியர் குழாம் | 2,331 |
| ஒப்பந்த அடிப்படை ஊழியர் குழு | 104 |
| பயிலுநர்கள் | 704 |
| **மொத்தம்** | **3,139** |

சவால்களும் மாற்றமடைகின்ற நிதி அமைப்புக்களும் அதிகரித்து வருகின்ற காலப்பகுதியில் நன்கு பயிற்றப்பட்ட

மனித வளம் பிரதான இடம் வகித்துள்ளது என்பதை RDB என்றும் நம்பிக்கை கொண்டுள்ளது. இவ்வாறான போட்டி சுற்றாடலில் வெற்றி முடிவு உயர்தரமான மனித வள குழுவை இடம்பிடித்துள்ள நிதி நிறுவனங்களுக்குச் சொந்தமானதாகும். இந்த உண்மையை மனதிற் கொண்டு, RDB சரியான சிந்தனை மற்றும் தேர்ச்சியைக் கொண்டுள்ளவர்களை மாத்திரம் அதன் பதவி நிலைக்கு சேர்த்துக்கொள்கின்றது. மேலும் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் RDB யினால் நிறைவேற்றப்பட்டுள்ள பாரிய உயர்வுகளுக்குக்கூட வங்கியை இயங்கச்செய்யும் மிகத் தேவையான எதிர்பார்ப்புக்களை வழங்கக்கூடியதான மனித வள அபிருத்தியை மையமாகக் கொண்ட பல பயிற்சி மற்றும் அபிவிருத்தி முயற்சிகளைக் கொண்டுள்ளது. ஆறு பிரதேச மட்ட வங்கிகள் ஒருங்கிணைக்கப்படுவதற்கு முன்னரும், பிராந்திய வங்கிகள் வங்கி செயற்பாடுகளைக் கையாளுவதற்கு பயிலுனர்களைத் தொழிற்படச் செய்தன. இது வங்கியின் வளர்ச்சியை சீர்குலைத்தது மட்டுமன்றி ஊழியர்களின் அபிவிருத்தியையும் பாதிக்கச் செய்தது. ஆகவே வங்கி தொழிற்பாட்டுத் தேவைகளை உடனடியாக நிறைவேற்றுவதற்கு தேவையான திறமையும் சிந்தனையும் கொண்ட ஊழியர் வளத்திற்கு நிறுவுவதில் தீவிரமாகப் பங்கு கொண்டது.

RDB அதன் பல தடவைகளில் அதன் செயற்பாடுகளின் புறத்தோற்றம் மற்றும் வடிவை புதுப்பிக்க வேண்டியிருந்தது. புதிதாக மாற்றம் என்ற வகையில் 2010இல் பிரதேச மட்ட வங்கியிலிருந்து ஒரு தேசிய மட்ட வங்கியாக மாற்றத்தை ஏற்படுத்தியது. அத்துடன் மாற்றத்தைக் கையாளுவதற்கு சேர்த்துக் கொள்வதற்கும் தேவையான தேர்ச்சியும் கொண்ட தேவையான திறமைகள், அறிவு, தேர்ச்சி மற்றும் சரியான சிந்தனை வளம் பொருந்திய நன்கு பயிற்றப்பட்ட மனித வள குழுக்களை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நாட்டிலும் வெளிநாடுகளிலும் குறிப்பிட்ட செலவுடன் ஊழியர் பயிற்சிளித்தலை மையமாகக் கொண்ட நன்கு திட்டமிட்டு அமுல்படுத்துவதன் மூலம் இதனை அடையக்கூடியதாக இருந்துள்ளது. 2013 ஆம் ஆண்டின் பொழுது இந்த வங்கி 114 பேர் பங்கேற்ற 5 வெளிநாட்டு பயிற்சியளித்தல் செயற்திட்டங்கள் மற்றும் 1900 பேர் பங்கேற்ற 46 உள்ளூர் பயிற்சியாளர் செயற்திட்டங்களையும் நடாத்தியுள்ளது.

2013ஆம் ஆண்டுக்காக நடைபெற்றுவருகின்ற மனித வள நடைமுறை அபிவிருத்தி செயற்பாடு மற்றும் செயல்முறைகள் பொருத்தமான உள்ளக சக்தி மாற்றத்திற்குரிய மனித வள செயற்பாடுகளின் உள்ளடக்கம் மற்றும் ஆழத்தை விரிவுபடுத்தியுள்ளது.

**ஆண்டு ரீதியான ஊழியர் பகுப்பாய்வு**




**பால் ரீதியாக நிரந்தர மற்றும் ஒப்பந்த ஊழியர் அடிப்படை பகுப்பாய்வு**



## நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படை சேவை ஊழியர்களின் பகுப்பாய்வு




## மாகாண ரீதியாக நிரந்தர மற்றும் அடிப்படை ஒப்பந்த ஊழியர்களின் எண்ணிக்கை




## பயிலுனர்களின் பகுப்பாய்வு




## ஊழியர் பயிற்சியளித்தல்



# விஷேட நிகழ்வுகள்



அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகளை விநியோகித்தல்



## உயர் ரக விதைகளை வளர்த்தல்

பல ஆண்டுகளாக இலங்கை விவசாயிகள் முழுமையான பருவகாலத்தின் கடின உழைப்பின் பின்னர் நல்ல பயிர்களைப் பெற்றுக்கொள்வதில் கஷ்டங்களை எதிர்கொண்டிருந்தனர். இதற்கான பிரதான காரணங்களில் ஒன்று அவர்கள் குறைவான தர விதைகளைக் கொண்டே பயிர்ச்செய்கை மேற்கொண்டிருந்தமையேயாகும்.



விளைச்சலைப் பலனளிக்கக்கூடியதாக வங்கி விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து விவசாயிகளுக்கு இலவசமாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகளை விநியோகிப்பதற்கு ஒரு விஷேட திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இந்த விதை விநியோக திட்டத்திற்கு பெருந்தொகையான மக்கள் வருகை தந்திருந்தனர்.





# விஷேட நிகழ்வுகள்



*10,000* மக்கள் சந்திப்பு



### 10,000 மக்கள் சந்திப்பு (ஜனஹமு)

2013ஆம் ஆண்டு ஆரம்பத்தில், வங்கிக் கிளைகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்குட்பட்ட ஒவ்வொரு கிராமத்தினையும் உள்ளடக்கிய 10,000 மக்கள் சந்திப்புக்களை நடாத்துவதற்கு வங்கி இலக்கை கொண்டுள்ளது. இந்த இலக்கு ஆகஸ்டில் எமது ஊக்கமுள்ள ஊழியர்களினால் அடையப்பட்டது.



ஆண்டு முடிவில் பெறுபேறு ஊக்கமூட்ட கூடியதாக மொத்தம் பதினாறாயிரத்து இருபத்தாறு கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.



நான்கு இலட்சத்து தொன்னூற்று எட்டாயிரத்து எண்ணூறு மக்கள் கலந்து கொண்டனர். முந்நூற்றி முப்பத்து நாலாயிரத்து எழு நூற்று எண்பத்தெட்டு புதிய கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன. ஒரு பில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதேயளவில் முற்பணத் தொகை இந்த விஷேட திட்டத்திற்கு நன்றியுணர்வாக வழங்கப்பட்டுள்ளன.

# விஷேட நிகழ்வுகள்



## உலக சிறுவர் தின கொண்டாட்டம் 2013



### அறிவு மற்றும் நன்னடத்தைகளை வளர்த்தல்

2013 உலக சிறுவர் தினத்தைக் கொண்டாடுவதற்கு RDB கிளைகளில் விஷேட நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இந்த நிகழ்வுகள் வங்கிக்கு உறுதியான பலமூட்டக்கூடிய வகையில் சிறுவர்கள் மாத்திரமன்றி தமது பெற்றோர்களும் உறவினர்களும் உள்ளடக்கியதாக பெருந்திரளான மக்களும் இதில் கலந்துகொண்டனர்.



ஒவ்வொரு பிள்ளைக்கும் வங்கியினால் பரிசு வழங்கப்பட்டன. கல்வி சார்ந்த மற்றும் நகைச்சுவையான விளையாட்டுகளுக்கும் பல சிறுவர்கள் பரிசில்களை வெற்றனர்.





# விஷேட நிகழ்வுகள்



## ஹெல ஒசு சவிய



**சுதேச மருத்துவ செடிகளை வளர்த்தல் (ஹெல ஒசு சவிய)**

உள்ளூரில் மருத்துவ செடிகளை வளர்ப்பதற்குப் பொருத்தமான மண் வளம் இருந்த போதிலும் ஒவ்வொரு ஆண்டிலும் இலங்கை மூலிகை மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு பெருந்தொகையான பணத்தைச் செலவிடுகின்றது. உண்மையில், புராதன இலங்கையில் ரூமஸ்ஸல, சிங்கராஜ மற்றும் ஹல்துமுல்ல போன்ற ஏனைய பல அமைவிடங்களிலும் விசாலமான மற்றும் பிரசித்தம் வாய்ந்த மூலிகைத் தோட்டங்கள் காணப்பட்டன. இதன் வாய்ப்புக்களை இனம் கண்டுகொண்ட பிரதேச அபிவிருத்தி வங்கி மூலிகைகள் செடி நடுகையை மேம்படுத்துவதற்கு ஊவா மாகாண சபை மற்றும் ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களத்துடன் இணைந்து ஒரு விஷேட செயற்திட்டத்தை ஆரம்பித் துள்ளது.





400க்கு மேற்பட்ட உள்ளூர் வைத்தியர்களும், கிராமிய தொழில் முயற்சியாளர்களும் இச்செயற்திட்டத்தில் கலந்து கொண்டனர். பயிற்சியளித்தல், வழிகாட்டல் மற்றும் பயிரினங்களுக்கு உத்தரவாத விலைகள் போன்றே செயல்வழி முறை உள்ளடக்கப்பட்டதனால் இந் நோக்கத்திற்காக கடன் வழங்கலை விட மேலும் பல வசதிகள் வழங்கப்பபட்டன.



# விஷேட நிகழ்வுகள்




ரணவிரு கான்தா நிறுவன உரிமையாளர்கள் செயற்திட்டம் மற்றும் “சுபாவித கீதய”

### எமது தைரியம் மிக்க உள்ளங்களுக்கு நன்றி

சமாதானம் நிறைந்த இலங்கையை உருவாக்குவதற்கு 30 ஆண்டு கால யுத்தத்தின் பின்னர் கொடூர பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்கு மகத்தான அர்ப்பணிப்புச் செய்த எமது தாயகத்தின் உண்மையான வீரர்களைப் பற்றி நாம் அதிகம் பேசியுள்ளோம். ”ரணவிருவன்”என விருப்பத்துடனும், கௌரவமாகவும் அழைக்கப்படுகின்ற இந்த தைரிய உள்ளங்களுடன் RDB தொடர்ச்சியாக இணைந்துள்ளது.






RDB ரணவிரு அதிகார சபையுடன் இணைந்து சலுகைவட்டி விகிதத்தில் கடன்களை வழங்குவதற்கும் பல யுத்த வீரர்களின் விதவைகளுக்கு மிருதுவான பிணையை வழங்குவதற்கும் அவர்களை வெற்றிகரமான தொழில் அதிபர்களாக்குவதற்கும் மிக விஷேட செயற்திட்டங்களை ஆரம்பித்துள்ளது. மேலும் இவ்வங்கி “ரணவிருவன்” உள்ளடக்கிய குழுவின் மூலம் மேடை இசைக் கச்சேரியை “சுபவித்த கீத்தய” என்ற பெயரில் ஏற்பாடு செய்துள்ளது.

# விஷேட நிகழ்வுகள்



## யாய செயற்திட்டம்

### பாரிய அளவில் வளர்த்தல் - "யாய செயற்திட்டம்"



பாரிய அளவில் பயிர்ச்செய்கையில் ஆகக்கூடிய பயனை அடைந்து கொள்வதற்கு விவசாய சமுதாயங்களுக்கு உதவுவதற்கு வங்கியினால் "யாய செயற்திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பிரதேசத்தில் மிகப் பொருத்தமான பயிர்களைப் பயிரிடுவதற்கு பொருத்தமான பயிர்களைத் தேர்ந்தெடுப்பதிலிருந்து இந்த விஷேட விவசாயத்திட்டம் ஆரம்பமாகின்றது. திட்டம் மற்றும் அதன் முறை மற்றும் அமுலாக்கல் குறித்து கலந்துரையாடுவதற்காக கூட்டம் / செய்முறைப் பயிற்சிக்கு விவசாயிகள் அழைக்கப்படுகின்றனர் வங்கி அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகள் மற்றும் மூலதனத்தை ஒழுங்குபடுத்துகின்றது. பல இடர்பாடுகளை முன்னர் பெற்றுக்கொள்வதில் விவசாயிகளுக்காக இலாபகரமான தொழில் முயற்சியாகத் திகழ்கின்ற பயிர்ச்செய்கையை உறுதிப்படுத்துகின்ற நிர்ணயமான கொள்வனவாளருடன் விற்பனை உடன்படிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு வங்கி ஒழுங்குகளைச் செய்கின்றது. இந்தத் திட்டம் மேலும் பல புதிய தொழில் வாய்ப்புக்களை விருத்தி செய்கின்றது.









# விஷேட நிகழ்வுகள்



## சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு *2013*



## ஒற்றுமையில் வளர்ச்சி

இலங்கையில் சிங்கள தமிழ் புத்தாண்டு தமது குடும்ப அங்கத்தவர்கள் எல்லோரினதும் பங்கேற்புடன் இலங்கையர்களால் சம்பிரதாய பூர்வமாக கொண்டாடப்படுகின்றது. தமது மகன்மார், மகள்மார் மற்றும் பேரப்பிள்ளையிலிருந்து துாரத்தில் வாழ்கின்ற பெற்றோர்கள், பாட்டன் ஒன்றாகப் பண்டிகையைக் களிப்புடன் கொண்டாடுவதற்கு இப்பெறுமதி வாய்ந்த சந்தர்ப்பத்திற்காக ஆவலுடன் காத்திருக்கின்றனர். பிரதேச அபிவிருத்தி வங்கி 2013இல் சிங்கள தமிழ் புத்தாண்டைக் கொண்டாடுவதற்கு ஒரு வித்தியாசமான சிந்தனையை அறிமுகப்படுத்துகின்றது. ஓர் உண்மையான “தமிழ் சிங்கள புத்தாண்டாக்குவதற்கு ”ஒரே குடும்பமாக வழக்கமான கொண்டாட்டத்தின் ரசனையைப் பங்கு கொள்வதற்கு மல்லாவிக்கு கண்டி மாவட்டத்திலிருந்து இரண்டு பஸ்கள் நிரம்பிவழிய RDB வாடிக்கையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.







# புதிய கிளைகள் திறந்து வைக்கப்பட்ட போது....

| திகதி | கிளை பெயர் | முகவரி |
|---|---|---|
| 2013.01.30 | தலைமையகம் | இல.933, வெதமுல்ல, களனி. |
| 2013.03.14 | களுவாஞ்சிக்குடி | பிரதான வீதி, களுவாஞ்சிக்குடி |
| 2013.05.16 | கொக்கட்டிச்சோலை | பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை |
| 2013.08.15 | மூதூர் | 85/A, பிரதான வீதி மூதூர் |
| 2013.09.12 | போகஸ்வெவ | 24, போகஸ்வெவ-2 |



**கொக்கட்டிச்சோலை கிளை**

கொக்கட்டிச்சோலை கிளை மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் கௌரவ விநாயகமூர்த்தி முரளிதரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



**களனி கிளை**

RDB யின் தலைமையகம் மற்றும் தலைமை காரியாலய கிளை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ரோஹண ராஜபக்ஸ அவர்களினால் திறந்து வைக்க்ப்பட்டது.



**மூதூர் கிளை**

மூதூர் கிளை கிழக்கு மாகாண முதலமைச்சர் கௌரவ நஜீப் அப்துல் மஜீத் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.



**களுவாஞ்சிக்குடி கிளை**

களுவாஞ்சிக்குடி கிளை மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் கௌரவ விநாயகமூர்த்தி முரளிதரன் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.



**போகஸ்வெவ கிளை**

போகஸ்வெவ கிளை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் உதித்தலொக்குபண்டார அவர்களினால் திறந்துவைக்கப்பட்டது.

# கிளை மீளமைத்தல்

| திகதி | கிளை | அமைவிடம் |
|---|---|---|
| 2013.01.07 | தம்புத்தேகம | இல.35, குருநாகல் வீதி தம்புத்தேகம |
| 2013.02.01 | ஹிக்கடுவ | இல.35, பத்தேகம வீதி ஹிக்கடுவ |
| 2013.03.27 | கெக்கிராவ | இல.65/3, மரதன்கடவல வீதி கெக்கிராவ |
| 2013.04.02 | மாத்தளை | இல.62, ரஜ வீதி, மாத்தளை |
| 2013.04.08 | பொத்துபிட்டிய | கலாவான வீதி, பொத்துபிட்டிய சந்தி |
| 2013.04.11 | மொரென்துடுவ | இல.65, வாத்துவ வீதி மொரென்துடுவ |
| 2013.06.03 | அகலவத்தை | இல.05, களுத்துறை வீதி, அகலவத்தை |
| 2013.06.06 | மெனிக்ஹின்ன | இல.35/1, கண்டி வீதி மெனிக்ஹின்ன |
| 2013.07.15 | கொட்டியாக்கும்புர | இல.9/1, பிரதான வீதி, கொட்டியாக்கும்புர |
| 2013.07.29 | புளத்கொஹுபிட்டிய | கேகாலை வீதி, புளத்கொஹுபிட்டிய |
| 2013.08.19 | மினுவன்கொடை | இல.74, வேயன்கொட வீதி, மினுவன்கொடை |
| 2013.09.16 | ஆனமடுவ | இல.43, நவகத்தேகம வீதி, ஆனமடுவ |
| 2013.10.01 | நிவித்திகல | இல.19, கலாவான வீதி, நிவித்திகல |
| 2013.10.08 | மொரயாய | இல.551, மொரயாய மினிப்பே |
| 2013.10.14 | ஹப்புத்தளை | மாநகர கட்டடம், ஸ்டேசன் வீதி, ஹப்புத்தளை |
| 2013.10.17 | மொரகஹஹேன | இல.647, ஹொரன வீதி, மொரகஹஹேன |
| 2013.10.28 | கோணபத்திராவ | சேனபுர வீதி கோனபத்திராவ |
| 2013.11.25 | பொல்பித்திகம | குருநாகல் வீதி, பொல்பித்திகம |



**தம்புத்தேகம கிளை**
பிரதம அதிதி, பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி ரத்னசிறி சிறிவர்தன



**மொரயாய கிளை**
பிரதம அதிதி, ஆளுனர் மத்திய மாகாணம் கௌரவ டிக்கிரி கொப்பேகடுவ



**SME நிலைய திறப்பு**
மேல்மாகாண அலுவலகம்

# கூட்டுறவு சமூக பொறுப்பு



## சுத்தமான பால் நுகர்வை மேம்படுத்துதல்





### சுத்தமான பால் மேம்பாடு

RDB வங்கி 2013இலும் தொடர்ச்சியாக விற்பனை நிலையங்கள் திறத்தல், சந்தை வாய்ப்புக்களை கண்டறிதல், வருமானத்தைப் பெருக்குவதற்கு விஷேட பயிற்சியளித்தல், பாற்பண்ணையாளர்களுக்கு உதவுவதன் மூலம் சுத்தமான பால் பாவனையை மேம்படுத்துகின்றது.







# கூட்டுறவு சமூக பொறுப்பு



வீட்டுத்தோட்டம்
(RDB கேவத்து வகா செயற்திட்டம்)



## வீட்டுத்தோட்ட செயற்திட்டம்

தேசம் பூராகவும் வீட்டுத்தோட்டத்தைப் பிரபல்யப்படுத்துவதற்கு "RDB கேவத்து வகா செயற்திட்டம்" என்ற விஷேட திட்ட அடையாளத்தை பிரதேச அபிவிருத்தி வங்கி ஆரம்பித்துள்ளது. மேலதிக வருமானங்கள் போன்று தினசரி சுத்தமான உணவுத் தேவைகளை அவர்களுக்கு வழங்குவதற்குரிய வெற்றிகரமான வீட்டுத்தோட்டத்தை நிறுவுவது எப்படி என்பதைப் படிப்பதற்கு RDB விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து நடாத்தப்பட்ட விஷேட பயிற்சியளித்தல் செயற்திட்டத்தில் நாட்டின் எல்லாப் பாகங்களையும் பிரதி நிதிப்படுத்தி பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் கலந்து கொண்டனர். பொருத்தமான வீட்டுத்தோட்டம் பல்வேறு மரக்கறிகள் மற்றும் பழத்தோட்டங்கள் மட்டுமன்றி ஒரு அல்லது சில பலா மரங்கள், தென்னை மரங்கள், ஏனைய சில பொருளாதார ரீதியாகப் பயன்படக்கூடிய பிரயோசனமான மரங்கள் உயிர் வேலி, ஒரு சிறிய கோழிப் பண்ணை மற்றும் மாட்டுத் தொழுவம் என்பவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். எண்ணாயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தாறு வீட்டுத்தோட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் 25 வீட்டுத் தோட்டக்காரர்கள் ஒரு விஷேட அனுபவ பகிர்ந்தளிக்கும் செயற்திட்டத்திற்காக வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.









"RDB யின் உதவியுடன் முழு நாட்டுக்கும் நாம் தானியங்களை வழங்கக்கூடியதாக இருந்துள்ளோம்......."



# உற்பத்திகளும் சேவைகளும்

# உற்பத்திகளும் சேவைகளும்

## சேமிப்புக் கணக்குகள் / முதலீடு

### *RDB* கெகுலு (சிறுவர் சேமிப்பு கணக்கு)

சேமிப்புத் திட்டங்கள் 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளுக்காக பரவலாக வடிவமைக்கப்பட்டுள்ளது. "RDB கெகுலு" கணக்கு ஒன்றைத் திறப்பதற்கான பிள்ளையின் பிரகாசமான எதிர்காலத்திற்காக RDB உடன் சேமிக்கக்கூடியதாகவுள்ளது. ஆரம்ப வைப்பு ரூபா 100 ஆகும். எமது தாய் நாட்டிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் பிரகாசமான எதிர்காலத்திற்காக RDB உடன் சேமிக்க கூடியதாகவுள்ளது. ஒவ்வொரு கணக்கு திறக்கப்படுகின்ற வரை RDBயின் புதிய சேமிப்புக்கள் கவர்ச்சிகரமானதாகும். மேலும் கணக்குகளின் மிகுதிகளின் பல்வேறு மட்டங்களில் பேனாக்கள், குவளைகள், நீர்போத்தல்கள், பாடசாலை புத்தகப்பைகள், கைக்கடிகாரம், மவுன்டன் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பல்வேறு மட்டங்களில் நன்கொடை, வவுச்சர்கள் போன்றவை இத்திட்டத்தினால் பல தொடரான நன்கொடைகளாக வழங்கப்படுகின்றன. கணக்கின் வடிவமைப்பு மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவை பிள்ளைகளின் எதிர்கால நலன்களுக்காக சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளன. கல்விசார் கருத்தரங்குகள், பரீட்சைத் திறமைச் சித்திகள் தொடர்பாக வெகுமதி வழங்கியும் ஊக்குவிக்கப்படுகின்றது.




### *RDB* யொவுன் (சேமிப்பு கணக்கு)

இந்தக் கணக்கு விஷேடமாக 12 மற்றும் 17 வயதுக்கிடைப்பட்டோருக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கணக்கைத் திறப்பதற்குத் தேவையான ஆகக் குறைந்த தொகை ரூபா 500 ஆகும். சாதாரண சேமிப்பு வட்டியை விட இக்கணக்கிற்கு ஆகக்கூடிய வட்டித் தொகை பொருத்தமானதாகும். இந்தத் திட்டத்தின் கீழ் கணக்கு வைத்திருப்போர் பல்வேறு கணக்கு மிகுதிகளில் பல நன்கொடைகளைப் பெற்றுக்கொள்கின்றனர். மேலும் பிரதேச அபிவிருத்தி வங்கி க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தோற்றுகின்ற RDB யொவுன் கணக்கு வைத்திருப்போருக்காக விஷேட கருத்தரங்குகள் மற்றும் ஊக்குவிப்புச் செயற்திட்டங்களையும் நடாத்துகின்றது.




### *RDB* சுப மங்களம்




அவரது அல்லது அவளது திருமணம் போன்ற முக்கிய நோக்கங்களுக்காக மொத்தமாக அல்லது சிறிய கணக்குகளில் ஒழுங்காக முதலீடு செய்ய விரும்புகின்றவர்களுக்கான ஒத்த தன்மையான சேமிப்புக்

கணக்காகும். இந்த சந்தர்ப்பங்களில் “சுப மங்களம் கணக்கு” வைத்திருப்போர் உயர் வட்டி அத்துடன் ஈட்டிய வட்டி மீது 7% விஷேட போணஸ் வட்டியும் பெற்றுக்கொள்கின்றனர்.

## RDB லிய சவிய




இலங்கையில் ஊக்கமுள்ள பெண்களை இலக்காகக் கொண்டே “RDB லியசவிய” அறிமுகப்படுத்தப்பட்டது. இது நிதி உதவிகளை மட்டுமன்றி சுயதொழில் வாய்ப்பினூடாக நாட்டின் பொருளாதாரத்துக்கு பங்களிப்புச் செய்கின்ற பெண்களுக்கு ஆலோசனை சேவைகளை வழங்குகின்றது. இந்தக் கணக்கிலுள்ள விஷேட சிறப்பம்சம் என்னவெனில் உயர்ந்த வட்டி வீதம், போனஸ் வட்டி மற்றும் போட்டி வட்டி வீதங்களுக்கான முற்பணங்கள் என்பனவாகும்.

## RDB திவிநெகும




2012 பெப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்ட “RDB திவிநெகும” சேமிப்புக் கணக்கு குறுகிய இரண்டு ஆண்டுகளுக்குள் ஆறு இலட்சத்துக்கு மேற்பட்ட தனிப்பட்ட எமது வாடிக்கையார்களைக் கொண்டிருந்ததனால் துரிதமாக வளர்ச்சியடைந்து வருகின்ற சேமிப்புக்களில் ஒன்றாக விளங்கியது. இந்த உற்பத்திக்காக வழங்கப்பட்ட கவர்ச்சிகரமான வட்டி வீதம் அத்துடன் “RDB திவி நெகும” கணக்குடன் தொடர்புபட்ட கடன் திட்டங்கள் உழைப்பதற்கும் சேமிப்பதற்கும் விரும்புகின்றவர்களுக்கு இது ஓர் உந்து சக்தியாகும்.

## RDB தொரின் தொர

இது RDB யின் கொடியின் கீழுள்ள உற்பத்தி / சேவையாகும். தினசரி வேலையாக வாடிக்கையாளரிடம் விஜயம் செய்கின்ற அர்ப்பணிக்கப்பட்ட முகவர்களினூடாக செயற்படுகின்ற தினசரி சேகரிப்பு முறையாக இருக்கின்றது. ஒழுங்காக விஜயம் செய்தல் இலக்கினைக் கொண்டுள்ள பிரிவுகளுக்கு பாரிய நிவாரணத்தை வழங்குகின்றது. அத்துடன் தமது வங்கி கொடுக்கல் வாங்கல்களுக்காக மீண்டும் மீண்டும் கிளைகளுக்கு விஜயம் செய்கின்ற நேரத்தை தமது வைப்புச் செலவைச் சேமிக்கக்கூடியதாக உள்ளது. “தொரின் தொர” சேவை அபிவிருத்தித் திட்டங்களுக்கு கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு வாடிக்கையாளர்களுக்கு உதவுகின்றது. இந்த சேவை பல சிறிய அளவு தொழில் முயற்சியாளர்களுக்கு மற்றும் தனிப்பட்டவர்களையும் ஊக்குவிக்கின்றது. “வலுவூட்டும் இலங்கையர்கள்” என்ற வங்கியின் நோக்கை நிறைவேற்றுவதற்கு இந்த சேவை வழிவகுக்கின்றது.




## RDB இதுறும் வாசனா

“RDB இதுறும் வாசனா” என்று அடையாளப்படுத்தப்பட்ட புதிய சேமிப்புத் திட்டம் 3 மாத காலத்திற்கு சேமிப்பு கணக்கில் ஆகக் குறைந்த மிகுதி ரூபா 2,500 ஐ நிருவகிக்க முடியுமான உத்தேச கணக்கு வைத்திருப்போருக்கு புத்தம் புதிய வாகனங்களை வழங்குதல் 2013 ஆகஸ்டில் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கட்டம் ஒன்று செப்டம்பர் 30ஆம் திகதி வெற்றிகரமாக முடிவடைந்தது. அத்துடன் இரண்டாவது கட்டம் வருடத்தின் கடைசி காலாண்டுக்காக பல பரிசுகளுடன் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.




## RDB சிரேஷ்ட பிரஜைகள் (வயது வந்தோர்) சேமிப்புக் கணக்கு

பிரதேச அபிவிருத்தி வங்கி சந்தையில் போட்டி வட்டி வீதங்களை வழங்குகின்றது. ஆரம்ப வைப்பு ரூபா 500 உடன் 18 வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு தனி நபரும் வயது வந்தோருக்கான சேமிப்புக் கணக்கு ஒன்றைத் திறப்பதற்கு தகுதியுடையோராவார். சிரேஷ்ட பிரஜைகள் தமது முதலீடுகளுக்கு உயர்ந்த வட்டி வீதம் பெறுகின்றனர்.




## RDB நிலையான வைப்புக்கள்

1 முதல் 5 ஆண்டுகள் 1,2,3, மற்றும் 6மாத காலப்பகுதிக்கு 1 வருடம் மற்றும் அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு முதிர்ச்சிக் காலத்துடன் நிலையான வைப்புகளுக்காக RDB யினால் மிகக்கவர்ச்சிகரமான வட்டி வழங்கப்படுகின்றது.

## வெஸ்டன் யூனியன் பணப்பரிமாற்று சேவைகள்

வெஸ்டன் யூனியன் ஊடாக கிராமப்புறங்களிலும் நகரத்திலும் பரவலாக அமைக்கப்பட்டுள்ள RDB அனைத்து கிளைகள் ஊடாகவும் எமது நாட்டுக்கு வெளிநாடுகளிலிருந்து நிதிகளை மாற்றம் செய்வதற்கான மற்றுமோர் சுலபமான மற்றும் துரிதமான வழியாகும்.



"ஏனெனில் RDB வங்கி எப்பொழுதும் எம்முடன் இருந்ததினால், எமது அயராத முயற்சிகளுக்கு ஆகக் கூடிய பயனை அடைய முடியுமாக இருந்துள்ளோம்...."





# இடர் முகாமைத்துவம்

# இடர் முகாமைத்துவம்

வங்கி 2011ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் ஓர் இடர் முகாமைத்துவத்தை நிருவகித்துள்ளது. அத்துடன் கடந்த இரண்டு ஆண்டுகளில் இவ்வங்கி வங்கியினுள் பரவலான இடர் முகாமைத்துவ கட்டமைப்பை நிறுவுவதற்கு அதன் உள்ளடக்கம் மற்றும் ஆற்றலை அபிவிருத்தி செய்துள்ளதுடன் பலப்படுத்தியுமுள்ளது. தற்பொழுது வங்கிக்காக ஒரு சுயேட்சையான இடர் முகாமைத்துவ கட்டமைப்பு கிடைக்கக்கூடியதாகவுள்ளது. இது தொழிற்பாட்டு ரீதியாக உள்ளக இடர்முகாமைத்துவ குழுவுக்கு (IRMC) அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றது.

எமது முழுமையான இடர்முகாமைத்துவ செயற்பாடும் செயற்பாட்டு ரீதியான யுக்திகள், வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை உள்ளடக்கிய 3 பாதுகாப்பு எண்ணக்கரு மார்க்கங்களை உள்ளடக்கியுள்ளது. அத்துடன் உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வு மற்றும் தொழிற்பாடுகள் இணைக்கப்பாட்டினூடாக எல்லைகளைச் சீராக்குகின்றது. மேலும், வங்கி திறமையான முறையில் வங்கியின் இயற்கையான இடர்பாடுகளைக் கண்காணிப்பதற்கு, மதிப்பிடுவதற்கு மற்றும் முகாமைத்துவப்படுத்துவதற்கு பல குழுக்களை ஸ்தாபித்துள்ளது.

வங்கியினால் அதன் வியாபார செயற்பாட்டை அனுபவ ரீதியாக இடர்பாட்டை இனம் காண்பதற்கு, மதிப்பிடுவதற்கு முகாமைத்துவப்படுத்துவதற்கும் கீழ்காணும் சபை மற்றும் முகாமைத்துவ மட்ட குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

- ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக்குழு (IRMC)
- கணக்காய்வுக்குழு (AC)
- சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழு (ALCO)
- செயற்பாட்டு ரீதியான இடர்முகாமைத்துவ உப குழு(ERMC)
- கடன் இடர்முகாமைத்துவக் குழு (CRC)

## வங்கியின் இடர்பாட்டை அறிவிக்கும் முறை

வங்கி அதன் வியாபார செயற்பாடுகளின் இடர்பாடுகளை மதிப்பிடுவதற்கு, கண்காணிப்பதற்கும் நிருவகிப்பதற்கும் ஏற்கனவே கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை ஸ்தாபித்துள்ளது. கடந்த ஆண்டில் பணிப்பாளர் சபையின் (BOD) யின் அங்கீகாரத்துடன் இடர்முகாமைத்துவக் குழு (RMD) கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மீள்நோக்கியுள்ளது. RMD ஏனைய வங்கிகளைப் பின்பற்றி போதியளவு மூலதனம் குறித்து அழுத்த பரிசீலனை நிறைவேற்றுவதற்கு BOD க்கு மாதாந்த பிரதான இடர்குறியீட்டை (KRIs) சமர்ப்பித்தல் போன்ற ஒழுங்கமைப்பாளரினால் வழிகாட்டப்பட்டவாறு மிகச்சிறந்த செயற்பாடுகளைச் சேர்த்தல், அவதான இடர்பாடு மதிப்பீடு பக்க இடர்பாடு அதனை IRMCக்கு அறிவித்தல் முதலியனவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

BODக்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த KRIs கடன், செயற்பாடு, வட்டி வீதம் மற்றும் திரவ நிலை தொடர்பான சாத்தியமான இடர்பாட்டுப் பகுதிகளை உள்ளடக்குகின்றது. RDB முகாமைத்துவக்குழு கிடைக்கக் கூடியதான வளங்கள் மற்றும் தரவு அடிப்படையில் காலாண்டு அடிப்படையில் IRMCக்கு பரவலான இடர்பாட்டு மதிப்பீடு அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றது. IRMC அறிக்கை வங்கியின் முழுமையான வியாபாரம் தொடர்பாக முன்னர் கிடைக்கப்பட்ட பகுப்பாய்வை உள்ளடக்குகின்றது.

## கடன் இடர்பாடு முகாமைத்துவம்

வங்கி அதன் வியாபார செயற்பாடுகளின் இடர்பாடுகளை மதிப்பிடுவதற்கு, கண்காணிப்பதற்கும் நிருவகிப்பதற்கும் ஏற்கனவே கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை ஸ்தாபித்துள்ளது. கடந்த ஆண்டில் பணிப்பாளர் சபையின் (BOD) யின் அங்கீகாரத்துடன் இடர்முகாமைத்துவக் குழு (RMD) கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மீள்நோக்கியுள்ளது. RMD ஏனைய வங்கிகளைப் பின்பற்றி போதியளவு மூலதனம் குறித்து அழுத்த பரிசீலனை நிறைவேற்றுவதற்கு BODக்கு மாதாந்த பிரதான இடர்குறியீட்டை (KRIs) சமர்ப்பித்தல் போன்ற ஒழுங்கமைப்பாளரினால் வழிகாட்டப்பட்டவாறு மிகச் சிறந்த செயற்பாடுகளைச் சேர்த்தல், அவதான இடர்பாடு மதிப்பீடு பக்க இடர்பாடு அதனை IRMCக்கு அறிவித்தல் முதலியனவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

BODக்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த KRIs கடன், செயற் பாடு, வட்டி வீதம் மற்றும் திரவ நிலை தொடர்பான சாத்தியமான இடர்பாட்டுப் பகுதிகளை உள்ளடக்குகின்றது. RDB முகாமைத்துவக்குழு கிடைக்கக்கூடியதான வளங்கள் மற்றும் தரவு அடிப்படையில் காலாண்டு அடிப்படையில் IRMCக்கு பரவலான இடர்பாட்டு மதிப்பீடு அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றது. IRMC அறிக்கை வங்கியின் முழுமையான வியாபாரம் தொடர்பாக முன்னர் கிடைக்கப்பட்ட பகுப்பாய்வை உள்ளடக்குகின்றது.

## கடன் இடர்பாடு முகாமைத்துவம்

வரைவிலக்கணத்தின் மூலம், கடன் இடர்பாடு என்பது வட்டிக்கு விட்ட தொகை கடன் பெற்றோரால் செலுத்த முடியாது போகின்ற இடர்பாடு அல்லது நிதிசார் வெகுமதி இழப்பு போன்ற அல்லது ஒப்பந்த ரீதியான கடமைப்பாடுகளை எதிர்கொள்கின்ற இடர்பாடுகளாகும்.

| துறை | 2012-டிசம்பர் | | | 2013-டிசம்பர் | | |
|---|---|---|---|---|---|---|
| | சரியான வீதம | அங்கீகரிக்கப்பட்ட எல்லை | மாற்றம் | சரியான வீதம் | அங்கீகரிக்கப்பட்ட எல்லை | மாற்றம் |
| விவசாயம் | 25.15 | 30 | (4.85) | 24.09 | 30 | (5.91) |
| விலங்கு வளர்ப்பு | 1.76 | 20 | (18.24) | 2.29 | 20 | (17.71) |
| கைத்தொழில் (SME) | 16.79 | 15 | 1.79 | 21.70 | 15 | 6.70 |
| வியாபாரம், சேவைகள் | 0.49 | 10 | (9.51) | 0.33 | 10 | (9.67) |
| வீடமைப்பு | 13.9 | 10 | 3.9 | 16.00 | 10 | 6.00 |
| நுகர்வு | 31.83 | 5 | 26.83 | 23.60 | 5 | 18.60 |
| ஏனைய முன்னுரிமை | 8.12 | 7 | 1.12 | 10.13 | 7 | 3.13 |
| ஊழியர் குழாம் | 1.96 | 3 | (1.04) | 1.86 | 3 | (1.14) |

எல்லா பெறுமானங்களும் வீதங்களில்

இலங்கையிலுள்ள முக்கியமான அபிவிருத்தி என்ற முறையில் கடன் வழங்கும் வியாபாரத்துறையில் நாம் நேரடியாக சார்ந்துள்ளோம். இதன் விளைவாக இடர்பாடு குறைபாடு, அவதானித்தல் இடர்பாடு கூட்டு பெறுமானம் குறைவடைதல் முதலான கடன் இடர்பாடுகளுக்கும் நாம் முகம் கொடுத்துள்ளோம்.

உறுதியான கடன் இடர்பாட்டு முகாமைத்துவத்திற்காக RDB கடனில் சார்ந்துள்ள ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களில் கடன் இடர்பாட்டை இனம் காணுதல், கண்காணித்தல், மதிப்பிடுதல் மற்றும் கடன் இடர்பாட்டைக்குறைத்தல் போன்ற அடிப்படையான கடன் மதிப்பீட்டுச் செயற்பாட்டைப் பின்பற்றியுள்ளது. கடன் இடர்பாட்டைக் குறைக்கக் கூடிய வகையில் RDB எப்பொழுதும் தரமான சேகரிப்பு முறை காலத்திற்குக்காலம் கடன் குழு மதிப்பீடு அடகு, தோட்டங்கள் மற்றும் வதிவிட சொத்துக்கள் பொருட்பட்டியல், வியாபார பெறவேண்டியவை மற்றும் ஆளணி உத்தரவாதங்கள் போன்றவற்றின் நியாயமான பெறுமதியை மீள்மதிப்பிடுகின்றது.

2013ஆம் ஆண்டில் வங்கியின் மொத்த கடன் வெளிப்பாடு வங்கியின் மொத்த சொத்துக்கள் அடிப்படையின் 74.24% ஆகும். ஆகவே கடன் இடர்பாடு பாரிய இடர்பாட்டு வகையாகும். வங்கி அதன் வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்குவதிலிருந்து எழுகின்ற கடன் இடர்பாட்டை மையமாகக்கொண்டுள்ளது.

## துறை ரீதியான கடன் வெளிப்பாடு

வங்கியின் கடன் இடர்பாட்டுக்கொள்கை பக்கத்தின் ஒவ்வொரு துறைக்கும் ஆகக்கூடிய துறை ரீதியான வெளிப்பாட்டை அனுமதிக்கின்ற MOD யினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2013டிசம்பர் முடிவில் வங்கி கடன் ஏட்டின் CBSL வழிகாட்டலுக்கமைய அறியப்பட்டுள்ள துறை ரீதியான வெளிப்பாட்டுக்கு அமைய அனுமதிக்கப்பட்ட எல்லைகளுக்கு எதிராக துறை ரீதியான அவதானிப்பின் ஒப்பீடு கீழே விவரிக்கப்படுகின்றது. எல்லாத் தரவுகளும் வீதத்தில் உள்ளன.

மேற்கூறப்பட்ட ஒப்பீட்டுக்கு அமைய, 2013 ஆண்டின் பொழுது அடகு முற்பணத்தின் மாற்றத்தில் குறைந்து வருகின்ற போக்கை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. RDBயின் பிரதான நோக்கம் நாட்டின் பிரதேச அபிவிருத்தியாகும் அத்துடன் பிரதானமாக விவசாயம் மற்றும் SME துறைகளை மையமாகக் கொண்டுள்ளது. மேலும் இலங்கை அபிவிருத்தி அடைந்து வருகின்ற பொருளாதாரம் என்ற வகையில் அரசாங்கத்துடன் அரசாங்கம் மற்றும் SME துறை அபிவிருத்தி தொடர்பான அவதானிப்பு தவிர்க்க முடியாததாகும். அவதான இடர்பாட்டை கருத்திற் கொண்டு வங்கி காப்புறுதிக் கொள்கைகள் ஊடாகவும் போதிய எல்லையுடன் அசையக் கூடிய பிணைகளைப் பெற்றுக் கொள்வதினூடாகவும் அத்துறைகள் மீதான எமது இடர்பாட்டின் ஒரு பகுதியை மாற்றுவதன் மூலம் அவதானத்தைக் குறைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

## முற்பண ஏட்டின் பிரதேச ரீதியான அவதானிப்பு




| | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|
| மேல் | 14.25% | 14.97% | 16.45% |
| மத்திய | 11.75% | 12.22% | 12.01% |
| தென் | 21.16% | 19.75% | 18.18% |
| ஊவா | 10.77% | 11.37% | 11.54% |
| சபரகமுவ | 12.49% | 12.67% | 12.20% |
| வட மத்திய | 12.14% | 12.10% | 11.83% |
| வட மேல் | 17.45% | 16.92% | 17.79% |

பிராந்தியங்களுக்கிடையிலான கடன்கள் மற்றும் முற்பணங்களின் விநியோகம் மீதான பகுப்பாய்வு வடமேல் பிராந்தியத்தைப் பின் தொடர்ந்து வருகின்ற உயர் விநியோகத்தைப் பிரதிநிதிப்படுத்துகின்றது.

## 2013 முடிவில் கடன் முற்பணத்தின் கால ரீதியான அவதானிப்பு




### அவதான இடர்பாடு

கடனின் அவதானம் பக்க இடர்பாட்டை இனம் காண்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பிரதான தொழில்நுட்பமாகும். துறை ரீதியாக மற்றும் உற்பத்தி ரீதியாக அவதானத்தை மதிப்பிடுவதற்கு நாம் Herfindahl Harschnam Index (HHI) சுட்டெண்ணை பயன்படுத்துகின்றோம். HHI பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிவிபர ரீதியான மதிப்பீட்டு முறையாகும்.

வழமையாக பெருந்தொகையான பங்களிப்போருடன் நன்கு திருத்தப்பட்ட பக்கம் பூச்சியத்துக்குக் கிட்டிய HHI பெறுமானத்தைக் கொண்டிருக்கும்.

2012-2013 வரையிலான காலப்பகுதியில் கடன்கள் மற்றும் துறை ரீதியாக அவதான இடர்பாட்டில் சுட்டெண் குறைவைக் காட்டுகின்றது. மொத்த HHI குறைப்பு பிரதானமாக அடகு முற்பணங்களில் அவதானம் வீழ்ச்சி காரணமாவேயாகும்

| துறைகள் | HHI | |
|---|---|---|
| | 2012-டிசம்பர் | 2013-டிசம்பர் |
| விவசாயம் மற்றும் மீன்பிடி | 0.018 | 0.026 |
| உற்பத்தி | 0.028 | 0.047 |
| போக்குவரத்து | 0.000 | 0.000 |
| நிருமானம் | 0.022 | 0.029 |
| ஏனைய வாடிக்கையாளர்கள்* | 0.298 | 0.200 |
| மொத்தம் | 0.366 | 0.303 |

அடகு முற்பணங்கள் உட்பட

### கடன் தரம்

2013 முடிவில், வங்கியின் செயற்படாத முற்பணங்கள் (NPAவிகிதம் 7.30% ஆக இருந்துள்ளது. வங்கியின் செயற்படாத அடகு வைக்கும் பக்கம் அதிகரிப்பு காரணமாக இவ்வருடத்தில் அதிகரித்துள்ளது.

உண்மையான விகிதத்தில் 2013 டிசம்பருக்கான NPA கூட்டுத்தொகை ரூபா 4.387 பில்லியனாக இருந்துள்ளது. முன்னைய ஆண்டில் இத்தொகை ரூபா 2.330 பில்லியன் ஆகும். இது ரூபா 2.057 அதிகரிப்பைக் காட்டுகின்றது. இதற்குப் புறம்பாக செயற்படாத அடகு முற்பணங்கள் தொகை ரூபா 1.874 பில்லியன் ஆகும்.

## NPA விகிதம்




## 2013 டிசம்பரில் NPA உள்ளடக்கம்




### அழுத்தம் பரிசோதனை

ஒழுங்குபடுத்துவோரால் வழங்கப்பட்ட பணிப்புரைக்கமைய, வருட முடிவில் வங்கியின் NPL தொடர்பான அழுத்தம் பரிசோதனை RMD யினால் மேற்கொள்ளப்பட்டது. அழுத்த பரிசோதனைக்கான NPL இன் அதிர்ச்சி அளவை நிர்ணயித்தல் அழுத்த பரிசோதனைக் கொள்கை சபையின் அங்கீகாரத்துக்கமைய இடம்பெற்றது.

| செயற்படாத முற்பணப் பக்கம் | போதிய மூலதன வீதம் (CAR) | நிலை 01 | நிலை 02 | நிலை 03 |
|---|---|---|---|---|
| அதிர்ச்சியின் பருமன் | - | 4% | 5% | 6% |
| நேரடியான இழப்பு பிரிவு | 9.21% | 6.27% | 6.17% | 6.08% |
| எல்லாப் பிரிவினுள் அதிர்ச்சி மாற்றம் | 9.21% | 6.57% | 6.55% | 6.53% |

கீழ்க்கண்டவை ஆரம்பிக்கப்பட்டதுடன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- வங்கியின் NPL கொடுக்கப்பட்ட காலத்திற்கு புள்ளி விவரப்படுத்தப்பட்டுள்ளது.

- பிணைப் பெறுமானங்களின் தீர்வுகள் கவனத்திற் கொள்ளப்படுவதில்லை. வங்கியின் தற்போதைய போதிய மூலதன வீதம் 9.21% ஆகும். இது ஒழுங்குபடுத்துவோரால் தேவையான அளவுக்கு கீழ்ப்பட்டதாகும். இது குறிப்பாக வங்கியின் அடகு NPA அதிகரிக்கப்பட்டமையினாலேயேயாகும். மேலும் வங்கி மூலதன விருத்தித் திட்டத்தின் மூலம் மூலதனத்தை அதிகரிப்பதற்கான மதிப்பீட்டை ஆரம்பித்துள்ளது. ஆகவே பாதகமான காட்சிகளின் சம்பவம் 1,2 மற்றும் 3 கஷ்டமானதாகும்.

## திரவ நிலை இடர்பாடு முகாமைத்துவம்

திரவநிலை இடர்பாடு என்பது வங்கி காசு அல்லது ஏனைய நிதிச்சொத்துக்கள் விநியோகிப்பதன் மூலம் தீர்க்கப்படுகின்ற அதன் நிதி செயற்பாடுகளை எதிர்நோக்குவதிலுள்ள கஷ்டத்தைக் குறிக்கின்றது. ஆகவே வங்கி அதன் கொடுப்பனவுகளை எதிர்கொள்ள முடியாத நிலையைக் குறிப்பிடுகின்றது. RDB அதன் மேலான திரவநிலை விகிதத்தை நிருவகிப்பதற்கு திரவ சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதான அதன் அவதானத்தைச் சமப்படுத்துகின்றது. எவ்வாறாயினும் வங்கி அதன் திரவ நிலை வீதத்தை அரச நியதி ஒழுங்கமைப்பு தேவையுடன் (20%) சகித்துக் கொள்கின்றது.

2013 වසර අවසානයට ව්‍යවස්ථාපිත ද්‍රවශීල වත්කම් අනුපාතයට එරෙහිව බැංකුවේ සත්‍ය ද්‍රවශීල වත්කම් අනුපාතය




## செயற்பாட்டு இடர்பாடு

செயற்பாட்டு இடர்பாடு என்பது கடன் அல்லது சந்தை காரணமாக மக்கள் மற்றும் முறைகள் வெளிவாரி நிகழ்வுகள் உள்ளக செயற்பாடு தவறிழைத்தல் அல்லது பற்றாக்குறையின் விளைவாக ஏற்படுகின்ற எதிர்பார்க்கப்படாத நேரடியான அல்லது மறை முகமான நட்டத்தின் ஆபத்தையே இது தெரிவிக்கின்றது.

## செயற்பாட்டு இழப்பு தரவுகளின் சேகரிப்பு

வங்கியின் மோசடி செயற்பாடு வழக்குகளுக்காகச் செலவிடப்பட்ட நட்டங்களிலிருந்து வங்கியின் இழப்பு தரவை சேகரிப்பதற்காகவே இடர்முகாமைத்துவப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கிக்கு அவர்களது பணிப்புரையின் கீழ் காலாண்டு அடிப்படையில் இந்த தரவுகளை நாம் தொடர்ந்து அறிவித்து வருகின்றோம். 2013 ஆண்டினுள் வங்கியினுள் 17 இழப்பு நிகழ்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

எமது தற்போதைய "இழப்பு தரவு" சேகரிப்பு புலனாய்வுகளின் தகவல் அடிப்படையில் மாத்திரம் இருந்த போதிலும், எதிர்வரும் ஆண்டுகளில் இத்தகைய எல்லா தரவையும் ஏனைய வளங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கும் இதன் உள்ளடக்கத்தை விஸ்தரிப்பதற்கும் வங்கி திட்டமிட்டு வருகின்றது.

## வட்டி வீத இடர்பாடு

வட்டி வீதங்களில் பாதகமான அசைவுகளுக்கு வங்கியின் நிதிநிலைமையின் வெளிப்பாடே வட்டி வீத இடர்பாடாகும். வட்டி வீதங்களில் மாற்றங்கள் வங்கி சொத்துக்கள், பொறுப்புக்கள் ஐந்தொகை விடயங்கள் போன்று வங்கியின் வருமானத்திலும் முக்கியமான அழுத்தத்தைக் கொண்டிருக்க முடியும். சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வட்டி வீத இடர்முகாமைத்துவக் கொள்கைக்கமைய வங்கியின் இடைவெளி மற்றும் கால எல்லை பகுப்பாய்வு அடிப்படையில் தீர்மானிப்பதற்கு ALCO பொறுப்பாக இருக்கின்றது. இப்பகுப்பாய்வின் அடிப்படையில் இடர்ப்பாட்டு முகாமைத்துவப் பகுதி வட்டி வீத ஏற்ற இறக்கங்கள் தொடர்பான இடர்பாட்டு மதிப்பீட்டை மேற்கொள்ளவுள்ளது. எவ்வாறாயினும் தற்போதைய முறை எல்லைகள் காரணமாக சந்தை நிலைமைகள் மற்றும் கடன் வைப்பு விகித அடிப்படையில் கடன் வழங்குதல் மற்றும் வைப்புக்கள் ஆகிய இரண்டுக்குமாக தற்பொழுது வட்டி வீதங்களை ALCO தீர்மானிக்கின்றது.



"RDB வங்கிக்கு நன்றிகள் நாம் எவ்வகையிலும் கடனாளிகள்"



# கூட்டுறவு ஆளுமை

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல. } FB/M/RDB/CG/2013
My No.

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

දිනය
திகதி } 21 March 2014
Date

தலைவர்
பிரதேச சங்வர்தன வங்கி.

**இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கூட்டுறவு ஆளுமை பணிப்பின் இணக்கப்பாட்டுத் தேவை தொடர்பாக பிரதேச சங்வர்தன வங்கி பணிப்பாளர் சபைக்கு பிரதேச சங்வர்தன வங்கியின் உண்மையாக அறியப்பட்டவை தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) வழங்கப்பட்ட கூட்டுறவு ஆளுமை பணிப்பின் தேவைக்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் சபையின் ஆளுமை அறிக்கை தொடர்பான அறிக்கைக்கு சேர்க்கப்பட்டுள்ள அத்தியாயத்தின் நடைமுறைகளை நான் செய்துள்ளேன். இலங்கை தரங்களில் நிறுவப்பட்டுள்ள கோட்பாடுகள் அது தொடர்பான சேவைகள் 4400 (SLSR 4400) இற்கமைய இப்பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் நடைமுறைகள் கூட்டுறவு ஆளுமை பணிப்பின் தேவையை எதிர்கொள்ளக்கூடியவாறு உங்களுக்கு உதவுவதற்கு உண்மையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. பொது நடைமுறையிலுள்ள பட்டயக்கணக்காளர் நிறுவனம் எனக்கு உதவி புரிந்துள்ளது.

என்னால் கண்டறியப்பட்டுள்ளவற்றை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அத்தியாயத்தில் நான் இணைத்துள்ளேன்.

ஏனெனில், மேற்கூறப்பட்ட நடைமுறைகள் இலங்கை கணக்காய்வுத் தரங்களுக்கு அமைய கணக்காய்வு அல்லது நோக்கு உள்ளடக்கப்படாமையினால் CBSL இனால் வழங்கப்பட்ட கூட்டுறவு ஆளுமையின் பணிப்புடன் இணக்கப்பாடு தொடர்பாக எந்தவொரு உத்தரவாதத்தையும் தெரிவிக்க முடியாது.

இலங்கை கணக்கியற் தரங்களுக்கமைய மேலதிக வழிமுறைகளை நான் பிரயோகித்து நிதிக் கூற்றுக்களில் கணக்காய்வு அல்லது மீளாய்வினை நிறைவேற்றியிருப்பின், ஏனைய விபரங்கள் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு, அறிக்கைப்படுத்த முடிந்திருக்கும்..

எனது இவ் அறிக்கையின் முதலாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக உங்களது தகவலுக்காக உண்மைப்படுத்தப்படுகின்றது. அத்துடன் வேறு எந்தவொரு நோக்கத்திற்காகவும் பயன்படுத்தக் கூடியது அல்ல. அல்லது எந்தவொரு தரப்பினருக்கும் விநியோகிக்கக்கூடியதல்ல.

இந்த அறிக்கை மேற்குறிப்பிடப்பட்ட விடங்களுக்காக மாத்திரம் தொடர்புடையதாகும். அத்துடன் முழுமையாக எடுக்கப்பட்ட பிரதேச சங்வர்தன வங்கியின் எந்தவொரு நிதிக் கூற்றுக்கும் ஏற்புடையதல்ல.

( ஒப்பம் )

எச்.எ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

# கூட்டுறவு ஆளுமை

கூட்டுறவு ஆளுமை தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் திருத்தங்களின் விளைவாக மற்றும் 2007 ஆம் ஆண்டு 11ஆம் இலக்க வங்கிச்சட்ட பணிப்புரையின் விதிகளுக்கமைய RDB. இணக்காப்பாட்டுக் கூற்று இலங்கையிலுள்ள அனுமதி பெற்ற மற்றும் நிபுணத்துவம் பெற்ற வங்கிகளினால் இணக்கப்பாட்டைக் கொண்டிருக்கும் அத்துடன் அத்தகைய இணக்கப்பாடு பணிப்பு 3(g)(1)யில் வழங்கப்படவுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **3(1)** | | **சபையை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள் மீதான இணக்கப்பாடு வங்கியின் பாதுகாப்பு மற்றும் உறுதியைப் பலப்படுத்தியுள்ளது.** | |
| 3(1)(i) | a) | வங்கியின் உபாயநோக்கங்கள் மற்றும் கூட்டுறவு பரிமாணங்களின் சபை அங்கீகாரத்தைப் பரிசீலிக்கவும். வங்கி பூராகவும வங்கியின் உபாயநோக்கத்துடன் மற்றும்கூட்டுறவு பரிமாணத்துடன் தொடர்புபட்டுள்ளதா என்பதைப்பரிசீக்கவும். | **இணக்கப்பாடு**<br><br>வங்கியின் நோக்கம் 2008ஆம் ஆண்டு 41ஆம் இலக்க பிரதேச சங்வர்தன வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்றது. வங்கி உபாய நோக்கங்கள் மற்றும் கூட்டுறவு பரிமாணங்கள் அங்கீகரிக்கப்படல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பன மாதாந்த மற்றும் விஷேட கூட்டங்கள் ஊடாக நிறைவேற்றப்படுகின்றது. சபை மட்டத்தில் எடுக்கப்பட்டமுடிவுகள் வங்கி சுற்றுநிருபங்கள், விழிப்புணர்ச்சித்திட்டங்கள் தேவையானபோது பிரதான வள ஆளணி ஊடாக தொடர்புபடுத்தப்படுகின்றன. |
| | b) | வங்கியின் முழு மொத்த வியாபார உபாயத்தின் சபை அங்கீகாரத்தைப் பரிசீலித்தல்.<br><br>முழுமொத்த வியாபார உபாயத்தைப் பரிசீலித்தல் என்பது முழு மொத்த இடர்பாடு கொள்கை, இடர் பாடுமுகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் யுக்திகள் அவை ஆவண மயப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. முழுமொத்த வியாபாரத் தைப் பரிசீலித்தல்ஆகக்குறைந்தது அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு மதிப்பிடக்கூடிய இலக்குகளை உள்ளடக்குகின்றது. | **இணக்கப்பாடு**<br><br>2011இல் ஆரம்பிக்கப்பட்டசபை அங்கீகரித்த ஐந்து ஆண்டுகளுக்கான கூட்டுறவுத்திட்டம் கிடைக்ககூடியதாக உள்ளது.<br><br>வருடாந்த வரவு செலவுகள் இலக்குகள் சபையினால் அடிப்படையாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளன மேலும் அவை பிரதேச பொதுமுகாமையாளர் ஊடாக பிரதேச அலுவலகங்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன.<br><br>உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகளுக்கான செயற்பாட்டு கையேடு சுத்திரப்படுத்தப்பட்டு பின்பற்றப்படுகின்றன. |
| | c) | சபையினால் இனம்காணப்பட்ட இடர்பாடுகளை முகாமைப்படுதத்துவதற்குபொருத்தமானமுறைகள் பரிசீலனை எதிர்வுகூறப்பட்டு ஒழுங்காக அமுல்படுத்தப்படுகின்றது. | **இணக்கப்பாடு**<br><br>இனம் காணப்பட்டு அமுல்படுத்தப்படுகின்ற பிர-தான இடர்பாடு ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவினூடாக (IRMC) சபையி-னால் நிறைவேற்றுப்படுகின்றன. 2013 இல் நான்கு கூட்டங்கள் நடாத்தப்பட்டன. கொள்கை ஆவணங்கள் அடிப்படையாக்கப்பட்டதுடன் சுற்று நிருபங்கள் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

| பிரிவு | விதி | இணக்கப்பாட்டின் மட்டம் |
|---|---|---|
| | d) வைப்பாளர்கள்,கடன்கொடுத்தோர்,பங்குதாரர்கள் மற்றும் கடன் எடுத்தோர் உட்பட எல்லாப் பங்குதாரர்களுடன் தொலைதொடர்பு கொள்கை சபை அங்கீகரித்து அமுல்படுத்துவதனைப் பரிசீலனை செய்தல். | தொலைத்தொடர்புக்கொள்கைபின்பற்றப்படுவதனை சபை அங்கீகரித்துள்ளதுடன் ஆளணி மற்றும் கூட்டுறவு முகாமைத்துவ ஆளணி பிரதான அசைவினூடாக வங்கியின் எல்லா பங்குதாரருடன் சாத்தியமான இருவழி தொடர்பாடல்களை சபைஉறுதிப்படுத்துகின்றது. |
| | e) வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைகளின் போதிய மற்றும் ஒருங்கிணைக்கப்பட்டவற்றை சபை மீள்நோக்குவதனை பரிசீலனை செய்தல். | **இணக்கப்பாடு**<br>சபை ஆவணப்படுத்தப்பட்ட உள்ளககட்டுப்பாடு நடைமுறைகளின் உள்ளடக்கிய செயற்பாட்டுகையேட்டை அங்கீகரித்துள்ளது. |
| e) | சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பிரிவினரான தரப்பினருக்கும் 3(7)(iii) அறியப்பட்டுள்ள மொத்த தேறிய கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவினரான சம்பந்தப்பட்ட வழங்கப்பட்ட தேறிய கடன் வங்கியின் ஒழுங்கான மூலதனத்தின் வீதமாக வெளியிடப்பட்டுள்ளது. | 3(7)(1)ஐப்பார்க்கவும் |
| f) | வங்கியினால் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்குச் செலுத்திய சம்பளத்தின் கூட்டுப் பரிமாணம் மற்றும் வங்கி அதன் பிரதான முகாமைத்துவ ஆளணியினருடன் செய்து கொண்ட கொடுக்கல் வாங்கல்களின் கூட்டுப் பரிமானமும் செலுத்திய சம்பளம், வழங்கப்பட்ட கடன் அத்துடன் வைப்புக்கள் அல்லது வங்கியில் செய்யப்பட்ட முதலீடுகள் போன்ற பரந்த பிரிவுகள் மூலம் நிறுவப்பட்டுள்ளது. | **இணக்கப்பாடு**<br>வெளிப்பாடுகள் நிதிக்கூற்றில் செய்யப்பட்டுள்ளன. |
| g) | கூட்டுறவு ஆளுமை பணிப்புரைக்கமைய வெளிவாரி கணக்காய்வாளரின் அறிக்கை பெறப்பட்டுள்ளதை சபை பரிசீலனை செய்கின்றது. | **இணக்கப்பாடு** |
| h) | ஓர் அறிக்கை எதிர்வுகூறல் தேவைகள், விதிகள் சட்டங்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள் ஏதேனும் பொருள் இணக்கப்பாடின்மையை சீர்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட மதிப்பீடுகள் என்பவற்றின் இணக்கப்பாட்டின் விபரங்களை நிறுவியுள்ளது. | **இணக்கப்பாடு**<br>குறிப்பிட்ட வெளிப்பாடுகள் தலைவர், CEOவின் மீள்நோக்கு மற்றும் பணிப்பாளரின் அறிக்கையில் செய்யப்பட்டுள்ளன. |
| i) | வங்கி மேற்பார்வை பிரிவின் பணிப்பாளரால் அவ்வாறாயின் நாணய சபையினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் வங்கியின் இடர்பாட்டு முகாமைத்துவத்தில் தவறுகள் தொடர்பாக ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை பற்றிய கூற்று அத்தகைய விடயங்களைப் பேசுவதற்கு வங்கியினால் எடுக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுடன் பொதுமக்களுக்கு வெளியிடப்படவுள்ளது. | **இணக்கப்பாடு** |

# சபை மற்றும் குழுக்களின் வரவு

சபை கூட்டங்களின் எண்ணிக்கையும் சபையினால் நியமிக்கப்பட்ட உப-குழுக்கள் அங்கத்தவர்களின் தனிப்பட்ட வருகையும் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| பெயர்கள் | பணிப்பாளர் பதவி நிலை | சபை | கணகாய் வுக் குழு | ஒருங்கிணைக் கப்பட்ட முகாமைத் துவக் குழு | மனித வள மற்றும் சம்ப ளக் குழு | கடன் குழு |
|---|---|---|---|---|---|---|
| திருமதி. கேஷலா ஜயவர்தன | நிறைவேற்றுத் தரமல்லாத சுயேட்சையான தலைவி | 13/13 | 01/03 | 02/03 | | |
| திரு. ரத்னசிறி சிறிவர்தன | பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி | 13/13 | 04/04 | 04/04 | | |
| திரு. ரி.ஏ. ஆரியபால | நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் | 11/13 | | | | 01/01 |
| திரு.பி.எம்.எஸ்.பட்டகொட | நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர் | 08/13 | 02/04 | | | |
| திரு. பி.வி.பத்திரன | சுயேட்சையான நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் | 09/09 | 02/02 | | | |
| திரு. தம்மிக்க பெரேரா | நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர் | 05/13 | 03/04 | 04/04 | | |
| திருமதி. சி.கே.நாணயக்கார | சுயேட்சையான நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர் | 13/13 | | | 01/01 | |
| திருமதி.தயானி பெர்ணான்டோ | நிறைவேற்றுதரமல்லாத பணிப்பாளர் | 02/04 | | 00/01 | | |
| திருமதி. ஜே. எம். எஸ். டி. ரத்நாயக்க | நிறைவேற்றுதரமல்லாத பணிப்பாளர் | 02/03 | 00/02 | | | |
| திரு. ரஸ்ஸல் டிமெல் | சுயேட்சையான நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் | 01/02 | | | | |
| திரு. சரத் டி அல்விஸ் | சுயேட்சையான நிறைவேற்றுத்த ரமல்லாத பணிப்பாளர். | 12/13 | | | | |
| திருமதி. மாதவி ஹேரத் | நிறைவேற்று பணிப்பாளர் | 06/13 | | | | |
| கூட்டங்களின் மொத்த எண்ணிக்கை | நிறைவேற்றுப் பணிப்பாளர் | 13 | 04 | 04 | 01 | 01 |

# உள்ளக கட்டுப்பாட்டு அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. FB/M/RDB/IC/2013 — ඔබේ අංකය / உமது இல. / Your No. — දිනය / திகதி / Date 24 March 2014

தலைவர்,

பிரதேசிய சங்வர்த்தனை வங்கி

## பிரதேசிய சங்வர்த்தனை வங்கியின் உள்ளகக்கட்டுப்பாடு தொடர்பாக பணிப்பாளர்களின் கூற்று பற்றிய பணிப்பாளர் சபைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உறுதிப்பாட்டு அறிக்கை

### அறிமுகம்

பிரதேசிய சங்வர்த்தனை வங்கியின் உள்ளக கட்டுப்பாடு ("கூற்று") தொடர்பான பணிப்பாளர்களின் கூற்று பற்றிய உறுதிப்பாட்டை வழங்குவதற்கான இந்த அறிக்கை 2013 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் உட்படுத்தப்பட்டுள்ளது. இந்த உறுதிப்பாட்டு இணைப்பை நிறைவேற்றுகையில் பொது மக்கள் சேவையிலுள்ள பட்டயக்கணக்காளர்கள் நிறுவனத்தினால் உதவப்பெற்றிருந்தேன்.

### முகாமைத்துவப் பொறுப்புக்கள்

இலங்கைப் பட்டயக்கணக்காளர்கள் நிறுவனத்தினால் 2007 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்பின் பிரிவு 3 (8) (11) (ஆ) விற்கு இணங்க வழங்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக "பணிப்பாளர்களின் கூற்று பற்றிய வங்கிகளின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டி" க்கு இணங்க இக்கூற்று தயாரிக்கப்படல் மற்றும் சமர்ப்பிப்பதற்காக முகாமைத்துவம் பொறுப்புடையதாகும்..

### எனது பொறுப்பும் SLSAE 3050 உடனான இணக்கப்பாடும்

எனது பொறுப்பு என்னால் நிறைவேற்றப்பட்ட வேலை அடிப்படையான கூற்று தொடர்பாக சபை பணிப்பாளர்களுக்கு ஓர் அறிக்கையை வழங்குவதாகும். இலங்கை கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உள்ளககட்டுப்பாடு தொடர்பாக பணிப்பாளர்களின் கூற்று பற்றிய வங்கிகளுக்கான அறிக்கை உறுதிப்பாடு இணைவு குறித்து இலங்கை தரங்களுக்கமைய எனது இணைவு நடாத்தப்படுகின்றது.

### நிறைவேற்றப்பட்ட வேலையின் விபரம்

எனது இணைவு கூற்று தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் மூலம் ஒத்துழைக்கப்பட்டதா அல்லது வங்கிக்காக உள்ளக கட்டுப்பாட்டு முறையை மீள்நோக்குவதில்

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

பணிப்பாளர்கள் சேர்த்துள்ள செயற்பாடு பொருத்தமான பிரதிபலிப்பைக் கொண்டுள்ளதா ஆகிய இரண்டையும் மதிப்பிடுவதாகும

இந்நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு, பொருத்தமான சான்றைப் பெற்றுக்கொள்வதற்கு கீழ்க்காணும் நடைமுறைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

பணிப்பாளர்களினால் செய்யப்பட்ட கூற்றை சேர்த்துக் கொள்வதற்கு தமது புரிந்துணர்வை ஒப்பிடுவதற்கும் அத்துடன் உள்ளக கட்டுப்பாட்டின் வடிவமைப்பு மற்றும் திறமையை மீள் நோக்குவதற்காகவும் அறியப்பட்டுள்ள செயற்பாட்டு புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவத்திடம் விசாரிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர்களினால் செய்யப்பட்ட தமது ஒத்துழைப்புக்கு பணிப்பாளர்களினால் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் மீள் நோக்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஏனைய போதிய பொருத்தமான கணக்காய்வுச் சான்று நியாயமாக எதிர்பார்க்கப்பட முடியாத விடத்து உள்ளக கட்டுப்பாட்டுக் கூற்றுக்கு பொருட்கள் விவகாரங்கள் தொடர்பாக பணிப்பாளகர்களிடமிருந்து எழுத்து மூலமான பிரதிநிதித்துவம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கூற்று எல்லா இடர்பாடுகள் மற்றும் கட்டுப்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளதா அல்லது வங்கியின் இடர்பாடுஅல்லது கட்டுப்பாட்டு நடைமுறைகளின் திறமை தொடர்பான அபிப்பிராயத்தை கவனத்திற் கொள்வதற்கு SLSAE 3050 என்னை வலியுறுத்தவில்லை. உண்மையில் பிரச்சினைகளுக்கு பரிகாரமாக வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் பிரச்சினைகள் பொருள் உள்ளகக்கட்டுப்பாட்டுடன் கையாளுவதற்கு விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை கவனத்திற் கொள்வதற்கு SLSAE 3050 என்னை வலியுறுத்தவில்லை.

### எனது முடிவுரை

நிறைவேற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் வங்கியின் நிதிஅறிக்கை மீதான உள்ளகக்கட்டுப்பாட்டின் வடிவமைப்பு மற்றும் திறமையினை நோக்குவதில் எமது புரிந்துணர்வு செயற்பாடு பணிப்பாளர் சபையின் கவனமும் சேர்த்துள்ளது.

ஒப்பம்
எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# உள்ளக கட்டுப்பாடு தொடர்பாக பணிப்பாளரின் கூற்று

## தேவை

இந்த அறிக்கை இலங்கை பட்டயக்கணக்காளர்கள் நிறுவனத்தினால் (ICASL) வழங்கப்பட்ட வழிகாட்டலுக்கமைய தயாரிக்கப்பட்டு 2007ஆம் ஆண்டு 11ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 3(8) (11)(ஆ) இற்கமைய வழங்கப்பட்டுள்ளது.

## பொறுப்புடமை

பிரதேச அபிவிருத்தி வங்கியில் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் அதன் திறமையை மீள்நோக்குவதற்காக பணிப்பாளர் சபை பொறுப்பாக இருக்கின்றது. எவ்வாறாயினும் அத்தகைய முறை வங்கியின் கொள்கை மற்றும் இணக்கப்பாடின்மை தொடர்பில் முக்கியமான கண்ணோட்டம் கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் மாதிரிகள் மற்றும் சுற்று நடைமுறைகளைப் பயன்படுத்தி நடைபெற்று வருகின்ற அடிப்படையில் உள்ளக கட்டுப்பாட்டு முறையின் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் திறமை இணக்கப்பாட்டுக்காக வங்கியின் உள்ளக கணக்காய்வு முறை பரிசீலிக்கின்றது. ஒரு சுயேட்சையான மற்றும் நோக்கங்கள் கொண்ட அறிக்கையை வழங்குவதற்கு இடர்பாடு மதிப்பிடப்பட்ட மட்டத்தின் மூலம் வங்கியின் நிதி மற்றும் அதன் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக ஓர் செயற்பாட்டு கையேட்டை சபை அங்கீகரித்துள்ளது. கையேட்டில் முன்வைக்கப்பட்டுள்ள நடைமுறைகள் சகல ஊழியர், அங்கத்தவர்களுக்கும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏதேனும் அடிக்கடி எல்லா பிரிவுகள் மற்றும் கிளைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகள் தீர்மானிக்கப்படுகின்றது. உள்ளக கணக்காய்வில் பெற்றுக் கொண்டவை அவர்களது காலத்திற்குக் காலம் நடைபெறுகின்ற கூட்டங்களில் சமர்ப்பிக்கப்படுகின்ற வங்கியின் கணக்காய்வுக் குழுக்கள் உள்ளககணக்காய்வுப் பிரிவு ஒழுங்கமைப்பு அதிகார சபைகள் மற்றும் முகாமைத்துவத்தினால் இனம் காணப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டு விடயங்களை வங்கி மீள்நோக்குகின்றது. மேலும் அவர்கள் உள்ளக கணக்காய்வுகளின் உள்ளடக்கம் மற்றும் உள்ளக கணக்காய்வின் தரம் தொடர்பான குறிப்பிட்ட அழுத்தங்களுடன் உள்ளக கணக்காய்வு தொழிற்பாடுகளையும் மீள்நோக்குகின்றன. கணக்காய்வுக் குழுகூட்டங்களின் அறிக்கைகள் வங்கியின் சபைக்கு பருவகால அடிப்படையில் முன்வைக்கப்படுகின்றன. தயாரித்து சமர்ப்பிப்பதில் சார்ந்துள்ள தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்களில் முகாமைத்துவ தகவல் முறை (MIS) கையேட்டு செயற்பாட்டில் வருட முடிவில் நிதிக்கூற்றுக்களை வங்கி தயாரித்துள்ளது. தற்பொழுது மத்திய மயப்படுத்தப்பட்ட சொப்ட் வெயார் கம்பியூட்டர் முறையை வங்கி அமுல்படுத்தி வருகின்றது.

வியாபார நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தவறுகின்ற இடர்பாட்டை ஒழிப்பதை விட ஏற்றுக் கொள்ளத்தக்க இடர்பாட்டு முகக் குறிப்பினுள் வங்கியின் பிரதான இடர்பாட்டு பிரதேசங்களை நிருவகிப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, உள்ளக கட்டுப்பாடு பொருள் முகாமைத்துவத்தின் தவறான கூற்றுக்கள், நிதி தகவல்கள் மற்றும் நிதி இழப்புக்கள் அல்லது மோசடிக்கு எதிராக நியாயமானதை வழங்க முடியும். ஆனால் அவற்றுக்கு பூரண உறுதிப்பாட்டை வழங்க முடியாது.

## சபை மீள்நோக்கு செயற்பாடு

இலங்கை பட்டயக்கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உள்ளக கட்டுப்பாடு தொடர்பாக பணிப்பாளர்களின் கூற்றில் வங்கிகளின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டலுடனான உடன்படிக்கைக்கமைய சபையினால் செயற்பாடு மீள்நோக்கப்படுகின்றது. உள்ளக கட்டுப்பாட்டு முறை கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய மதிப்பிடுவதற்கான கோட்பாடுகளைக் கவனத்திற் கொண்டு உள்ளக கட்டுப்பாட்டு முறையை சபை மதிப்பிடுகின்றது.

நிதி அறிக்கை உண்மைப்படுத்தல் தொடர்பாகவும் மற்றும் வெளிவாரி நோக்கங்களுக்காக நிதி அறிக்கை தயாரித்தல் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கையை வங்கி எடுத்துள்ளது என சபை நோக்குகின்றது. இடர்பாடுகளைக் குறைப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொருத்தமான உள்ளக கட்டுப்பாடுகளை வடிவமைப்பதில், செயற்பாடு, கண்காணித்தல், முகம் கொடுக்கப்பட்ட இடர்பாடுகளை இனம் காணுதல், மதிப்பிடுவதன் மூலம் இடர்பாடு மற்றும் கட்டுப்பாடு தொடர்பான சபையின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை அமுல்படுத்துவதில் முகாமைத்துவம் சபைக்கு உதவுகின்றது.

## செயற்பாட்டின் முக்கியமான சிறப்பம்சங்கள

கீழ்க்கண்டவை உட்பட நிதி அறிக்கை தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டு முறையின் போதிய மற்றும் ஒருங்கிணைப்பை மீள்நோக்குவதில் பிரதான செயற்பாடுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

வங்கியின் தினசரி செயற்பாடுகளின் திறமையை உறுதிப்படுத்துவதில் கூட்டுறவு நோக்கங்கள், உபாயங்கள்,

வருடாந்த வரவு செலவு, அங்கீகரிக்கப்பட்டுள்ள கொள்கைகள், வியாபார பணிப்புக்களுக்கமைய வங்கியின் செயற்பாடுகளுக்கு சபை உதவுவதற்கு கணக்காய்வு மற்றும் IRMC இன் சபை உப குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

## உறுதிப்பாடு

சபையினால் கணக்காய்வு மற்றும் ஐசுஆஊ இன் சபை மேற்கூறப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையில் வெளிவாரி நோக்கங்களுக்காக நிதி அறிக்கையின் நிச்சய தன்மை மற்றும் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு வங்கியின் அறிவிக்கும் முறை வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை கணக்கியற் தரங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்கமைப்புத் தேவைக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

## வெளிவாரிக் கணக்காய்வாளர்களினால் கூற்று பற்றிய நோக்கு

22013 டிசம்பர் 31 முடிடைந்த ஆண்டுக்கான உள்ளக கட்டுப்பாடு பற்றிய மேற்கூறப்பட்ட பணிப்பாளர்களின் கூற்று வெளிவாரி கணக்காய்வாளர்களினால் மீள்நோக்கப்படுகின்றது. வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறையின் வடிவமைப்பு மற்றும் திறமை சபையின் மீள்நோக்கல் ஊடாக சேர்க்கப்பட்டுள்ள செயற்பாட்டின் புரிந்துணர்வுடன் நம்பிக்கைக்குப் பாதகமான காரணங்கள் எதுவும் அவர்களது கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை.

ஆர் . சிரிவர்தன

பொதுமுகாமையாளர்/CEO

எஸ்.டி.என். பெரேரா

கணக்காய்வுக்குழுவின் தலைவர்

கேசலா ஜயவர்தன

தலைவி

# பணிப்பாளரின் அறிக்கை

## பொதுவானவை

பிரதேச சங்வர்த்தனை வங்கியின் (RDB) பணிப்பாளர்கள் 2013 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்காய்வுக் குழுவுடன் வங்கியின் விவகாரங்கள் தொடர்பான தமது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றனர். கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வெளியிடப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த அறிக்கை கூட்டுறவு ஆளுமை தொடர்பாக வங்கிச் சட்டத்தின் பணிப்பின் கீழ் செய்யப்படவுள்ள குறிப்பிட்ட தேவையான வெளிப்பாடுகளையும் உள்ளடக்குகின்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் இலங்கைப் பாராளுமன்றத்தின் முன்னிலையில் வைக்கப்படுவதற்கு பொது நிறுவனத் திணைக்களத்தின் பணிபப்பாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட 2005 ஜனவரி 27ஆம் திகதியிடப்பட்ட சுற்றுநிருபம் இல.PED/27, இற்கமைய 2014 ஆம் ஆண்டு மே 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நிதி அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## பிரதான செயற்பாடுகள்

வங்கியின் பிரதான செயற்பாடுகள் விவசாயம், கைத் தொழில், வியாபாரம், வாணிபம், கால்நடை, மீன்பிடி செயற்பாடுகள் மற்றும் மகளிர் வலுவூட்டல் குறிப்பாக நுண் நிதியியல் நிறுவனங்களுக்கு மற்றும் சிறிய நடுத்தர நிறுவனங்களுக்கும் நிதி உதவிகளை வழங்குவதன் மூலம் அவற்றின் அபிவிருத்தியை மேம்படுத்துவதன் மூலம் இலங்கையின் முழு மொத்தமான பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதே பிரதான செயற்பாடாகும்.

## நோக்கு, இலக்கு

வங்கியின் நோக்கு, இலக்கு இந்த வருடாந்த அறிக் கையின் முன் உள்அட்டைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. வங்கி நோக்கு மற்றும் இலக்கின் கீழ்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை ஊக்குவிக்கின்ற அதே வேளை அதன் செயற்பாடுகளில் உயர் ஒழுக்க தரங்களைப் பேணிவருகின்றது.

## கொண்டு செல்லல் எண்ணக்கரு

வருங்காலத்தில் சாத்தியமான முறையில் அதன் செயற்பாடுகளைத் தொடர்வதற்கு வங்கி போதிய வளத்தைக் கொண்டுள்ளது என்பதில் சபை திருப்தி கொண்டுள்ளது. ஆகவே நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் அவதானத்துடன் செல்லல் அடிப்ப டையைத் தொடர்ச்சியாக செய்துவருகின்றோம்.

## நிதிக்கூற்றுக்கள்

வங்கியின் நிதிககூற்றுக்கள் இலங்கை பட்டயக்கணக்காளர்கள் நிறுவனத்தினால் முன் வைக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டுத் தரங்கள் (SLFRS's) இற்கமைய அத்துடன் 1988 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்திற்கு இணங்கவும் தயாரிக்கப்பட்டுள்ளது. 2013 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான வங்கி யின் நிதிக்கூற்றுக்கள் வங்கியின் நிதி மற்றும் திட்டமிடல் தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் வங்கியின் இரண்டு பணிப்பாளர்களினால் முறையாக கையொப்பமிடப்பட்டு சபை பணிப்பாளர்களின் வருடாந்த அறிக்கையின் 90ஆம் பக்கத்தில் வருடாந்த அறிக்கையின் ஒருங்கிணைந்த பாகத்தின் வடிவில் கொடுக்கப்பட்டுள்ளது.

## நிதி அறிக்கைக்கான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்

வங்கியின் விவகாரங்களின் நிலைமையை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கக்கூடியதாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான பொறுப்புக்களைப் பணிப்பாளர்கள் கொண்டுள்ளனர். இலங்கைக் கணக்கியற் தரங்களின் தேவைகளுக்கு அமைவாக மற்றும் 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கிச் சட்டத்திற்கும் அதன் திருத்தஙகளுக்கும் அமைய தயாரிக்கப்பட்டுள்ளன என பணிப்பாளர்கள் அபிப்பிராயம் கொண்டுள்ளனர். இந்த வருடாந்த அறிக்கையின் பக்கம் 80இல் காட்டப்பட்டுள்ள பணிப்பாளர்களின் பொறுப்பு பற்றிய கூற்று பணிப்பாளர்களின் வருடாந்த அறிக்கையின் ஒருங்கிணைந்த படிவத்தில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் விபரமாக விளக்கப்படுகின்றது.

## கணக்காய்வாளரின் அறிக்கை

கணக்காய்வாளர் தலைமை அதிபதி கணக்காய்வை மேறகொள்கின்றார். 2013இல் கணக்காய்வு வருடம் பூராகவும் மேற்கொள்ளப்பட்டது. அவர்களது அறிக்கையில் இனம் காணப்பட்ட விடயங்கள் ஒழுங்கான செயற்பாட்டுக்கு முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதி அறிக்கையின் சரியான நிலையை உறுதிப்படுத்துகின்ற வேளையில் தேவையான தரவு மற்றும் தகவலுடனான நிதிக் கூற்றுக்கள் பரிசீலனைக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைக்கச் செய்யப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் இவ்வருடாந்த அறிக்கையின் பக்கம்89 இல் காண்பிக்கப்படுகின்றது. ஒழுக்க மேற்பார்வை நிலையம் என்ற வகையில் இலங்கை மத்திய வங்கி தம்மால் வழங்கப்பட்ட

பணிப்பாளர்களுடன் இணக்கப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு வங்கியின் குறிப்புக்கள் மற்றும் விவகாரங்களின் காலத்திற்குக் காலம் பரிசீலனை மேற்கொள்கின்றது. பங்குதாரர்களின் வட்டியில் தேவையான மட்டத்தில் நிருவகிக்கப்படுவதற்குத் தேவையான நிதி குறியீட்டாளர்களை தீர்மானிக்கின்றது. குறிப்பாக வைப்பாளர்களைப் பாதுகாக்கின்றது.

## முக்கியத்துவம் வாய்ந்த கணக்கியற் கொள்கைகள்

நிதிசார் கூற்றுக்கள் தயாரிப்பில் சேர்க்கப்பட்டுள்ள முக்கியத்துவம் வாய்ந்த கணக்கியற் கொள்கைகள் பக்கங்கள் 96-110 வரை கொடுக்கப்பட்டுள்ளன.

## பணிப்பாளர்களின் சம்பளம்

இந்த ஆண்டில் செலுத்தப்பட்ட பணிப்பாளர்களின் சம்பளங்கள் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 6இல் கொடுக்கப்பட்டுள்ளன.

## எதிர்கால அபிவிருத்திகள்

வங்கியின் எதிர்கால அபிவிருத்தி பற்றிய ஒரு மேல் நோக்கு தலைவியின் செய்தி (பக்கங்கள்7-11வரை) பொது காமையாளர்/CEO வின் செய்தியில் (பக்கங்கள்12-14வரை) மற்றும் முகாமைத்துவ கலந்துரையாடல்கள் மற்றும் பகுப்பாய்வு (பக்கங்கள் 28-32 வரை) கொடுக்கப்பட்டுள்ளது.

## வியாபார செயற்பாட்டின் மீள்நோக்கு

2013 நிதி ஆண்டில் வங்கி செயற்பாட்டின் மீள்நோக்கு தலைவியின் செய்தியில் (பக்கங்கள்7-11வரை) கொடுக்கப்பட்டுள்ளது. பொது முகாமையாளர்/CEO வின் செய்தியில் (பக்கங்கள் 12-14 வரை) முகாமைத்துவ கலந்துரையாடல்கள் மற்றும் பகுப்பாய்வில் (பக்கம் 28-32 வரை) உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கைகள் வருடாந்த அறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியை நிறுவுகின்றது.

## நிதிசார் பெறுபேறுகள்

வங்கியின் நிதசார் மற்றும் கருமமாற்றல் செயற்பாடு பொது முகாமையாளர்/CEO வின் மீள்நோக்கு பக்கம் 12 மற்றும் நிதி சார் கண்ணோட்டங்கள் பக்கங்கள் 02 இலும் கொடுக்கப்பட்டுள்ளது.

## குறிப்பிடப்பட்ட மூலதனம்

31.12.2013 அன்று மொத்த பங்குதாரர் நிதியம் ரூபா 4.1 பில்லியன் ஆகும். இது இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட ஆகக் குறைந்த மூலதனத் தொகை ரூபா 1.5 பில்லியனை விட மிகக் கூடுதலானதாகும். வருட முடிவில் பங்குதாரர்களினால் பங்களிப்புச் செய்யப்பட்ட குறிப்பிடப்பட்ட மூலதனம் ரூபா 1.09 பில்லியன் ஆகும் அத்துடன் பங்குடமையின் வீதம் கீழ்க்கண்டவாறு தரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1. | அரசாங்க திறைசேரி ரூபா 877,446,711 | 79.81% |
| 2. | இலங்கை வங்கி ரூபா 74,184,480 | 6.75% |
| 3. | மக்கள் வங்கி ரூபா 74,184,480 | 6.75% |
| 4. | தேசிய சேமிப்பு வங்கி ரூபா 73,584,480 | 6.69% |
| | மொத்தம் ரூபா 1,099,400,151 | 100% |

## வருமானம்

2013 ஆண்டுக்கான வங்கியின் வருமானம் ரூபா 11 பில்லியனாக இருந்தது. வருமானத்தின் விபரங்கள் பக்கம் 111 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

## அரசாங்கத்திற்குரிய பங்களிப்பு

வங்கி அரசாங்கத்திற்கு 2013 ஆம் ஆண்டில் வரிகள் மற்றும் கட்டணங்கள் என்ற வழிகளில் ரூபா 843 மில்லியனைச் செலுத்தியுள்ளது. இதில் ரூபா 156 மில்லியன் வருமானவரி மற்றும் ரூபா 687 மில்லியன் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியையும் உள்ள டக்கியுள்ளது. வங்கி செயற்பாடுகள் மீதான பொருத்தமான வருமானவரி விகிதம் 28% ஆகும்.

கடன்பொறுப்பு முறையின் கீழ் எல்லா அறியப்பட்ட தற்காலிக வித்தியாசங்கள் மீதும் தாமதிக்கப்பட்ட வரிவதிப்புக்காக வழங்குவது வங்கியின் கொள்கையாகும். மேலும் வங்கி நிதிசார் வட்டி 12% பொறுப்புடையதாகும்.

## சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணம

சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணம் சுவீகரிப் பின் பேரில் வங்கியினால் மொத்த மூலதனச் செலவினம் செலவிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் குத்தகைச் சொத்து மற்றும் அசையாச் சொத்துக்கள் தொகை ரூபா 313.5 மில்லியன் (2012 ரூபா 352 மில்லியன்) அவற்றின் விபரங்கள் இந்த வருடாந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 21 இல் பக்கங்கள் 117-119 வரை கொடுக்கப்பட்டுள்ளன.

## ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் நிகழ்வுகள்

ஐந்தொகைத் திகதியன்று கணக்குகளில் தேவையான சீராக்கல்கள் அல்லது சேர்ப்புக்கள் எழ வேண்டிய தேவை ஏற்படவில்லை.

## முடிவு பெறாத நீதிமன்ற வழக்குகள்

பணிப்பாளர்களின் மற்றும் வங்கியின் சட்டத்தரணிகளின் அபிப்பிராயத்தில் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 31 இல் வெளியிடப்பட்டுள்ள வங்கிக்கு எதிரான முடிவு பெறாத நிலையிலுள்ள வழக்குகள் வங்கியின் நிதிசார் நிலைமையில் அல்லது அதன் வருங்கால செயற்பாடுகளில் பொருள் அழுத்தங்களைக் கொண்டிருக்கப்போவதில்லை

## பணிப்பாளர் சபை

பணிப்பாளர் சபை தலைவி மற்றும் மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து இரண்டு பிரதி பொது முகாமையாளர்கள்

திறைசேரிச் செயலாளர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளரில் நியமிக்கப்பட்ட திறைசேரிக்கான பிரதி செயலாளர் திறைசேரிக்கான செயலாளருடன் கலந்தாலோசித்த தலைவர் மற்றும் முன்னைய பிரதேச வங்கிகளின் தலைவர்களாக கடமையாற்றிய இரண்டு நிறைவேற்றுத்தரமல்லாத பணிபபாளர்கள் உட்பட ஏனைய ஐந்து பணிப்பாளர்களையும் நியமிக்கின்றார். இவ்வாண்டு காலப்பகுதியில் கீழ்கண்டோர் பணிப்பாளர்களாகக் கடமையாற்றியுள்ளனர். அத்துடன் அவர்களது சுருக்கமான முகக் குறிப்புக்கள் வருடாந்த அறிக்கையின் பக்கங்கள் 15-20 வரை காணப்படுகின்றன.

திருமதி.கேஷலா ஜயவர்தன

திரு.சரத் டி அல்விஸ்

திருமதி.ஏ.வி.கே. மாதவி ஹேரத்

கலாநிதி.ரி.எம்.எஸ். பட்டகொட

திருமதி.சி.கே.நாணயக்கார

திரு.எஸ்.டி.என். பெரேரா

திரு.ரி.ஏ. ஆரியபால

திருமதி.ஜே.எம்.எஸ்.டி.ரத்நாயக்க

திரு.ரஸெல் டி மெல்.

## பணிப்பாளர்களின் இராஜினாமா

திரு.பி.வி.பத்திரன மற்றும் திருமதி. தயானி பெர்ணாண்டோ ஆகியோர் முறையே 04.09.2013 மற்றும் 22.05.2013 ஆம் திகதி தொடக்கம் சபையிலிருந்து பணிப்பாளர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளனர்.

## பணிப்பாளரின் புதிய நியமனம்

திருமதி.ஜே.எம்.எஸ்.டி. ரத்நாயக்க மற்றும் திரு.ரஸெல் டி மெல் ஆகியோர் முறையே 16.09.2013 மற்றும் 22.10.2013 தொடக்கம் சபைக்கான பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## சபை குழுக்கள்

முழு மொத்த பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை ஆரம்பிக்கின்ற சபை, மத்திய வங்கி மற்றும் ஏனைய அரச நியதி இணக்கபபாடுகளின் கூட்டுறவு ஆளுமை தரங்களுடன ஒத்துப்போவதை உறுதிப்படுத்துவதற்கு கீழ்க்காணும் சபை உப குழுக்களை நியமித்துள்ளது. 2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு ஒழுங்கமைப்பு உபகுழுக்களின் உள்ளடக்கம் பின்வருமாறு

## கணக்காய்வுக் குழு

1. திரு.எஸ்.டி.என். பெரேரா (குழுவின் தலைவர்)
2. கலாநிதி.பி.எம்.எஸ்.பட்டகொட
3. திருமதி.ஜே.எம்.எஸ்.டி. ரத்நாயக்க
4. திரு.பி.வி.எஸ். பத்திரன
5. திருமதி. மனோஜிகா ஹேரத் (குழுவின் செயலாளர்)

சபையின் பணிப்பாளர்கள் அறிக்கையின் ஒரு பகுதியை நிறுவுகின்ற கணக்காய்வுக்குழுவின் அறிக்கை பக்கம் 81-82 வரை கொடுக்கப்படுகின்றது.

## ஒருங்கிணைக்கப்பட்ட இடர்பாடு முகாமைத்துவ குழு

1. திரு. தம்மிக்க பெரேரா- (குழு தலைவர்)
2. திருமதி கேஷலா ஜயவர்தன
3. திருமதி. தயானி பெர்னான்டோ
4. திரு.ஆர்.சிறிவர்தன
5. திரு.ரி.குகன் (பிரதம இடர் முகாமைத்துவ அதிகாரி)
6. திரு.சுமணதாச- (இணக்கப்பாடு அதிகாரி)

ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமை குழுவின் அறிக்கை சபையின் பணிப்பாளர்களின் அறிக்கையை நிறுவுகின்ற பக்கம் 87 இல் கொடுக்கப்படுகின்றது.

## மனித வள மற்றும் சம்பளக் குழு

1. திருமதி. கேஷலா ஜயவர்தன
2. திருமதி. நாணயக்கார
3. கலாநிதி.பட்டகொட
4. திரு.ஆர்.சிறிவர்தன
5. பிரதி பொது முகாமையாளர் மனித வள அபிவிருத்தி மற்றும் நிருவாகம்

## கடன் குழு

1. கலாநிதி. பட்டகொட
2. திரு.ரி.ஏ.ஆரியபால
2. திரு.ஆர்.சிறிவர்தன
3. திருமதி.தயானி பெர்ணாண்டோ
4. திரு.ரி.குகன்

## பணிப்பாளர்கள் கூட்டங்கள்

சபை கூட்டங்கள், கணக்காய்வுக்குழு கூட்டங்கள், ஒருங்கிணைக்கப்பட்ட இடர்பாடு குழு முகாமைத்துவ கூட்டங்கள்

போன்றவற்றை உள்ளடக்கிய பணிப்பாளர்களின் கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் இந்தக் கூட்டங்களில் பணிப்பாளர்களின் வருகை என்பன இந்த வருடாந்த அறிக்கையின் கூட்டுறவு ஆளுமை அறிக்கை பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

## ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் ஈடுபாடு

வங்கியுடனான நேரடியான மற்றும் நேரடியற்ற இரண்டு ஒப்பந்தங்களிலும் பணிப்பாளர்களின் ஈடுபாடு நிதிக்கூற்றுக்களுக்கான அறிக்கையில் குறிப்பு 34 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. பணிப்பாளர்கள் ஏனைய ஒப்பந்தங்களில் அல்லது வங்கியுடனான உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தங்களில் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான ஈடுபாட்டைக் கொண்டிருப்பதில்லை.

## சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கொடுக்கல் வாங்கல்கள்

மேலும் பணிப்பாளர்கள் ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களை வெளியிட்டுள்ளனர். அது நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பில் சேர்க்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் வெளியிட்டுள்ள (LKAS 24) இலங்கை கணக்கியற் தரங்களின் விதிகளில் சம்பந்தப்பட்ட தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களாக வகுக்கப்பட முடியும். பணிப்பாளர்களினால் வெளியிடப்பட்டுள்ள இந்தக் கொடுக்கல்வாங்கல்கள் சபையின் வருடாந்த அறிக்கையின் ஒரு பகுதியாக நிறுவப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 34 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

## பொது முகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி (GM/CEO)

வங்கியின் பொது முகாமையாளரும் பிரதான நிறைவேற்று அதிகாரியுமாவார். அத்துடன் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுகின்றார். சபையின் கூட்டங்களில் வருகை தருவதற்கும் பங்கு கொள்வதற்கும் பொது முகாமையாளருக்கு உரிமை உண்டு.

## மனித வளங்கள்

உயர் தர சேவைகளினூடாக நிலையான பெறுமதியை உருவாக்குவதற்கு செயற்படுகின்ற உயர் ஊக்குவிப்புள்ள அத்துடன் அர்ப்பணிப்புள்ள ஊழியர்களை வங்கி தொடர்ந்து அபிவிருத்தி செய்து பராமரித்தும் வருகின்றது.

## சுற்றாடல் பாதுகாப்பு

வங்கியின் நிலையான அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிக்கு உயிர் நாடியான சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும், உயர்த்துவதற்கும் வங்கி முயற்சிகளை எடுத்துள்ளது. சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கும் அல்லது அச்சுறுத்தலான எந்தவொரு செயற்பாட்டிலும் ஈடுபட்டிருப்பதில்லை.

## அரச நியதிக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் அவர்களது அறிவிக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரை அரசாங்கத்திற்கும் ஊழியர்கள் தொடர்பாகவும் செலுத்த வேண்டிய எல்லா அரச நியதி கொடுப்பனவுகள் உரிய நேரத்தில் செலுத்தப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்வதில் திருப்தியடைந்துள்ளனர்.

## இடர்முகாமைத்துவ உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறை

பணிப்பாளர் சபை இடர்பாடு முகாமைப்படுத்துவதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கின்றது. இந்நோக்கத்திற்காக, வங்கி பணிப்பாளர் சபை வங்கியில் உள்ளககட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைகள் தொடர்பில் திறமையான மற்றும் பரவலான முறையை ஆரம்பித்து அமுல் படுத்தியுமுள்ளது. வங்கி வெளிப்படுத்தியுள்ள இடர்பாடுகளை குறைப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் பொருள் தவறான கூற்றுக்கள் அல்லது நட்டத்திற்கு எதிராக நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு மீள்வடிவமைக்கப்பட்டுள்ளது. வங்கியினால் முகம் கொடுக்கப்படுகின்ற இடர்பாடுகளை இனம் காணுதல், மீள்மதிப்பீடு மற்றும் முகாமைத்துவத்திற்கான நடைபெற்று வருகின்ற செயற்பாடுகளைக் கொண்டுள்ளது. இடர்பாடுகளைக் குறைப்பதற்கு வங்கியினால் எடுக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட மதிப்பீடுகள் பக்கங்கள் 48-52 வரை விபரிக்கப்பட்டுள்ளன.

## உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பாக பணிப்பாளர்களின் கூற்று

நிதி அறிக்கைகள் குறிப்பிட்ட தேவையான கணக்கியற் கோட்பாடுகள் மற்றும் ஒழுங்கமைப்புக்களுக்கு அமைவாக வெளிவாரி நோக்கங்களுக்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் நிதி அறிக்கைகளின் உண்மைத்தன்மை தொடர்பாக நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு நிதி அறிக்கை முறை வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதையும் சபை உறுதி செய்துள்ளது. பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கையின்

ஒருங்கிணைக்கப்பட்ட பகுதியை நிறுவுகின்ற மேற்கூறப்பட்ட அறிக்கை 78-79 பக்கத்தில் கொடுக்கப்படுகின்றது. உள்ள கக்டுப்பாடு தொடர்பாக பணிப்பாளர்களின் கூற்று தொடர்பா கவும் பணிப்பாளர் தலைமை அதிபதியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஓர் உறுதிப்பாட்டு அறிக்கை வருடாந்த அறிக்கையில் பக்கங்கள் 76-79 வரை கொடுக்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவு ஆளுமை

வங்கியின் முகாமைத்துவத்தில், மிகச் சிறந்த கூட்டுறவு ஆளுமை செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் உறுதிப்பாடுகள் தொடர்பாக பணிப்பாளர்கள் அழுத்தத்தை வைத்துள்ளனர்.

அவ்வாறே, இடர்பாட்டு முகாமைத்துவ மதிப்பீடுகளை மேம்படுத்துவதற்கும் பொறுப்பு மற்றும் மாற்றங்களை அபிவிருத்தி செய்வதற்கும் காலத்திற்குக் காலம் முறைகள் மற்றும் அமைப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, அபிவிருத்தி செய்யப்பட்டுமுள்ளது. கூட்டுறவு ஆளுமை தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமிருந்து சபை பெற்றுக் கொண்டுள்ள ஓர் உறுதிப்பாட்டு அறிக்கை பக்கங்கள் 55-74 வரை கொடுக்கப்பட்டுள்ளது.

## சட்டங்கள் விதிகள் மற்றும் எதிர்வுகூறல் தேவைகளுடனான இணக்கப்பாடு

வங்கி எப்பொழுதும் பிரதேச சங்வர்த்தனை வங்கி சட்டம் மற்றும் ஏனைய எல்லா பொருத்தமான சட்டங்கள் மற்றும் விதிகள் அத்துடன் தீர்க்கதரிசன தேவைவுளுடன் இணக்கப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளது.

## கணக்காய்வாளர்கள்

2013 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த நிதி ஆண்டுக்கான வங்கியின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Reasila Jayawardana

**கேஷலா ஜயவர்தன**
தலைவி

# கணக்காய்வுக்குழு அறிக்கை

## கணக்காய்வுக் குழுவின் உள்ளடக்கம்

வங்கியின் கீழ்க்காணும் நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்களை உள்ளடக்கிய குழுவை சபை நியமித்துள்ளது.

| | | |
|---|---|---|
| திரு. தம்மிக பெரேரா | - | தலைவர் |
| கலாநிதி. பி.எம்.எஸ்.பட்டகொட | - | பணிப்பாளர் |
| திருமதி. ஜே.எம்.எஸ்.டி.ரத்நாயக்க | - | பணிப்பாளர் |
| திரு. பி.வி.எஸ்.பத்திரன | - | பணிப்பாளர் |

(4.9.2013 இல் இராஜினாமா செய்துள்ளார்.)

கணக்காய்வுக் குழு சபையின் மூன்று நிறைவேற்றுத்தர மல்லாத பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளது. தேசிய சேமிப்பு வங்கியைப் பிரதிநிதிப்படுத்துகின்ற பணிப்பாளர் குழுவின் தலைவராகப் பணிபுரிகின்றார். பொது முகாமையாளர்/CEO அழைப்பின் பேரில் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்கின்றார். வழமையாக பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் கூட்டங்களில் கலந்து கொள்கின்றார். அரசாங்க கணக்காய்வின் அத்தியட்சகர் ஒரு பார்வையாளராக குழு கூட்டங்களில் கலந்து கொள்ள அழைக்கப்படுகின்றார்.

## தொழிற்பாடுகள்

குழுவின் பிரதான தொழிற்பாடுகள் வங்கியின் உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இணக்கப்பாட்டை மீள் நோக்குதல், மற்றும் கண்காணித்தல் மற்றும் பின்வரும் வழிகளில் பணிப்பாளர் சபைக்கு உதவுவதுமாகும்.

- o வங்கியின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் நிதிஅறிக்கை முறையின் ஒருமைப்பாட்டை நிறுவுதல் உள்ளடக்கம் மற்றும் கண்காணிப்பை மீள்நோக்குதல்.
- o வெளிவாரி மற்றும் உள்ளககணக்காய்வு தொழிற்பாட்டின் நோக்கங்கள் மற்றும் திறமைகளை உறுதிப்படுத்துவதற்கான ஒழுங் குகளைக் கண்காணித்தலும் மீள்நோக்கு தலும்.
- o வங்கியின் உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர்முகாமைத்துவ முறைகளின் போதிய தன்மை மற்றும் திறமையை மீள்நோக்குதல் மற்றும் சிபாரிசுகளைச் செய்தல்.
- o உள்ளக கணக்காய்வு அறிக்கைகள், வெளிவாரி கணக்காய்வு முகாமைத்துவ கடிதங்கள் மற்றும் அதன் பலனாக கணக்காய்வுகளைப்பின் தொடர்தல்.
- o சம்பந்தப்பட்ட ஒழுங்கமைப்பு அதிகார வளங்களுடன் நிதி அறிக்கை தேவைகள் மற்றும் உறவு முறைகளுடன் இணக்கப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான வங்கியின் ஒழுக்க ரீதியான தரங்கள், நடைமுறைகளை மீள்நோக்குதலும் சிபாரிசுகளைச் செய்தலும்.

## கூட்டங்கள்

குழு காலாண்டு அடிப்படையில் கூடுகின்றது. பொதுத் திறைசேரியின் பொது நிறுவனங்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நல்ல ஆளுமையின் பொது நிறுவன வழிகாட்டலின் விதிகளுக்கமைய கணக்காய்வுக் குழு 2013 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதி ஆண்டின் பொழுது நான்கு கூட்டங்களை நடாத்தியுள்ளது. இந்த ஒவ்வொரு கூட்டங்களின் பொழுதும் குழு அங்கத்தவர்களின் வரவு வருடாந்த அறிக்கையின் பக்கம் 75 இலுள்ள அட்டவணையில் கொடுக்கப்படுகின்றது. அவ்வாறே முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்டுள்ள இதன் குறைபாடுகள் மற்றும் பரிகார அளவீடுகள் தொடர்பாக சபை அதன் அபிப்பிரா யங்களை சமர்ப்பித்துள்ளது.

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் மேற்காணும் நோக்கங்களை அடைவதற்கு குழு கீழ்காணும் விவகாரங்களைக் கவனத்திற் கொண்டுள்ளது.

- உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்கு தராதரம் பெற்ற பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஒருவருக்கு வேலை வாய்பளித்தும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் குழாமை நியமித்தும் உள்ளக கணக்காய்வு தொழிற்பாட்டை நிருவகித்து வருகின்றது.
- தேவையான போது உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் சிபாரிசு செய்யப்பட்ட அபிவிருத்திகளை மீள் நோக்குதல்.
- 2013 ஆம் ஆண்டுக்காக அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வு அத்தியாயத்தை மீள்நோக்குகின்றது.
- குழு 2013 ஆம் ஆண்டின் பொழுது உள்ளக கணக்காய்வு அறிக்கைகளை மீள்நோக்கியுள்ளது.
- உள்ளக கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் தொடர்பாக கிளைகளுக்கான தரப்படுத்தல் முறையை மீள்நோக்குதலும் அங்கீகரித்தலும்
- 2012 ஆம் ஆண்டுக்காக வெளிவாரி கணக்காய்வாளர்கள் முகாமைத்துவ கடிதத்தை மீள்நோக்குதலும் சிபாரிசுகளைச் செய்தலும்
- வெளிவாரி கணக்காய்வாளர்களின் கணக்காய்வு கண்டுபிடிப்புக்களை மீள்நோக்குதலும் தேவையான சிபாரிசுகளைச் செய்தலும்

சபை கணக்காய்வுக் குழுவின் வழிகாட்டலின் கீழ் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் பொழுது அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு வேலைத்திட்டம் வங்கியின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் உள்ளக கணக்ாய்வு பிரிவு திறமையற்ற நடைமுறைகள், உள்ளக கட்டுப்பாடுகளை அபிவிருத்தி செய்தல் பரிசீலனை, கட்டுப்பாடுகள் மற்றும் சாத்தியமான முறையில் மோசடி மற்றும் தவறுகளைக் குறைப்பதற்கும் முறையான கணக்காய்வுகள் நடாத்தப்பட்டுள்ளன.

வங்கியின் கணக்ாய்வுக்குழு வங்கியின் நிலையான தன்மை இலாபத்தன்மை மற்றும் அவதானத்துடன் செல்லல் போன்றவற்றை மீள்மதிப்பீடு செய்வதுடன் மேலதிகமாக, வங்கியின் கட்டுப்பாடுகளை மீள்நோக்கியும் பரிசீலனை செய்து வருகின்றது.

ஆகவே, கணக்காய்வுக்குழு வங்கியின் போதிய கட்டுப்பாடுகள் மற்றும் இணக்கபபாடும் அமுலில் உள்ளதுடன் ஒருமைப்பாடு, நிதிஅறிக்கை மறறும் இடர்முகாமைத்துவத்தின் ஆகக்கூடிய தரங்களைப் பராமரித்து வருகின்றது என்ற அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளது.

## தொழிற்துறை சார் ஆலோசனை

குழு அதன் அதிகார வரம்புக்குட்பட்ட விவகாரங்கள் தொடர்பாக வெளிவாரி தொழிற் துறைசார் ஆலோசனையைத் தேடுவதற்குரிய அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

தலைவர்,
கணக்காய்வுக் குழு
எஸ்.டி.என். பெரேரா

# ஒருங்கிணைக்கப்பட்ட இடர்முகாமைத்துவ குழு (IRMC) அறிக்கை

BASELL உடன்படிக்கையுடன் வங்கிகளில் இடர்முகாமைத்துவம் முக்கியமான தொழிற்பாடாகத் திகழ்கின்றது. அவ்வாறே, பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB) இடர்பாடுகள் மற்றும் இலாபத்திற்கிடையிலான மிகுதியை அடைவதன் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்ட பங்குதாரர் பெறுமதி விநியோக நோக்கமாகக் கொண்டுள்ளது. 2013 ஆம் ஆண்டின் பொழுது RDB பலமடைந்துள்ளது. அத்துடன் CBSL மற்றும் BASELL 11 உடன்படிக்கைகளினால் விவரிக்கப்பட்டுள்ள மிகச் சிறந்த செயற்பாடுகளுக்கமைய அதன் செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு வங்கியின் இடர்பாட்டு முகாமைத்துவ கட்டமைப்பை மேலும் வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

IRMC கீழ்க் காணும் ஆறு அங்கத்தவர்களை உள்ளடக்குகின்றது அவற்றில் மூன்று பேர் நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்கள் ஆவர்.

1. திரு.எஸ்.டி.என். பெரேரா- குழுவின் தலைவர்/பணிப்பாளர் (NED)
2. திருமதி. கேஷலா ஜயவர்தன - குழுவின் அங்கத்தவர் / வங்கித் தலைவி ( IND/NED)
3. திருமதி.டி. பெர்னான்டோ - குழுவின் அங்கத்தவர்/பணிப்பாளர் (IND/NED)
4. திரு.ஆர்.சிறிவர்தன - குழுவின் அங்கத்தவர்/GM/வங்கியின் CEO
5. திரு. ரி. குகன் - குழுவின் அங்கத்தவர் / வங்கியின் CRO
6. திரு.டப்ளிவ். சுமனதாச - குழுவின் அங்கத்தவர்/AGM-வங்கியின் இணக்கப்பாடு (IND- சுயேட்சையான பணிப்பாளர் மற்றும் NED- நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்)

DGM கடன் மற்றும் SAGM செயற்பாடுகள் வழமையாக அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர்.

குழுவைப் பிரதிநிதிப்படுத்துகின்ற பணிப்பாளர்களின் சுருக்கமான முகக்குறிப்புக்கள் வருடாந்த அறிக்கையின் பக்கங்கள் 15-20 வரை கொடுக்கப்படுகின்றன சபைக்கான செயலாளர் அவ்வாறே இடர்முகாமைத்துவக் குழுவின் செயலாளராக தொழிற்படுகின்றார். பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள குழுவின் குறிப்பு விதிகளின் பரந்த மட்ட வெளித் தோற்றம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

1. அமுலில் உள்ள பரவலான இடர்பாடு முகாமைத்துவ கட்டமைப்பு, பொருத்தமான இணக்கப்பாடு மற்றும் முறையை வங்கி கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தல்
2. பொருத்தமான இடர்பாடு குறியீட்டாளர் மற்றும் முகாமைத்துவ தகவலினூடாக வங்கிக்கு கடன் திரவநிலை, செயற்பாடு மற்றும் உபாய கீர்த்தி இடர்பாடுகள் என்பவற்றுக்கு வரையறுக்கப்படாதவை உட்பட எல்லா இடர்பாட்டு வகைகளையும் மதிப்பிடுதல்.
3. தூதுக் குழு அதிகார வளங்கள் உருவாக்கப்பட்டதற்கமைய இடர்பாடுகள் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதையும் வங்கியின் கொள்கைகள் மற்றும் ஒழுங்கமைப்பு மற்றும் மேற்பார்வை தேவைகளின் அடிப்படையில் குழுவினால் நிறுவப்பட்ட இடர்பாடு பொறுத்தலை தாண்டி இடர்பாடுகளைக் குறைப் பதற்கு சரியான நடவடிக்கைள் எடுக்கப்பட்டுள்ளன என் பதையும் உறுதிப்படுத்தல்.
4. வங்கியின் இடர்முகாமைத்துவ முறை மற்றும் இடர்முகாமைததுவ தொழிற்பாட்டின் பலமான செயற்பாட்டை கண்காணித்தலும் மதிப்பிடுதலும்.
5. அறியப்பட்டுள்ள உள்வாரியான இடர்பாட்டுக்கு எதிரிடையாக செயற்பாட்டைக் காலத்திற்குக் காலம் மதிப்பிடுதல்.
6. வங்கியின் இணக்கப்பாட்டு அறிக்கையை மீள்நோக்குதலும் அறிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுத்தலும்.
7. ஒன்றிணைக்கப்பட்ட இடர்முகாமைத்துவம் தெடர்பாக விடயங்களை மீள்நோக்குதல்.
8. அடிப்படை 11 விதிப்பட அமுலாக்கல் மற்றும் ஒழுங்கமைப்பு வழிகாட்டல் தொடர்பான முன்னேற்றத்தை மீள்நோக்குதல். இந்த ஆண்டுக்கான குறிப்பு விதிகள் சாதனைகளுக்கு எதிரி டையாக பின்பற்றப்படுகின்ற பரவலான உள்ளடக்க மட்ட அறிக்கையின் (பக்கங்கள் 48-52 வரை)இடர்முகாமைத்துவ பிரிவுக்கு நாம் உங்களது கவனத்தை ஈர்க்கின்றோம்.

2013 ஆம் ஆண்டில் குழு நான்கு தடவைகள் கூடியுள்ளது. அத்துடன் இந்தக் கூட்டங்களில் வருகை வருடாந்த அறிக்கையின் பக்கம் 75 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டங்களில் அடையப் பெற்ற கலந்துரையாடல்களும் முடிவுகளும் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூட்டத்திற்குமான சுருக்க அறிக்கை பணிப்பாளர் சபைக்கு அவர்களது தகவல் மற்றும் ஆலோசனைககாக அவர்களது அடுத்த சபைக் கூட்டத்தில் விநியோகிக் கப்படுகின்றது.

திரு. எஸ்.டி. என். பெரேரா
தலைவர்



"வாழ்க்கையில்
நல்லதைச்
செய்வதற்கு
நம் அனைவருக்கும்
பலமூட்டியது
RDB வங்கியே…"



# நிதித் தகவல்கள்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } FB/M/RDB/FA/2013 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 21 March 2014

**தலைவர்,**
**பிரதேச அபிவிருத்தி வங்கி,**

**பிரதேச அபிவிருத்தி வங்கியின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

பிரதேச அபிவிருத்தி வங்கியின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி அதிகாரச்சட்டத்தின் 33 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) ஆம் பிரிவின் பிரகாரம் வங்கியின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7) (ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

## நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துாவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810 ) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கிற்காக கருத்திற் கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13ம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## அபிப்பிராயம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிரதேச அபிவிருத்தி வங்கியின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**Sgd./H. A. S. SAMARAWEEF**
**AUDITOR GENERAL**

ஒப்பம் : எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# வருமானக் கூற்று

| 31 டிசம்பர் முடிவடைந்த ஆண்டிற்குரியது | குறிப்பு | வங்கி | |
|---|---|---|---|
| | | 2013 | 2012 |
| | | ரூபா | ரூபா |
| **மொத்த வருமானம்** | **4** | **10,994,634,547** | **9,514,802,623** |
| வட்டி வருமானம் | | 10,440,932,854 | 9,049,146,825 |
| வட்டி செலவீனங்கள் | | (5,938,776,452) | (4,612,377,985) |
| **தேறிய வட்டி வருமானம்** | **5** | **4,502,156,402** | **4,436,768,840** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | | 546,761,928 | 464,645,217 |
| கட்டணம் மற்றும் தரகு செலவீனங்கள் | | (73,847,088) | (46,524,259) |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **6** | **472,914,840** | **418,120,958** |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர் பெறுமதியிடப்பட்ட நிதிக்கருவிகளின் தேறிய இலாபம்/நட்டம் | 7 | 69,859 | (194,255) |
| ஏனைய தேறிய செயற்பாட்டு வருமானம் | 8 | 6,939,765 | 1,010,581 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | | **4,982,080,866** | **4,855,124,123** |
| கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பெறுமதியிழப்பு கட்டணம் | 9 | (547,183,528) | (9,452,351) |
| **தேறிய செயற்பாட்டு வருமானம்** | | **4,434,897,338** | **4,846,253,772** |
| **கழி செயற்பாட்டு செலவீனங்கள்** | | | |
| ஆளணிக் கிரயம் | 10 | 2,699,189,913 | 2,488,611,791 |
| அருவச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு | | 32,839,594 | 4,731,869 |
| **வேறு செலவீனங்கள்** | 11 | 1,016,077,938 | 860,483,857 |
| **பெறுமதிசேர் வரிக்கு (VAT) முன்னரான செயற்பாட்டு இலாபம்** | | **686,789,893** | **1,492,426,255** |
| நிதிச்சேவைகளுக்கான பெறுமதிசேர்வரி (VAT) | | (289,777,903) | (425,673,865) |
| **வரிக்கு முன் பெறுமதி சேர் வரிக்கு (VAT) பின்னரான செயற்பாட்டு இலாபம்** | | **397,011,990** | **1,066,752,390** |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | | **397,011,990** | **1,066,752,390** |
| வரிச் செலவீனங்கள் | 12 | (156,218,084) | (521,261,660) |
| **வருடத்திற்கான இலாபம்** | | **240,793,906** | **545,490,730** |
| **ஒரு பங்கிற்கான உழைப்பு** | | | |
| ஒரு பங்கிற்கான உழைப்பு (அடிப்படை) | | 2.19 | 4.96 |

# முற்றடக்க வருமானக்கூற்று

| 31 டிசம்பர் முடிவடைந்த ஆண்டிற்குரியது | குறிப்பு | வங்கி 2013 ரூபா | வங்கி 2012 ரூபா |
|---|---|---|---|
| **ஆண்டிற்குரிய இலாபம்** | | **240,793,906** | **545,490,730** |
| **முற்றடக்கப்பட்ட வருமானம்/(செலவீனம்)** | | | |
| விவரிக்கப்பட்ட நன்மை தரும் திட்டமிடல்களிலான அட்டுறு இலாபங்களும் நட்டங்களும் | 26 | (694,854) | - |
| மேற்குறிப்பிட்டதற்கு பிற்போடப்பட்ட வரியால் ஏற்படும் விளைவு | 22 | 194,559 | - |
| **முற்றடக்கப்பட்ட வருமானம் இவ் ஆண்டுக்குரியது நிகர வரிகள்** | | **(500,295)** | **-** |
| **மொத்த முற்றடக்கப்பட்ட வருமானம் இவ் ஆண்டுக்குரியது** | | **240,293,611** | **545,490,730** |
| **சேரவேண்டியது :** | | | |
| தாய் நிறுவன உரிமையாளர்கள் | | 240,293,611 | 545,490,730 |
| கட்டுப்பாடற்றதான அக்கறை | | - | - |
| | | **240,293,611** | **545,490,730** |

# நிதி நிலைக் கூற்று

| 31 டிசம்பர் முடிவடைந்த ஆண்டிற்குரியது | குறிப்பு | வங்கி | |
|---|---|---|---|
| | | 2013 | 2012 |
| | | ரூபா | ரூபா |
| **சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்கு சமமானவையும் | 15 | 226,501,435 | 202,978,066 |
| வங்கியில் உள்ள மீதி | 16 | 15,620,210,767 | 11,972,103,907 |
| வியாபாரத்திற்கான நிதி சொத்துக்கள் | 17 | 698,759 | 628,900 |
| வங்கிகளிடமிருந்தான கடன்கள் மற்றும் பெற வேண்டியவைகள் | 18 | - | 12,108,219 |
| ஏனைய வாடிக்கையாளரிடமிருந்தான கடன்கள் மற்றும் பெற வேண்டியவைகள் | 19 | 60,490,634,208 | 54,734,881,685 |
| நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள் | 20 | 72,013,872 | 55,441,895 |
| ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 21 | 745,631,756 | 614,955,873 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 22 | 183,619,028 | 94,639,347 |
| ஏனைய சொத்துக்கள் | 23 | 1,444,541,379 | 1,156,254,595 |
| **மொத்த சொத்துக்கள்** | | **78,783,851,205** | **68,843,992,487** |
| பொறுப்புக்கள் | | | |
| வங்கிகளுக்கு கொடுக்க வேண்டிய நிலுவைகள் | 24 | 8,484,636,687 | 6,078,629,948 |
| வேறு வாடிக்கையாளர்களுக்கு கொடுக்க வேண்டிய நிலு-வைகள் | 25 | 62,628,060,626 | 54,669,870,235 |
| ஓய்வுப்பண்பாட்டு கடப்பாடு | 26 | 806,724,857 | 697,674,934 |
| ஏனைய பொறுப்புக்கள் | 27 | 2,744,047,313 | 3,002,800,227 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **74,663,469,483** | **64,448,975,345** |
| உரிமையாண்மை | | | |
| நிர்ணயிக்கப்பட்ட/கூறப்பட்ட மூலதனம் | 28 | 1,099,400,151 | 1,099,400,151 |
| சட்டபூர்வமான ஒதுக்க நிதி | 29 | 506,153,956 | 506,153,956 |
| பகிரப்படாத இலாபங்கள் | 30 | (58,932,243) | (75,428,565) |
| ஏனைய ஒதுக்கங்கள் | 31 | 2,573,759,857 | 2,864,891,600 |
| **பங்குதாரர்களின் மொத்த உரிமையாண்மை** | | **4,120,381,722** | **4,395,017,142** |
| **மொத்த உரிமையாண்மை** | | **4,120,381,722** | **4,395,017,142** |
| **மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | **78,783,851,205** | **68,843,992,487** |
| **நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்** | **33** | **146,618,951** | **163,182,094** |

இந்நிதி கூற்றுக்களை பக்கம் 96 தொடக்கம் 110 வரையுள்ள முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளும் பக்கம் 111 தொடக்கம் 139 வரையுள்ள குறிப்புக்களும் பூரணமாக்கியுள்ளன. அத்துடன் 2007 ஆம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டத்தின்படி இந்நிதிக்கூற்றுக்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

சீ. களுபஹன
நிதி மற்றும் திட்டமிடல் பிரிவு தலைவர்

ஆர். சிறிவர்தன
தலைமை நிறைவேற்று அதிகாரி /
பொது முகாமையாளர்

இந்நிதிக்கூற்றுக்கள் தயாரித்தலுக்கும் சமர்ப்பித்தலுக்கும் இயக்குனர் சபையே பொறுப்பாகும். அத்துடன் இந்நிதிக்கூற்றுக்கள் இயக்குனர் சபையால் உறுதி செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ளது.

கேஷலா ஜயவர்தன
தலைவி

மாதவி ஹேரத்
இயக்குனர்

# காசுப் பாய்ச்சல் கூற்று

| 31 டிசம்பர் முடிவடைந்த ஆண்டிற்குரியது | குறிப்பு | வங்கி 2013 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 686,789,893 | 1,492,426,255 |
| செம்மையாக்கல்கள் : | | | |
| வரிக்கு முன்னரான இலாபத்திலுள்ள காசு அல்லாத நடவடிக்கைகள் | 37 | 857,135,015 | 395,817,656 |
| செயற்பாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் | 38 | (6,662,680,214) | (7,522,470,104) |
| செயற்பாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் | 39 | 10,093,755,223 | 9,243,041,509 |
| விவரிக்கப்பட்ட நன்மை தரும் திட்டமிடல்களுக்கு வழங்கியுள்ள பங்களிபபுக்கள் | | (9,934,129) | (7,288,495) |
| செலுத்தப்பட்ட வரி | | (1,048,628,249) | (937,630,765) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசு** | | **3,916,437,539** | **2,663,896,055** |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசு பாய்ச்சல்கள் | | | |
| ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | | (202,168,393) | (280,165,530) |
| அருவச் சொத்துக்களின் தேறிய கொள்வனவு | | (49,911,156) | (57,943,730) |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் விற்பனையினால் பெறப்பட்ட வருமானம் | | 7,272,239 | 160,076 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த / (உபயோகித்ததில்) தேறிய காசு** | | **(244,807,310)** | **(337,949,184)** |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசு பாய்ச்சல்கள்** | | | |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்கள்** | | - | - |
| **காசும் காசுக்கு சமமானவற்றிலும் உள்ள அதிகரிப்பு (குறைப்பு)** | | **3,671,630,229** | **2,325,946,871** |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை | | 12,175,081,973 | 9,849,135,102 |
| **ஆண்டு இறுதியில் உள்ள காசு மற்றும் காசுக்கு சமமானவை:** | | **15,846,712,202** | **12,175,081,973** |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவைகளை இணைக்கும் கூற்று** | | | |
| மத்திய வங்கியினுடனான காசு மற்றும் மீதிகள் | | 226,501,435 | 202,978,066 |
| வங்கிகளில் உள்ள மீதிகள் | | 15,620,210,767 | 11,972,103,907 |
| | | **15,846,712,202** | **12,175,081,973** |

# உரிமை மாற்றம் பற்றிய கூற்று

| 31 டிசம்பர் முடிவடைந்த ஆண்டிற்குரியது | வங்கி | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | நிர்ணயிக்கப்பட்ட இலாபம் ரூபா | நியதிச்சட்ட ஒதுக்கநிதி ரூபா | விஷேட ஒதுக்க நிதி ரூபா | பொது ஒதுக்க நிதி ரூபா | முதலீட்டு நிதி ரூபா | பகிரப்படாத இலாபங்கள் ரூபா | மொத்தம் ரூபா |
| **01/01/2012 ல் மீதி** | 1,099,400,151 | 504,066,435 | 358,456,763 | 2,026,650,476 | 360,652,351 | (126,875,295) | 4,222,350,881 |
| ஆண்டுக்குரிய மொத்த முற்றடக்க வருமானம் | - | - | - | - | - | 545,490,730 | 545,490,730 |
| சட்டபூர்வமான ஒதுக்க நிதிக்கு மாற்றம் | - | 2,087,521 | - | - | - | (2,087,521) | - |
| விஷேட ஒதுக்க நிதிக்கு மாற்றம் | - | - | 2,087,521 | - | - | (2,087,521) | - |
| பொது ஒதுக்க நிதிக்கு மாற்றம் | - | - | - | 8,350,083 | - | (8,350,083) | - |
| முதலீட்டு நிதிக்கு மாற்றம் | - | - | - | - | 376,865,016 | (376,865,016) | - |
| பணியாளர் நலன்புரி நிதிக்கு மாற்றம் | - | - | - | 22,300,000 | - | - | 22,300,000 |
| பணியாளர் மருத்துவ நிதிக்கு மாற்றம் | - | - | - | 40,166,261 | - | - | 40,166,261 |
| பணியாளர் கடன் நம்பிக்கை நிதிக்கு மாற்றம் | - | - | - | 5,808,739 | - | - | 5,808,739 |
| கொடுக்கவிருக்கும் பங்கிலாபத்திலிருந்து மாற்றம் | - | - | - | 109,940,015 | - | - | 109,940,015 |
| முதலீட்டு நிதியிலிருந்து மாற்றம் | - | - | - | - | (446,385,625) | - | (446,385,625) |
| பங்கிலாபம் | - | - | - | - | - | (104,653,859) | (104,653,859) |
| **31/12/2012 இல் மீதி** | **1,099,400,151** | **506,153,956** | **360,544,284** | **2,213,215,574** | **291,131,742** | **(75,428,565)** | **4,395,017,142** |
| ஆண்டுக்குரிய மொத்த முற்றடக்க வருமானம் | - | - | - | - | - | 240,293,611 | 240,293,611 |
| முதலீட்டு நிதிக்கு மாற்றம் | - | - | - | - | 223,797,289 | (223,797,289) | - |
| முதலீட்டு நிதியிலிருந்து மாற்றம் | - | - | - | - | (514,929,031) | - | (514,929,031) |
| **31/12/2013 இல் மீதி** | **1,099,400,151** | **506,153,956** | **360,544,284** | **2,213,215,574** | **-** | **(58,932,243)** | **4,120,381,722** |

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டிற்குரியது**

## 1. அமைப்பு சார் வணிகத் தகவல்

### 1.1. பொதுவான தகவல்கள்

பிரதேச அபிவிருத்தி வங்கியானது 1985 களில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளாக மாவட்ட மட்டத்தில் காணப்பட்டமை தொடர்பாக அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. 1997ம் ஆண்டில் காணப்பட்ட பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஒன்றிணைக்கப்பட்டு ரஜரட்ட, ருஹுணு, வயம்ப, ஊவா, கந்துரட்ட மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி வங்கிகளாக மாகாண மட்டத்தில் உருவாக்கப்பட்டன எனினும் 2010ம் ஆண்டு மே மாதத்தில் இவ் ஆறு வங்கிகளும் ஒன்றிணைக்கப்பட்டு தேசிய மட்டத்தில் பிரதேச அபிவிருத்தி வங்கி என்ற பெயரில் உருவாக்கப்பட்டது. இவ் வங்கியானது 2008ம் ஆண்டு 41ம் இலக்க சட்டத்தின் கீழ் ஒரு சட்ட ரீதியான அமைப்பாக உருவாக்கப்பட்டது. வங்கியின் பதிவு செய்த அலுவலகமானது இலக்கம் 933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி எனும் முகவரியில் அமையப்பெற்றுள்ளது.

நிலையான, பயிற்சி பெறும் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஊழியரின் பலமானது 31 டிசம்பர் 2013 ல் 3139 ஆக உயர்ந்துள்ளது. (31 டிசம்பர் 2012 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை 2973 ஆகும்)

### 1.2. பிரதான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

ஆண்டு காலப்பகுதியில் வங்கியின் பிரதான செயற்பாடுகள் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுக்கும் வகையில் வங்கியானது விவசாயம், கைத்தொழில், வியாபாரம், வர்த்தகம், கால்நடை, மீன்பிடி நடவடிக்கைகளை ஊக்குவித்தலுடன் மகளிர் மேம்படுத்தல் மற்றும் பிரதானமாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நுண் நிதி அமைப்புகளிற்கு நிதி சார் உதவியாளராகவும் கணப்படுகிறது.

## 2. கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.1. உடன்பாட்டுக் கூற்று

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கையின் கணக்கீட்டு நியமங்களிற்கேற்ப 2013ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி உள்ளவாறான மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான கூற்று, முற்றடக்க வருமான கூற்று, நிதிநிலைக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமைமாற்றம் பற்றிய கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் (SLFRS's/ LKAS's) தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 1998ம் ஆண்டு 30ம் இலக்க வங்கிச்சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளது.

### 2.2. தயாரித்தலுக்கான அடிப்படை

இந்நிதிக்கூற்றுகள் நியாயமான பெறுமதியில் விற்பனைக்குத் தயாராகவுள்ள முதலீடுகள் பெறவேண்டிய நிதி ஆதனங்கள், விற்பனைக்காக வைத்துள்ள ஏனைய நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் இலாப நட்டங்களினூடாக நியாயமான பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்ட நிதிச்சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தவிர்ந்த அனைத்தும் வரலாற்று கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது. நிதி கூற்றுக்கள் யாவும் இலங்கை ரூபாவின் பெறுமதியில் காட்டப்பட்டுள்ளதோடு, தனியாக குறிப்பிட்டு கூறப்படாதவிடத்து சகல பெறுமதிகளும் கிட்டிய ரூபாவிற்கு மட்டம் தட்டப்பட்டுள்ளன.

### 2.3. இயக்குனர்களால் நிதிக்கூற்றுக்கள் அனுமதிக்கப்படல்

2013ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை 2014ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ம் திகதி வெளிப்படுத்த இயக்குனர் சபையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 2.4. தொழிற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தும் நாணயம்

நிதிக்கூற்றுக்கள் அனைத்தும் இலங்கை ரூபாவினாலேயே காட்டப்பட்டுள்ளதுடன் வங்கியின் பொருளாதார சூழலில் பயன்படுத்தும் நாணயமும் இதுவாகும். இப்பெறுமதிகள் தனியாக குறிப்பிட்டு காட்டப்படாதவிடத்து சகல பெறுமதிகளும் கிட்டிய ரூபாவிற்கு மட்டம் தட்டப்பட்டுள்ளன.

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டிற்குரியது**

## 2.5. நிதிக்கூற்றுக்களை முன்னிலைப்படுத்தல்

வங்கியின் நிதி நிலைமைக்கூற்றில் உள்ள அம்சங்கள் அவற்றின் தன்மைகளுக்கு ஏற்றவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவ் அம்சங்களின் திரவத்தன்மை ஒழுங்கில் பட்டியலிடப்பட்டுள்ளன. அத்துடன் இந்நிதிக்கூற்றுக்களில் பணவீக்க காரணிகள் தொடர்பான எந்தவொரு சரிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்படவில்லை. குறிப்பு இலக்கம் 41 இல் அறிக்கையிடல் திகதியிலிருந்து 12 மாதங்களினுள் பெற்றுக் கொள்ளக்கூடியவை. அல்லது தீர்க்கப்படக்கூடியவை (நடைமுறை) தொடர்பான மற்றும் 12 மாதங்களின் பின்னர் பெற்றுக்கொள்ளக்கூடியவை அல்லது தீர்க்கப்படக்கூடியவை (நடைமுறை அல்லா) தொடர்பான தகவல்கள் பகுத்தாராயப்பட்டுள்ளது.

## 2.6. பொருண்மைத் தன்மை மற்றும் ஒருங்கிணைத்தல்

நிதிக்கூற்றுக்களை முன்னிலைப்படுத்தல் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 1ற்கு ஏற்றவாறு ஒவ்வொரு பொருண்மைத்தன்மை வாய்ந்த மற்றும் ஒரே வகையான அம்சங்கள் தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் பொருண்மைத்தன்மையை கொண்ட மற்றும் ஒரே வகையற்ற அல்லது ஒரே வகையான செயற்பாடுகளை கொண்டிராத அம்சங்களும் தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நிதி நிலைமைக்கூற்றில் நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களானவை அங்கீகரிக்கப்பட்ட பெறுமதிகளை சட்ட ரீதியாக ஈடு செய்வதற்கு உரிமையுள்ள போது மற்றும் ஒரு தேறிய அடிப்படையில் தீர்ப்பதற்கு ஆர்வம் உள்ள போது மாத்திரம் ஈடு செய்யப்பட்டு தேறிய பெறுமதிகளில் காட்டப்பட்டுள்ளதுடன் அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளவாறாகவே காட்டப்பட்டுள்ளன. வருமானங்கள் மற்றும் செலவீனங்களானவை யாதாயினும் ஒரு கணக்கீட்டு நியமனத்திற்கு ஏற்றவாறு அல்லது அதன் விளக்கவுரைப்படி அனுமதிக்கப்படாதவிடத்து மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பாக வெளிப்படாதவிடத்து வருமானக்கூற்றில் ஈடு செய்யப்படவில்லை.

## 2.7. ஒப்பீட்டுத் தகவல்

ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் முன்னிலைப்படுத்தலில் ஒப்பீட்டுத்தகவல்களாகவே மாற்றப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் தேவைக்கேற்றவாறு மாற்றப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மாற்றங்கள் தொடர்பாக குறிப்பு 32 இல் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

## 2.8. முக்கிய கணக்கீட்டுத் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

நிதிக்கூற்றுக்கள் முன்னிலைப்படுத்தலில் இலங்கை கணக்கீட்டு நியமத் தேவைக்கேற்றவாறு முகாமைத்துவத்தின் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களானவை கணக்கீட்டு கொள்கைகள் உள்ளடக்கத்தையும் அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவீனங்கள் என்பனவற்றையும் தாக்கத்திற்குட்படுத்தும் எவ்வாறாயினும் மதிப்பீடுகள் சில சந்தர்ப்பங்களில் உண்மையான பெறுபேறுகளுடன் வேறுபட்டுக் காணப்படும்.

மதிப்பீடுகளும் எடுகோள்களும் தொடர்ந்து செல்லும் முறையில் மதிப்புரைக்கப்படுவதுடன் இம் மதிப்பீடுகள் எதிர்காலத்தில் ஏதேனும் பாதிப்புகள் ஏற்படும் போது அக்காலத்தில் மீள் பார்வை செய்யப்படும்.

வங்கியின் கணக்கீட்டு கொள்கையின்படி முக்கிய மதிப்பீடுகள் நிச்சயமற்ற மற்றும் கஷ்டமான தீர்ப்புகள் வழங்கும் செயற்பாட்டில் முகாமைத்துவமானது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பின்வரும் தீர்மானிப்புகளை மேற்கொண்டுள்ளது.

### 2.8.1. தொடர்ந்து இயங்கும் தன்மை

வங்கியினுடைய முகாமைத்துவமானது தொடர்ந்து இயங்கும் தன்மையை உறுதிபடுத்துவதற்காக வங்கியின் நடவடிக்கைகளை தொடர்ந்து இயக்குவதற்கான இயலுமையை கொண்டிருக்கின்றதா என்ற கருத்தில் மதிப்பீடு ஒன்றை நடாத்தி அது தொடர்பில் வங்கியானது கட்புலனாகக்கூடிய எதிர்காலம் வரையில் தொடர்ந்து இயக்குவதற்கான வளங்களை கொண்டுள்ளதைக் கண்டு திருப்தி அடைந்துள்ளது. மேலும் வங்கியினுடைய தொடர்ச்சித் தன்மையில் முக்கியமான ஐயப்பாட்டினை ஏற்படுத்தக்கூடியவாறு எந்தவொரு நிச்சயமற்ற தன்மையினையும் பற்றி வங்கி அறிந்திருக்கவில்லை. எனவே, நிதிக்கூற்றுக்களானவை தொடர்ந்தியங்கும் தன்மையில் தொடர்ச்சியாகவும் தயாரிக்கப்படும்.

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டிற்குரியது**

### 2.8.2. கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான பெறுமதியிழப்பு நட்டங்கள்

இக்கூட்டு மதிப்பீடானது கடன் சேர்க்கைகள் (நிலுவை மட்டங்கள் கடன் வகைகள் முதலானவை) இடர் கூட்டின் விளைவு தொடர்பான தீர்வுகளையும் பொருளாதாரத்தரவுகள் என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.

வரலாற்று நட்ட அனுபவத்தை காண வங்கியானது தேறிய பாய்ச்சல் வீத முறையை கையாள்கின்றது.

கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான பெறுமதியிழப்பு, நட்டங்கள் தொடர்பான விபரங்கள் குறிப்பு இல. 19ல் காட்டப்பட்டுள்ளதுடன் இவை தொடர்பான விளக்கமான தகவல்கள் இல. 42ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 2.8.3. பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களானவை வரி இழப்புகள் தொடர்பில் எதிர்காலத்தில் வரி இழப்புகளைத் தீர்ப்பதற்கான மற்றும் வரி இலாபங்கள் கிடைப்பதற்கான நிகழ்தகவின் அளவிலேயே அங்கீகரிக்கப்படுகின்றன. அங்கீகரிக்கத்தக்க பிற்போடப்பட்ட வரியின் அளவினைத் தீர்மானிப்பதற்கு சாத்தியமான காலம், எதிர்கால வரியிடத்தக்க இலாபங்கள் மற்றும் எதிர்கால வரித்திட்டமிடல் தந்திரோபாயங்கள் என்பனவற்றின் அடிப்படையிலான ஒரு தீர்மானம் அவசியமானதாகும்.

### 2.8.4. நன்மை கட்டுப்பாட்டுத் திட்டங்கள்

நன்மை கட்டுப்பாட்டு திட்டங்களின் கிரயம் மற்றும் அவற்றுக்கான கடப்பாடுகளின் இன்றைய பெறுமதிகள் உண்மையான பெறுமதியிலேயே தீர்மானிக்கப்படுகின்றது. இப்பெறுமதியானது கழிவுகள் தொடர்பான ஊகிப்புகள், சொத்துகளிலான திரும்பல் வீதங்கள், எதிர்கால சம்பள உயர்வுகள், இறப்பு வீதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புகள் என்பனவற்றை உள்ளடக்கியதாகும். எனினும் இவை நீண்டகால திட்டங்களாக காணப்படுவதினால் அத்தகைய மதிப்பீடுகள் நிச்சயமற்றதாக காணப்படுவதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன. அனைத்து ஊகிப்புகளும் அறிக்கைபடுத்தும் தினத்தில் விமர்சனங்களுக்கு உட்படும்.

இலங்கை அரசாங்கத்தின் முதிர்ச்சி எதிர்வுகூறப்பட்ட பிணைகளின் வட்டி வீதங்களுக்கு இணங்கும் வகையில் நன்மை கட்டுப்பாட்டு திட்டங்களுக்கான கால எல்லையும் இணங்குவதனால் இதன் மூலம் சரியான கழிவு வீதத்தை தீர்மானிக்கலாம் என முகாமையாளர்கள் ஆலோசிக்கின்றனர். எனினும் இறப்பு வீதம் தீர்மானிப்பதில் இறப்பு தகவல் மேசை அடிப்படையாவதுடன் எதிர்கால ஊதிய உயர்வு மற்றும் ஓய்வூதிய உயர்வு என்பன எதிர்கால பணவீக்க வீதங்களிலும் வங்கியின் எதிர்கால ஊதிய உயர்வு வீதங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும்.

### 2.8.5. ஆதனங்கள் மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம்

வங்கியானது ஒவ்வொரு அறிக்யைிடல் திகதியிலான எஞ்சிய பெறுமதிகள், பயன்தரு ஆயுட்காலம் மற்றும் சொத்துக்களை பெறுமானத் தேய்விடும் முறை என்பனவற்றினை மீளாய்வு செய்கிறது. முகாமைத் தீர்மானமானது இப்பெறுமதிகளின் மதிப்பீடு, வீதங்கள் மற்றும் முறைமைகள் என்பவற்றில் மேற்கொள்ளப்படுவதோடு இவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டவையாகக் காணப்படுகின்றன.

### 2.8.6. ஒப்புறுதிகளும் நிகழத்தக்கவையும்

அறியப்பட்ட அனைத்து பொறுப்புக்களின் தொகையை தீர்மானிப்பதற்காக அனைத்து கண்டுகொள்ளக்கூடிய இடர்களும் கணக்கீட்டுக்கு உட்படுத்தப்பட்டன.

நிகழத்தக்க பொறுப்புகள் ஆனது சாத்தியமான பொறுப்பொன்றாயினும் அதன் நடப்புத்தன்மை நிச்சயமற்ற நிகழ்வுகள் அல்லது தற்போதைய கடப்பாடுகளினாலேயே உறுதி செய்யப்படும். எனினும் பொருளாதார நன்மையானது சாத்தியமற்றது அல்லது நம்பகமான முறையில் அளவிட முடியாத ஒன்றாகும். நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதி நிலைமைக்கூற்றில் இணைப்பதற்கு அங்கீகரிக்கப்படாத போதும் அவை சொற்பமான அளவு இல்லாவிடின் அவற்றை நிதிக்கூற்றுக்களுடன் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## 3. முக்கிய கணக்கீட்டுத் கொள்கைகளின் சுருக்கம்

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது குழு மற்றும் வங்கி பின்பற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் பின்வருமாறு உள்ளடக்கப்படுகின்றன. கணக்கீட்டு கொள்கைகள் குறிப்பிட்டு காட்டப்படாதவிடத்து இந்நிதிக்கூறுக்களில் காட்டப்பட்டுள்ள சகல காலப்பகுதிகளிலும் நிலை மாறாது பின்பற்றப்பட்டுள்ளது.

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டிற்குரியது**

### 3.1. காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசு மற்றும் காசுக்கு சமமானவற்றுள் கையிலுள்ள காசு, வங்கிகளில் உள்ள மீதிகள் மற்றும் அழைப்பு மற்றும் குறுகியகால அறிவிப்பால் மீட்கத்தக்க பணம் என்பவை உள்ளடக்கப்பட்டுள்ளது.

காசு மற்றும் காசுக்கு சமமானவை நிதிநிலைமைக்கூற்றில் தேய்வுக் கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றது.

காசு மற்றும் காசுக்கு சமமானவை பற்றிய விவரமான தகவல்கள் நிதிகூற்றுக்களுக்கான குறிப்புகளில் இல. 15 மற்றும் இல. 16 இல் காணப்படுகின்றது.

காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக காசு மற்றும் காசுக்கு சமமானவை காசு, தேறிய பாதகமான மீதிகளை உள்ளடக்குவதுடன் மேற்கூறப்பட்ட வரைவிலக்கணப்படி குறுகியகால வைப்புக்களையும் உள்ளடக்குகிறது.

### 3.2. நிதி ஆதனங்கள் - முதன்முறை அங்கீகரித்தலும் பிற்கால அளவீடுகளும்

#### 3.2.1. அங்கீகரிக்கப்படும் திகதி

சகல நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் முதன் முதலில் வர்த்தகத் திகதி ஒன்றில் அங்கீகரிக்கப்படும். உதாரணமாக வங்கியானது குறித்த ஆதனத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு ஒரு தரப்பாகும் வேளை இது ஒழுங்கு முறை வர்த்தகத்தினை அதாவது சந்தை விதிகள் பிரமாணங்கள் என்பவற்றால் பரிந்துரைக்கப்பட்டபடி குறித்த காலப் பரப்பினுள் கையளிப்பு செய்யப்பட வேண்டிய கொள்வனவுகள் மற்றும் விற்பனைகளை உள்ளடக்கும்.

#### 3.2.2. நிதி ஆதனங்களின் மீள்வகைப்படுத்தல் மற்றும் முதன்முறை மதிப்பிடல்

நிதி ஆதனங்களின் முதன் முறை அங்கீகாரத்தின் போதான வகைப்படுத்தலானது அவற்றின் பண்புகள், முகாமைத்துவத்தின் நோக்கம் மற்றும் அவற்றைக் கொள்வனவு செய்ய இருக்கும் எதிர்பார்க்கை என்பனவற்றில் தங்கியுள்ளது. நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் இலாப நட்டங்களின் ஊடாக அவற்றின் நியாய பெறுமதியில் மதப்பீடு செய்யப்படும் சந்தர்ப்பங்கள் தவிர, அனைத்து நிதி ஆதனங்களும் முதன் முறையாக அவற்றின் நியாய பெறுமதியோடு கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் சேர்ந்த பெறுமதியில் மதிப்பீடு செய்யப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS - 39 (நிதி ஆதனங்கள் : அங்கீகரித்தல் மற்றும் அளவிடுதல்) ற்கு அமைய இலாப நட்டங்களின் ஊடாக அவற்றின் நியாய பெறுமதியில் நிதிச்சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் மதிப்பிடல் தவிர்ந்த அனைத்து நிதி ஆதனங்களும் முதலில் அவற்றின் நியாயப்பெறுமதியுடன் கொடுக்கல் வாங்கல் கிரயத்தை சேர்த்து கணிக்கப்படும். அத்துடன் அவை நேரடியாக நிதி ஆதனங்களின் கொள்வனவில் அல்லது விற்பனையில் நேரடியாக சுமத்தப்படும் இலாப நட்டங்களின் ஊடாக அவற்றின் நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் கொடுக்கல் வாங்கல் கிரயத்தின் தொடர்பாக வருமானக் கூற்றில் பங்கீடு செய்யப்படும்.

#### 3.2.3. வகைப்படுத்தல் மற்றும் நிதிச் சொத்துக்களின் தொடர்ந்து வரும் அளவீடுகள்

தொடர்ந்து வரும் நிதிச் சொத்துக்களின் அளவீடானது அவற்றின் வகைப்படுத்தலிலேயே தங்கியுள்ளது.

#### 3.2.3.1. இலாப நட்டங்களினூடாக நியாயமான பெறுமதியிலான நிதிச்சொத்துக்கள்

நிதிச்சொத்து ஒன்றானது விற்பனை நோக்கத்திற்காக வைத்துள்ள போது அல்லது இலாப நட்டங்களின் சீர் பெறுமதியில் பதிவு செய்யப்படும் போது அது இலாப நட்டங்களினூடாக நியாய பெறுமதியிலானதாக வகைப்படுத்தப்படும்.

#### 3.2.3.2. விற்பனைக்காக வைத்துள்ள நிதிச்சொத்துக்கள்

விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்களானவை நிதி நிலமைக்கூற்றில் அவற்றின் நியாயமான பெறுமதியில் பதிவு செய்யப்படும். நியாய பெறுமதியிலான மாற்றமானது தேறிய வியாபார வருமானத்தில் அங்கீகரிக்கப்படும் பங்கிலாப வருமானம் அல்லது செலவானது ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக அல்லது கொடுப்பனவுக்கான உரிமை உருவாக்கப்படும் போது தேறிய வியாபார வருமானத்தில் பதிவு செய்யப்படும்.

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டிற்குரியது**

இலாப நட்டங்களினூடான நியாய பெறுமதியிலான நிதிச் சொத்துக்களானவை நிதி நிலமைக்கூற்றில் அவற்றின் நியாயமான பெறுமதியில் பதிவு செய்யப்படும். நியாயமான பெறுமதியிலான மாற்றமானது 'இலாப நட்டங்களினூடாக நியாய பெறுமதியிலான நிதி ஆதனங்களின் மீதான தேறிய பெறுகை அல்லது நட்டம்" எனப் பதிவு செய்யப்படும். பெறப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட வட்டியானது விளைவு வட்டி வீத முறை அடிப்படையில் "வட்டி" வருமானம் அல்லது வட்டிச் செலவினம் என்றவாறு முறையே காட்டப்படும் அதேவேளை பங்கிலாப வருமானமானது கொடுப்பனவுக்கான உரிமை உருவாக்கப்பட்டதும் 'ஏனைய செயற்பாட்டு வருமானமாக' காட்டப்படும்.

### 3.2.3.3. முதிர்வு வரை வைத்திருக்கப்படும் நிதி முதலீடுகள்

முதிர்வு வரை வைத்திருக்கப்படும் நிதி முதலீடுகளானவை வங்கியானது முதிர்வு வரை வைத்திருப்பதற்கான விருப்பமும் இயலுமையும் கொண்ட நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்வு கொண்ட பெறுமதி அற்ற நிதிச்சொத்துக்கள் ஆகும். முதன் முறை அங்கீகாரத்திற்கு பிறகு, முதிர்வு வரை வைத்திருக்கப்படும் நிதி முதலீடுகளானவை விளைவு வட்டி வீத முறையைப் பயன்படுத்தி கணிக்கப்பட்ட தேய்வுக்குட்பட்ட பெறுமதியில் பெறுமதி இழப்புகள் சீராக்கப்பட்டு அளவீடு செய்யப்படும். தேய்வுக்குட்பட்ட பெறுமதியானது கொள்வனவின் போதான வட்டங்கள் அல்லது கழிவுகளை மற்றும் விளைவு வட்டி வீதத்தின் உள்ளார்த்தமான கட்டணங்களை கருத்தில் எடுத்து கணிக்கப்படும். தேய்வினது வருமான கூற்றில் வட்டி வருமானமாக வெளிப்படுத்தப்படும்.

வங்கியானது பாரிய பெறுமதியல்லாத முதிர்வு வரை வைத்திருக்கப்படும் நிதி முதலீடுகளை அவற்றின் முதிர்விற்கு முன்னதாக மீள் வகைப்படுத்தல் அல்லது விற்பனை செய்ய வேண்டி இருப்பின் (சில விஷேட சந்தர்ப்பங்கள் தவிர) அவ்வகை முதலீடுகள் முழுவதும் தரம் குறைக்கப்பட்டு விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவை என மீள் வகைப்படுத்தப்பட வேண்டும். மேலும், தொடர்ந்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு வங்கியானது எந்தவொரு நிதிச் சொத்தினையும் முதிர்வு வரை வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்துவதிலிருந்து தடுக்கப்படுகிறது.

### 3.2.3.4. வங்கிகளிலிருந்து கிடைக்க வேண்டியவை மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்தான கடன்களும் பெற வேண்டியவைகளும்

வங்கிகளிலிருந்து கிடைக்க வேண்டியவை மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்தான வேண்டிய கடன்களும் பெற வேண்டியவைகளானவை தொழிற்பாடு சந்தை ஒன்றில் நிரற் படுத்தப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெறுமதியல்லாத நிதிச் சொத்துக்கள் ஆகும். எனினும் இவை பின்வருவனவற்றை உள்ளடக்காது உள்ளது.

- வங்கியானது உடனடியாக அல்லது கிட்டிய காலப்பகுதியில் விற்க விரும்புபவை மற்றும் வங்கியானது முதற் தடவை அங்கீகரிப்பின் போதே இலாப நட்டங்களினூடாக நியாய பெறுமதியில் மதிப்பிட்டவை.
- வங்கியானது முதற் தடவை அங்கீகரிப்பின் போதே விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவை என வகைப்படுத்தியவை.
- கடன் இழப்பு தவிர ஏனைய காரணங்களால் வங்கியானது தனது ஆரம்ப முதலீட்டினை பெற வகைப்படுத்தியவை.

முதன் முறை அங்கீகாரத்தின் பொது வங்கிகளில் இருந்து கிடைக்க வேண்டிய தொகைகள் மற்றும் வாடிக்கையாளர்களிடமிருந்தான கடன்கள் மற்றும் பெற வேண்டியவைகளானவை பிற்காலங்களில் விளைவு வட்டி வீத முறையைப் பயன்படுத்தி, தேய்வு செய்யப்பட்ட பெறுமதியில் பெறுமதி இழப்புக்கள் நீக்கப்பட்ட பெறுமதியில் மதிப்பிடப்படும். தேய்வு செய்யப்பட்ட பெறுமதியானது கொள்வனவின் போதான வட்டங்கள் அல்லது கழிவுகளை மற்றும் விளைவு வட்டி வீதத்தின் உள்ளார்த்தமான கட்டணங்களை கருத்தில் எடுத்து கணிக்கப்படும். தேய்வானது வருமானக்கூற்றில் வட்டி வருமானமாக பதியப்படுவதுடன் பெறுமதியிழப்பிலிருந்து ஏற்படும் நட்டங்களை வருமான கூற்றில் அறவிட வேண்டியவை மற்றும் கடன்களில் இருந்து ஏற்படும் பெறுமதியிழப்பு இலாபம் (நட்டம்) இன் கீழ் வெளிப்படுத்த இயலும்.

### 3.2.3.5. விற்பனைக்குத் தயாராகவுள்ள நிதிமு தலீடுகள்

விற்பனைக்குத் தயாராகவுள்ள நிதி முதலீடுகளானவை உரிமை மற்றும் கடன் பத்திரங்களை உள்ளடக்கி உள்ளன. வணிக நடவடிக்கைகளுக்கானவை என வகைப்படுத்தப்படாத மற்றும் இலாப நட்டங்களூடாக

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டிற்குரியது**

நியாயமான பெறுமதி அனுசரிக்கப்படாத உரிமை முதலீடுகளானவை விற்பனைக்குத் தயாரானவை என வகைப்படுத்தப்படுகின்றன.

### 3.2.4. வழங்கப்பட்ட கடன் பத்திரங்கள் மற்றும் கடனாகப் பெறப்பட்ட நிதிகள்

வங்கியால் வழங்கப்பட்ட இலாப நட்டங்களின் ஊடாக நியாயப் பெறுமதி அனுசரிக்கப்படாத நிதி ஆதனங்களானவை வங்கியானது ஒன்றில் காசினை வழங்குவதன் மூலமோ அல்லது விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்களின் கீழ் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்ட வேறு நிதிச் சொத்துக்களினை வழங்குவதன் மூலமோ தீர்க்கப்படக்கூடிய ஒப்பந்த உரித்தாளரின் சாரம் அல்லது ஒரு குறிப்பிட்ட தொகையான உரிமைப் பங்குகளிற்காக குறித்த தொகையான காசு அல்லது மற்றொரு நிதிச் சொத்தினை பரிமாற்றம் செய்தல் தவிர்ந்த பொறுப்பு ஒன்றினை ஏற்படுத்துகின்றன.

முதன் முறை கணக்கீட்டின் பின் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் கடன் பெறுகைகளானவை தேய்வு செய்யப்பட்ட பெறுமதியில் விளை திறன் வாய்ந்த வட்டி வீத முறையைப் பயன்படுத்தி பிற்காலங்களில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. தேய்வு செய்யப்பட்ட பெறுமதியானது, வழங்கலின் போதான வட்டம் அல்லது கழிவுகள் மற்றும் விளைதிறன் வாய்ந்த வட்டி வீதத்தின் உள்ளார்ந்த பகுதிகளாகக் காணப்படக்கூடிய செலவுகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு கணிப்பிடப்படுகின்றன.

### 3.2.5. நிதிச் சொத்துக்களின் மீள் வகைப்படுத்தல்

வங்கியானது சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் மூலச்சொத்துக்கள் மூலம் பெறுமதி கணிக்கப்படாத நிதி சொத்துக்களினை வர்த்தக நோக்கத்திற்கான முதலீடுகள் என்ற வகைப்படுத்தலில் இருந்து விற்பனைக்கு தயாராகவுள்ள முதலீடுகளாக கடன்கள் மற்றும் பெற வேண்டியவைகளாக அல்லது முதிர்வு வரை வைத்திருக்கப்படுபவையாக மீள வகைப்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திகதியில் இருந்து சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் விற்பனைக்கு தயாராகவுள்ள நிதி ஆதனங்களை கடன்கள் மற்றும் பெற வேண்டியவைகளாக மீள வகைப்படுத்தவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மீள வகைப்படுத்தலானது மீள் வகைப்படுத்தப்பட்ட திகதியில் நியாயப் பெறுமதியில் பதிவு செய்யப்படும். அப்பெறுமதியே புதிய தேய்வு செய்யப்பட்ட பெறுமதியாகவும் கொள்ளப்படும்.

விற்பனைக்கானது என மீள் வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களின் முன்னர் உரித்தில் உணரப்பட்ட இலாபங்கள் மற்றும் நட்டங்களானவை விளைவு வட்டி வீத முறையைப் பயன்படுத்தி மிகுதியாகவுள்ள ஆயட்காலத்திற்கு தேய்வு செய்யப்படும். புதிய தேய்வு செய்யப்பட்ட பெறுமதிக்கும் எதிர்பார்க்கப்படும் காசுப்பாய்ச்சல்களிற்கும் இடையில் ஏதேனும் வேறுபாடுகள் இருப்பின் அவையும் விளைவு வட்டிவீத முறையைப் பயன்படுத்தி எஞ்சியுள்ள ஆயட்காலம் முழுதும் தேய்வு செய்யப்படும். குறித்த சொத்தானது பிற்காலத்தில் பெறுமதி இழப்பு செய்யத் தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பத்தில் உரிமையில் பதிவு செய்யப்பட்ட தொகையானது வருமானக் கூற்றிற்கு மீளளிக்கப்படும்.

மீள் வகைப்படுத்தலானது முகாமைத்துவத்தின் தெரிவாக இருப்பதோடு, அது ஒவ்வொரு ஆதனங்களிற்கும் தனித்தனியாக தீர்மானிக்கப்படும். வங்கியானது முதற் தடவை உணரப்பட்ட பின்னர் எந்தவொரு நிதி ஆதனத்தையும் இலாப நட்டங்களின் ஊடாக சீர் பெறுமதியைப் பதிவளிக்கும் வகையில் மீள் மதிப்பீடு செய்யமாட்டாது.

### 3.3. நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் அங்கீகார விலக்கல்

### 3.3.1. நிதிச் சொத்துக்கள்

நிதிச் சொத்து ஒன்றினது (அல்லது நிதிச்சொத்து ஒன்றினது பகுதியோ அல்லது ஒரே வகையான நிதிச் சொத்துக்களின் தொகுதியோ) அங்கீகாரம் விலக்கப்பட்டும் சந்தர்ப்பங்களானவை வருமாறு

- காலாவதியான சொத்துக்களில் இருந்து காசுப் பாய்ச்சல்களை பெற்றுக் கொள்வதற்கான உரிமையுள்ள போது.
- பெறப்படும் காசுப்பாய்ச்சலினை எந்தவொரு தாமதமும் இன்றி முழுமையாக ஒரு மூன்றாம் தரப்பிற்கு செலுத்தும் வகையிலான பொறுப்பு ஒன்றினை விட்டுக்கொடுப்பு ஒப்பந்தம் ஒன்றின் மூலம் ஏற்றுக் கொண்டுள்ளபோது

மேல் குறிப்பிட்டவற்றுடன் பின்வருவனவற்றில்

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டிற்குரியது**

- வங்கியானது சொத்துக்கள் தொடர்பான அனைத்து வகையான இடர்கள் மற்றும் பெறுமதிகளை பாரியளவிற்கு மாற்றத்திற்குட்பட்டுள்ள போதோ

  அல்லது

- வங்கியானது சொத்துக்கள் தொடர்பான சகல வகையான இடர்கள் மற்றும் பெறுமதிகளை மாற்றம் செய்யாதபோது மற்றும் வைத்துக்கொள்ளாதபோது அச்சொத்துக்களின் கட்டுப்பாட்டை மட்டும் மாற்றம் செய்யும்போது.

வங்கியானது தனது சொத்துக்களில் இருந்து காசுப்பாய்ச்சல்களை பெற்றுக் கொள்வதற்கான உரிமையுள்ள போது அல்லது விட்டுக்கொடுப்பு ஒப்பந்தம் ஒன்றிற்குள் உள்வாங்கும் போதும் வங்கியானது சொத்துக்கள் தொடர்பான சகல வகையான இடர்கள் மற்றும் பெறுமதிகளை மாற்றம் செய்யாதபோது, மற்றும் வைத்துக்கொள்ளாதபோதும் சொத்துக்களின் கட்டுப்பாட்டை மாற்றம் செய்யாத போதும் வங்கியானது சொத்தின் மீதான ஈடுபாட்டை விஸ்தரித்திருப்பது காணக்கூடியதாக உள்ளது. இது தொடர்பில் வங்கியும் தொடர்புபட்ட பொறுப்பு ஒன்றில் காணப்படுகிறது. மாற்றம் செய்யப்பட்ட சொத்தினதும் தொடர்புபட்ட பொறுப்பினதும் அளவானது வங்கியிடம் காணப்படும் உரிமைகள் மற்றும் பொறுப்புக்களின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது.

சொத்தின் மீதான தொடர்ச்சியான ஈடுபாடானது மாற்றப்பட்ட சொத்தின் மீது உத்தரவாதியாளனாவதுடன் அதன் பெறமதியானது உண்மைப் பெறுமதிகளில் குறைந்த பெறுமதியை கொண்டுள்ளது மற்றும் வங்கியின் மூலம் மீள் செலத்தக்கூடிய ஆகக்கூடிய பங்களிப்பு தொகை என்பவற்றை கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றது.

### 3.3.2. நிதிப்பொறுப்புக்கள்

நிதிப் பொறுப்பு ஒன்று சார்ந்த வங்கியின் கடப்பாடானது தீர்க்கப்படும்போது இரத்துச் செய்யப்படும் போது அல்லது காலாவதியாகும் போது அப்பொறுப்பானது நிதிக்கூற்றுக்களில் இருந்து அங்கீகாரம் விலக்கப்படும். ஏற்கனவே காணப்படுகின்ற நிதிப்பொறுப்பு ஒன்றானது அதே பொறுப்பு வழங்குனரிடம் இருந்தான வேறுபட்ட நிபந்தனைகளுடன் கூடிய மற்றொரு பொறுப்பு மூலம் பதிலீடு செய்யப்படின், அல்லது ஏற்கனவே உள்ள நிதிப்பொறுப்பின் நிபந்தனைகளானவை பாரிய மாற்றங்களுக்கு உட்படின் அவ்வாறான பரிமாற்றம் அல்லது நிபந்தனை மாற்றமானது ஏற்கனவே காணப்படும் பொறுப்பின் அங்கீகாரத்தினை விலக்கி புதிய பொறுப்புக்களான அங்கீகாரத்தினை வழங்குவதாக காணப்படும்.

ஏற்கனவே காணப்பட்ட நிதிப்பொறுப்பின் கொண்டுசெல்லல் பெறுமதிக்கும் செலுத்தப்பட்ட கொள்வனவு பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடானது இலாபம் அல்லது நட்டமாக பதிவு செய்யப்படும்.

### 3.4. நியாயப் பெறுமதியினை தீர்மானித்தல்

அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான செயற்பாடு சந்தைகளில் நிரற்படுத்தப்பட்ட நிதி ஆதனங்களின் சீர் பெறுமதியானது அவற்றின் நிரற்படுத்திய சந்தை விலையின் அடிப்படையில் கொடுக்கல் வாங்களுக்கான எந்தவொரு கிரயங்களும் கழிக்கப்படாது கணிக்கப்படும்.

நிதி ஆதனங்களின் நியாயப்பெறுமதி தொடர்பான ஆய்வு மற்றும் எவ்வாறு அவை கணிக்கப்படுகின்றன தொடர்பான தகவல்கள் குறிப்பு இல. 40ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.5. நிதிச்சொத்துக்களின் பெறுமதியிழப்பு

வங்கியானது ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் எந்தவொரு நிதிச்சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்துக்களின் தொகுதியானது பெறுமதியிழப்பு ஏற்பட்டதற்கான குறிப்பான ஆதாரங்கள் தொடர்பான மதிப்பீட்டினை மேற்கொள்கிறது. ஒரு நிதிச்சொத்து அல்லது சொத்துக்களின் தொகுதியானது அவற்றின் முதற் தடவை அங்கீகரித்தலின் பின்னர் ஏற்பட்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வு அல்லது நிகழ்வுகளின் விளைவாக பெறுமதி இழப்பு ஏற்பட்டதற்கான குறிப்பிடத்தக்க ஆதாரம் காணப்படுவதோடு அந்நிகழ்வு (அல்லது நிகழ்வுகள்) குறித்த நிதிச் சொத்து அல்லது சொத்துக்களின் தொகுதியின் இருந்தான எதிர்பார்க்கப்பட்ட காசுப் பாய்ச்சலின் மீது நம்பகமான அளவிடக்கூடிய ஒரு தாக்கத்தினை செலுத்துமாயின் மாத்திரம் அந்நிதிச் சொத்து அல்லது சொத்துக்களின் தொகுதியானது பெறுமதி இழப்பு ஏற்பட்டதாக கொள்ளப்படும்.

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டிற்குரியது**

பெறுமதி இழப்பிற்கான ஆதாரமானது பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும். ஒரு கடன் பெறுநர் அல்லது கடன் பெறுநர் குழு முக்கிய நிதி நெருக்கடிகளை எதிர்கொள்ளல் தொடர்பான சமிக்ஞைகள், அவர்கள் முறிவடைவதற்கான அல்லது நிதிசார் மீள் ஒழுங்கமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கான நிகழ்தகவு, முதல் அல்லது வட்டிக் கொடுப்பனவின் தவறுகை அல்லது தவிர்ப்பு மற்றும் நிலுவை தக்க வைத்தல், தவறுகைகளுடன் கூடிய பொருளாதார நிலமைகள் முதலானவற்றால் எதிர்பார்க்கப்படும் காசு பாய்ச்சலின் ஏற்படக்கூடிய அளவிடத்தக்க வீழ்ச்சி தொடர்பான அவதானிக்கக்கூடிய தரவுகள்.

### 3.5.1. முன்கூட்டிக்கணக்கு முடிக்கப்பட்ட ஆதனங்கள்

முன்கூட்டிக்கணக்கு முடிக்கப்பட்ட ஆதனங்களானவை கடனின் முழுமையான அல்லது பகுதியளவிலான தீர்ப்பனவிற்காக பெறப்படும் ஆதனங்களாகும். முன்கூட்டியே கணக்கு முடிக்கப்பட்ட சொத்தின் சந்தைப் பெறுமதியான தொடர்புபட்ட கடன் நிலுவையிலிருந்து குறைவாக காணப்படின், அவ்வேறுபாடானது கடன் இழப்பிற்கான ஏற்பாடாக, குறித்த கடனிற்காக அச்சொத்தினை பெற்றுக் கொண்ட ஆண்டிற்கான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

### 3.5.2. நிதி ஆதனங்களை ஈடு செய்தல்

நிதிச்சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆனவை நடைமுறையில் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடு செய்வதற்கான சட்டரீதியான உரிமை ஒன்று காணப்படுதலோடு அதனை தேறிய அடிப்படையில் ஈடு செய்வதற்கான விருப்பம் காணப்படின் மாத்திரமே ஈடு செய்யப்பட்டு தேறிய பெறுமதிகள் நிதி நிலமைக்கூற்றில் காட்டப்படலாம். அல்லாத பொதுக் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களானவை ஒருமித்தவாறு காட்டப்படும். பிரதான தேறல் ஒப்பந்தங்களில் இம்முறை பயன்படுத்தப்படாததால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களானவை மொத்த அடிப்படையில் காட்டப்படும்.

### 3.6. குத்தகை

ஒரு ஒப்பந்தமானது குத்தகையா அல்லது குத்தகை ஒன்றினை உள்ளடக்கியுள்ளதா என்பது அந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுவதோடு ஏற்பாட்டின் முழுத்தன்மையானது சொத்து அல்லது சொத்துக்களின் தொகுதி ஒன்றினை பயன்படுத்தலில் தங்கியுள்ளதா, ஏற்பாடானது சொத்து ஒன்றினை பயன்படுத்துவதற்கான உரிமையினை வெளிப்படுத்துகின்றதா என்பது தொடர்பான மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### 3.6.1. குத்தகை-வங்கியானது குத்தகை பெறுநராக தொழிற்படல்

நிதிக் குத்தகையில் குத்தகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட பொருள் தொடர்பாக கணிசமான இடர்கள் மற்றும் அநுகூலங்கள் என்பன உரிமையைப் பெற்றுள்ள வங்கியையே சாரும். நியாயமான பெறுமதியில் குத்தகைக்கு விடப்பட்ட சொத்து அல்லது குறைந்தளவு குத்தகை செலுத்திய தொகையின் இன்றைய பெறுமதி குறைவாக இருப்பின் குத்தகைப் பொருளானது பயன்படுத்துவதற்கான ஆரம்ப நிலையை அடையும். குத்தகை செலுத்தல் தொகைகளானது நிதிக் கட்டணங்களுக்கிடையேயும் குத்தகை பொறுப்பு குறைகளுக்கிடையேயும் பகிரப்படும். அத்துடன் மீதியாக உள்ள பொறுப்புக்களை நிலையான வட்டிவீதம் மூலம் அடைந்து கொள்ளவும் முடியும். நிதிக்கட்டணங்கள் யாவும் வருமான கூற்றிலேயே வெளிப்படுத்தப்படும்.

மூலதனமாக்கப்பட்ட குத்தகை சொத்துக்கள் அவற்றின் பயன்தரு ஆயுட்காலம் மூலமாகவும் குத்தகை தவணைகளாலும் கணிப்பிடப்படுவதுடன். அவ்வாறான நிலைப்பாடு ஒன்று இல்லை எனின் அக்கம்பனியானது குத்தகை தவணை முடிவிலேயே அச்சொத்தை தனதாக்கிக் கொள்ளும். குத்தகை ஆதனங்களுக்கான தேய்மான கொள்கைகள் உரித்தாக உள்ள தேய்வுக்குட்படக்கூடிய சொத்திற்கு இணங்க காணப்படுவதுடன் இது தொடர்பான விளக்கங்கள் குறிப்பு இல. 3.8 ல் காட்டப்பட்டுள்ளது.

செயற்பாட்டு குத்தகை கட்டணங்கள் வருமான கூற்றில் ஒரு செலவாகப் பதியப்படுவதுடன் அது குத்தகை தவணைகளாக நேர் கோட்டு முறையில் கணிக்கப்படும்.

### 3.7. காசும் காசுக்கு ஈடானவையும்

காசு மற்றும் காசுக்கு ஈடானவைகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டவாறு கையிலுள்ள காசு, மத்திய வங்கியிலான கட்டற்ற நடைமுறை வைப்புக்கள் மற்றும் வங்கிகளிலான கேள்வியில் அல்லது மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான முதிர்ச்சியில் பெறக்கூடிய தொகைகள் என்பவற்றைக் கொண்டிருக்கும்.

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டிற்குரியது**

### 3.8. ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள் மற்றும் உபகரணங்களானவை நாளாந்தம் பராமரிப்புச் செலவு தவிர்ந்த, திரண்ட பெறுமான தேய்வு மற்றும் திரண்ட பெறுமதியிழப்பு என்பன நீங்கலான கிரயத்தில் காட்டப்படும். பயன்தரு ஆயுட்காலத்திலான மாற்றங்களானவை உரியவாறு பெறுமதி அழிவுக்காலம் அல்லது முறையினை மாற்றுவதன் மூலம் கணக்கு வைக்கப்படுவதோடு அது கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றமாக வெளிப்படுத்தப்படும்.

சொத்துக்களின் கிரயத்தினை அவற்றின் எஞ்சிய பெறுமதிக்கு அவற்றின் மதிப்பிடப்பட்ட ஆயட்காலம் முழுவதிற்கும் குறைத்து எழுதுவதற்காக பெறுமானத் தேய்வானது நேர் கோட்டு முறையினை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது. நிலமானது பெறுமானத் தேய்வுக்கு உட்படுவதில்லை. மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலங்கள் வருமாறு:

| | |
|---|---|
| கட்டடம் | ஆண்டிற்கு 5% |
| கணனி உபகரணம் | ஆண்டிற்கு 20% |
| அலுவலக உபகரணங்கள் | ஆண்டிற்கு 20% |
| மோட்டார் வாகனங்கள் | ஆண்டிற்கு 20% |
| தளபாடங்கள் | ஆண்டிற்கு 15% |
| இரும்புப் பெட்டகங்கள் | ஆண்டிற்கு 10% |

ஆதனங்கள் மற்றும் உபகரணங்களானவை அவற்றின் முடிவுறுத்தலின்போது அல்லது அவற்றின் பாவனை மூலம் எந்தவொரு எதிர்கால பொருளாதார பெறுமதிகளும் எதிர்பார்க்க முடியாத பொது அங்கீகாரம் விலக்கப்படும். அங்கீகார விலக்கலின் போது ஏற்படும் யாதாயினும் ஒரு பெறுகை அல்லது இழப்பு (சொத்தின் தேறிய முடிவு செய்தல் பெறுமதிக்கும் கொண்டு செல்லல் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு) அச்சொத்து அங்கீகாரம் விலக்கப்படும் ஆண்டின் வருமானக் கூற்றில் ஏனைய வருமானமாக அங்கீகரிக்கப்படும்.

### 3.9. அருவச் சொத்துக்கள்

அருவச் சொத்து ஒன்றானது அதன் கிரயமானது நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாக உள்ளதோடு, அதன் மூலம் பெறக்கூடிய எதிர்கால பொருளாதார நன்மைகள் வங்கிக்கு கிடைப்பதற்கான சாத்தியத் தன்மையும் உள்ள போது மாத்திரமே நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படும்.

தனியாகக் கொள்வனவு செய்யப்பட்ட அருவச் சொத்துக்களானவை முதன் முறை அங்கீகரிப்பின் போது கிரயத்திற் கொள்ளப்படும். வணிகச் சேர்க்கை ஒன்றின் போது பெற்றுக்கொள்ளப்படும் அருவச் சொத்துக்களானவை வணிகச் சேர்க்கைத் திகதியிலான அவற்றின் சீர் பெறுமதியில் கொள்ளப்படும் முதற் கட்ட அங்கீகாரத்தினைத் தொடர்ந்து அருவச் சொத்துக்களானவை கிரயத்திலிருந்து திரண்ட பெறுமதி அழிவு மற்றும் பெறுமதி இழப்பிற்கான ஏற்பாடுகள் நீங்கலான பெறுமதியில் கொண்டு செல்லப்படும்.

அருவச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலமானது திட்டமானதாகவோ முடிவிலியாகவோ காணப்படலாம். திடமான ஆயுட்காலம் கொண்ட அருவச் சொத்துக்களானவை அவற்றின் ஆயுட்காலம் முழுதும் பெறுமதி அழிவு செய்யப்படும். திடமான ஆயுள் காலத்துடனான அருவச் சொத்துக்களின் பெறுமதியழிவிற்கான காலம் மற்றும் பெறுமதி அழிவு முறைகள் என்பன குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மீளாய்வு செய்யப்படும். எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுள் காலத்தில் அல்லது சொத்தில் அடங்கியுள்ள பொருளாதாரப் பயன்பாட்டினை நுகரும் முறையில் ஏற்படக்கூடிய மாற்றங்களானவை பெறுமதியழிவு முறையினை அல்லது காலத்தினை உரியவாறு மாற்றுவதன் மூலம் கணக்கு வைக்கப்படுவதோடு அது கணக்கீட்டு மதிப்பீடுகளிலான ஒரு மாற்றமாகக் கொள்ளப்படும். திடமான ஆயுட்காலம் கொண்ட அருவச் சொத்துக்களின் பெறுமதி அழிவுக்கிரயமானது வருமானக் கூற்றில் ஒரு தனியான உருப்படியாகக் காட்டப்படும்.

அருவச் சொத்துக்களின் கிரயத்தினை அவற்றின் எஞ்சிய பெறுமதிக்கு குறைத்து எழுதுவதற்கான பெறுமதி அழிவானது அவற்றின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் நேர்கோட்டு முறையில் பின்வருமாறு கணிக்கப்படும்.

| | |
|---|---|
| கணனி மென்பொருள் | 3 வருடங்கள் |

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டிற்குரியது**

### 3.10. நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி இழப்பு

வங்கியானது தனது ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் ஏதாவது ஒரு சொத்தின் பெறுமதி இழப்பிற்கான அறிகுறிகள் தென்படுகின்றதா என்பதை மதிப்பீடு செய்கின்றது. அவ்வாறான அறிகுறிகள் தென்படின் அல்லது சொத்து ஒன்றுக்கு வருடாந்த பெறுமதி இழப்பு சோதனை மேற்கொள்ள வேண்டிய தேவையேற்படின், வங்கியானது அச்சொத்தின் தேறத்தக்க பெறுமதியினை மதிப்பிடும். சொத்து ஒன்றின் தேறத்தக்க பெறுமதி என்பது சொத்து அல்லது காசை உருவாக்கும் அலகு ஒன்றின் சீர்பெறுமதியில் விற்பனைக்கான செலவுகள் நீங்கலான பெறுமதி மற்றும் அதன் பயன்பாட்டிலுள்ள பெறுமதி என்பவற்றில் உயர்ந்த பெறுமதியாகும். சொத்து அல்லது காசை உருவாக்கும் அலகு ஒன்றின் கொண்டு செல்லல் பெறுமதியானது அதன் தேறத்தக்க பெறுமதியினை விட அதிகமாக காணப்படின் அச்சொத்து பெறுமதி இழப்பிற்கு உட்பட்டுள்ளதாக கொள்ளப்பட்டு அதன் பெறுமதி தேறத்தக்க பெறுமதிக்கு குறைக்கப்படும்.

### 3.11. நிதி உத்தரவாதங்கள்

வங்கியானது தனது சாதாரண செயற்பாட்டு பரப்பில் கடன் சான்று உத்தரவாதங்கள் மற்றும் ஏற்புகள் முதலான நிதி உத்தரவாதங்களை வழங்குகின்றது. நிதி உத்தரவாதங்களானது முதற் தடவையாக அவற்றின் சீர் பெறுமதியில் வட்டம் பெறப்பட்டதாக கொண்டு நிதிக் கூற்றுக்களில் (ஏனைய பொறுப்புக்களின் கீழ்) அங்கீகரிக்கப்படுகின்றன.

முதற்தடவை அங்கீகாரத்தின் பின் ஒவ்வொரு உத்தரவாதத்திலுமுள்ள வங்கியின் பொறுப்பானது முதற் தடவையில் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதியிலிருந்து வருமான கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட பெறுமதி அழிவுகளின் தொகை நீங்கலான பெறுமதி மற்றும் உத்தரவாதத்தின் விளைவாக ஏற்படும் நிதிப் பொறுப்பினைத் தீர்ப்பதற்கான செலவு தொடர்பான சிறப்பான மதிப்பீட்டுப் பெறுமதி என்பவற்றில் உயர்வான பெறுமதியில் அளவிடப்படும்.

பொறுப்பின் பெறுமதியில் ஏற்படும் யாதாயினும் அதிகரிப்புக்களானவை வருமானக் கூற்றில் கடன் இழப்பு நட்டமாகக் காட்டப்படும். பெறப்பட்ட உத்தரவாதத் தொகையானது அவ் உத்தரவாதத்தின் காலப்பகுதி முழுவதும் வருமானக்கூற்றில் தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் எனப்பதிவு செய்யப்படும்.

### 3.12. ஓய்வூதிய நன்மைகள்

#### 3.12.1. முறையான பயன்பாட்டு ஓய்வூதிய திட்டம்

முறையான பயன்பாட்டு ஓய்வூதிய திட்டமானது முறையான பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தினை விட ஊழியருக்கான நிலையான ஒரு பயன்பாட்டுத் திட்டமென இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS 19 (ஊழியர் பயன்) படி அறிவிக்கப்பட்டுள்ளது. முறையான பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் தொடர்பான விபரம் குறிப்பு இலக்கம் 3-12-2 இல் காட்டப்பட்டுள்ளது.

#### 3.12.1.1. பணிக்கொடை

1983ம் ஆண்டு 12ம் இலக்க பணிக்கொடை சட்டத்திற்கு அமைவாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிதியின் கீழ் முழுமையான பொறுப்பை அறிந்து கொள்ளும் விதமாக, ஒவ்வொரு ஆண்டிலும் பெறுமதி அளவிடப்படுகிறதுடன் 31 டிசம்பர் 2013இல் இச்சேவையானது Actuarial & Management consultants (Pvt) Ltd என்னும் உத்தரவு பெற்ற அளவையியலாளர் நிறுவனத்தால் வழங்கப்படுகின்றது.

திட்டம் தொடர்பான இலாபம் மற்றும் நட்டங்கள் அங்கீகரிக்கப்படல் : வேறு முற்றடக்க வருமானங்களின் வாயிலாக அவ்வாண்டிற்கான பொறுப்பினை கணிப்பிடுவதுடன் வங்கியின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட இலாபங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக கண்டறியலாம்.

நிதி ஒதுக்க ஏற்பாடுகள் : பணிக்கொடை செலுத்தும் பொறுப்பானது வெளியகத்தினால் நிதி வழங்குவது தொடர்பானதல்ல.

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டிற்குரியது**

### 3.12.2. முறையான பங்களிப்பு ஓய்வூதியதிட்டம்

இலங்கை கணக்கீட்டு நியமம் LKAS :19 இன்படி முறையான பங்களிப்பு ஓய்வூதியதிட்டம் என்பது ஊழியர்களின் பிற்கால பயன்பாட்டு திட்டம் ஒன்றாகும். இதன்கீழ் ஒரு அமைப்பானது நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் தொகைகளை வேறுபட்ட ஒரு அமைப்பு ஒன்றிற்கு செலுத்துவதோடு, இவ்வாறு ஊழியர்களின் சேவைக்கேற்ற விகிதத்தில் அப்பயன்பாட்டு பயனை வழங்குவதற்கான போதியளவு சொத்துக்களை அந்நிதி கொண்டில்லையெனின் பங்களிப்பு தொகைகளை வழங்குவதற்கான சட்டரீதியாக மற்றும் அதனை செலுத்துவதற்கான எந்தவொரு பொறுப்பு இல்லை என்பதாகும்.

முறையான பங்களிப்பு ஓய்வூதியத்திட்டம் ஒன்றிற்கு செலுத்த வேண்டிய பங்களிப்பானது ஊழியர்களினால் வங்கிக்கு வழங்கப்பட்ட சேவையின் விகிதாசாரமாகக் காணப்படுவதுடன் அது மனிதவள செலவுகளாகப் பதிவு செய்யப்படுகின்றது. செலுத்தப்படாத பங்களிப்பு தொகைகள் பொறுப்பாகப் பதியப்படுகிறது.

1. ஊழியர் சேமலாப நிதியம்.

   வங்கியும் அதன் ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு முறையே 15% மற்றும் 10% இனைப்பங்களிப்பு செய்கின்றனர்.

2. ஊழியர் நம்பிக்கை நிதியம்

   வங்கியானது ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% இனைப்பங்களிப்பு செய்கின்றது.

### 3.13. ஏற்பாடுகள்

வங்கியானது கடந்தகால நிகழ்வு ஒன்றின் விளைவாக நிகழ்காலத்தில் ஒரு பொறுப்பினைக் கொண்டுள்ள போது அப்பொறுப்பினைத் தீர்ப்பதற்காக சில பொருளாதார நன்மைகளைத் தரக்கூடிய வளங்களின் வெளிப்பாய்ச்சலுக்கான சாத்தியம் உள்ளதோடு அப்பொறுப்புக்கள் நம்பகமாக அளவிடப்பட முடியுமாக இருப்பின் மட்டுமே ஏற்பாடுகள் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படும். ஏற்பாடுகள் தொடர்பான எந்தவொரு செலவுகளையும் மீள அளித்து ஈடுசெய்த பெறுமதியை வருமானக்கூற்றில் வெளிப்படுத்த வேண்டும்.

### 3.14. வருமானங்கள் மற்றும் செலவீனங்களை அங்கீகரித்தல்

வருமானமானது வங்கிக்கு பொருளாதார நன்மைகள் கிடைக்கும் சாத்தியம் இருத்தல் மற்றும் வருமானமானது நம்பகத் தன்மையாக அளவிடக்கூடியதாக இருத்தல் என்பவற்றின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படும் வருமானங்கள் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் பின்வருவன தொடர்பாகவும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

### 3.14.1. வட்டி மற்றும் அது போன்ற வருமானங்கள் மற்றும் செலவீனங்கள்

கடனழிவு செய்யப்பட்ட பெறுமதியில் அளவீடு செய்யப்பட்ட சகல நிதி ஆதனங்களிலும் வட்டி உழைக்கும் நிதிச் சொத்துக்களானவை விற்பனைக்குத் தயாராகவுள்ளவை மற்றும் இலாப நட்டங்களூடாக சீர் பெறுமதி அனுசரிக்கப்படும். நிதிச் சொத்துக்கள் என வகைப்படுத்தப் படுவதோடு, வட்டி வருமானம் அல்லது செலவீனங்களாலானவை விளைவு வட்டி வீதத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்படும்.

விளைவு வட்டி மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பெறுவனவுகள் அல்லது கொடுப்பனவுகளை அதன் ஆயட்காலம் முழுவதும் அல்லது குறுங்காலம் ஒன்றிற்கு பொருத்தமானவாறு நிதிச் சொத்துக்களின் அல்லது பொறுப்புக்களின் கொண்டு செல்லும் பெறுமதிக்கு சரியாகக் கழிவீடு செய்யப்படும் வீதமாகும். இக்கணிப்பீடானது நிதி ஆதனத்தின் சகல ஒப்பந்த நிபந்தனைகளையும் கருத்தில் எடுப்பதோடு, எதிர்கால கடன் நட்டங்கள் தவிர்ந்த விளைவு வட்டி வீதத்தின் உள்ளார்த்தமான பகுதியாகவுள்ள நிதி ஆதனத்தின் மீது நேரடியாக தாக்கல் செய்யக்கூடிய சகல கட்டணங்கள் அதிகரித்த செலவுகள் முதலானவற்றை உள்ளடக்கும்.

வங்கியானது தனது பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான மதிப்பீட்டினை மாற்றும் போது நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டு செல்லல் பெறுமதியானது சீராக்கம் செய்யப்படுகிறது. சீராக்கப்பட்ட கொண்டு செல்லல் பெறுமதியானது ஆரம்ப விளைவு வட்டி வீதத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படுவதோடு, கொண்டு செல்லல் பெறுமதியில் ஏற்படும் மாற்றமானது, நிதிச் சொத்துக்களுக்கு வட்டி

# நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டிற்குரியது**

மற்றும் அது போன்ற வருமானங்கள் எனவும் நிதிப்பொறுப்புகளுக்கு வட்டி மற்றும் அது போன்ற செலவுகள் எனவும் பதிவு செய்யப்படும். எனினும் காசுப் பெறுவனவுகளின் அதிகரித்த மீள பெறுகைத் தன்மை காரணமாக வங்கியானது மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பெறுகைகளை அதிகரித்து மீள் வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்து ஒன்றினது (குறிப்பு இல. 3.2.5) அதிகரிப்பின் விளைவானது மதிப்பீட்டு மாற்றத் திகதியலிருந்தான விளைவு வட்டி வீதத்தின் மீதான சீராக்கமாக அங்கீகரிக்கப்படும்.

நிதிச் சொத்து ஒன்றின் அல்லது அவ்வாறான சொத்துக்களின் தொகுதி ஒன்றின் பதிவு செய்யப்பட்ட பெறுமதியானது பெறுமதியிழப்பு நட்டங்கள் காரணமாக குறைக்கப்பட்டிருப்பின், வட்டி வருமானமானது பெறுமதி இழப்பு நட்டங்களை கணிப்பிடுவதற்காக எதிர்கால காசுப் பாய்ச்சல்களை கழிவீடு செய்யப் பயன்படுத்தப்படும் வீதத்தினைப் பயன்படுத்தி அங்கீகரிக்கப்படும்.

நிதிச் சொத்து ஒன்றின் அல்லது அவ்வாறான சொத்துக்களின் தொகுதி ஒன்றின் பதிவு செய்யப்பட்ட பெறுமதியானது பெறுமதியிழப்பு நட்டங்கள் காரணமாக குறைக்கப்பட்டிருப்பின், வட்டி வருமானமானது பெறுமதி இழப்பு நட்டங்களை கணிப்பிடுவதற்காக எதிர்கால காசுப் பாய்ச்சல்களை கழிவீடு செய்யப் பயன்படுத்தப்படும் வீதத்தினைப் பயன்படுத்தி அங்கீகரிக்கப்படும்.

### 3.14.2. கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம்

வங்கியானது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் பலதரப்பட்ட வகையான சேவைகளின் மூலம் கட்டணங்கள் மற்றும் தரகு வருமானங்களைப் பெற்றுக் கொள்கிறது. கட்டண வருமானங்களானவை பின்வருமாறு வகைப்படுத்தப்படலாம்.

### 3.14.2.1. குறிப்பிட்ட காலப்பகுதியில் வழங்கப்படும் சேவைகள் மூலம் பெறப்படும் கட்டண வருமானம்

குறித்த காலப்பகுதியில் வழங்கப்படும் சேவைகள் மூலம் பெறப்படும் கட்டண வருமானங்களானவை அக்காலப்பகுதிக்கு உரியனவாகக் கருதப்படும். இக்கட்டணங்களானவை வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்படும் தரகு வருமானம், கடன் சேவை அறவீடுகள், பரிசோதனைக் கட்டணங்கள் மற்றும் காகிதாதிகளுக்கான கட்டணங்கள் என்பவற்றை உள்ளடக்கும்.

பயன்படுத்தப்படக்கூடிய கடன்களுக்கான கடன் உடன்பாட்டுத் தொகை மற்றும் ஏனைய கடன் தொடர்பான கட்டணங்களானவை (அதிகரித்த கட்டணங்கள் உள்ளடங்கலாக) பிற்போடப்பட்டவைகளாக கொள்ளப்படுவதோடு கடன் மீதான இழிவு வட்டி வீதத்தின் மீது மேற்கொள்ள வேண்டிய ஒரு சீராக்கமாகவும் அங்கீகரிக்கப்படும். கடனானது பயன்படுத்துவதற்கான சாத்தியத் தன்மைகள் காணப்படாத போது கடன் உடன்பாட்டுத் தொகையானது, உடன்பாட்டுக்காலம் முழுதும் நேர் கோட்டு முறையில் அங்கீகரிக்கப்படும்.

### 3.14.3. பங்கிலாப வருமானம்

வங்கியானது கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை உருவாக்கப்பட்டதும் அதாவது பங்குதாரரினால் பங்கிலாபமானது அனுமதியளிக்கப்பட்டதும், வருமானமானது அங்கீகரிக்கப்படும்.

### 3.14.4. முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் - வரிச் செலவீனம்

இலங்கை கணக்கீட்டு நியமித்திற்கு LKAS:12 (வருமானவரிகள்) இணங்க தற்போதைய வரி மற்றும் பிற்போடப்பட்ட வரிகளுக்கு ஏற்ப வரிச் செலவீனத் தொகையானது இலாப நட்டங்களை கணிப்பதற்காக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். உரிமையாண்மை மற்றும் வேறு முற்றடக்க வருமானம் என்பவற்றில் நேரடியாக அங்கீகரிக்கப்படும் வரிச் செலவீனங்கள் தவிர்ந்த அனைத்து வரிச் செலவீனங்களும் வருமானக்கூற்றில் வெளிப்படுத்தப்படும்.

### 3.14.4.1. தற்போதைய வரி

நடைமுறை மற்றும் கடந்த ஆண்டுகளுக்கான தற்போதைய வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களானவை எதிர்பார்க்கப்படும் வரி அதிகார சபைகளுக்கு செலுத்தித் தீர்க்க வேண்டிய அல்லது அவர்களிடமிருந்து பெற வேண்டிய தொகைகளில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இத்தொகையினைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வரிச்சட்டம் மற்றும் வரி வீதங்களானவை முன்னரே நடைமுறையிலுள்ள அல்லது அறிக்கையிடல் திகதியில் நடைமுறைக்கு வந்த சட்டங்கள் மற்றும் வீதங்களாகும்.

உள்நாட்டு வருமான சட்டமான 2006ம் ஆண்டு 10ம் இலக்க சட்டத்தின்படி வரி நோக்கங்களுக்காக கணிக்கப்பட்ட இலாபத்தின் அடிப்படையிலேயே வரிக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் இது பற்றிய திருத்தங்கள் மற்றும் வீதங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 12ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.14.4.2. பிற்போடப்பட்ட வரி

பிற்போடப்பட்ட வரியானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடித்தளத்திற்கும் அச்சொத்துக்கள் நிதி அறிக்கையிடலுக்காக கொண்டிருக்கும் கொண்டு செல்லும் பெறுமதிக்கும் இடையிலான தற்காலிக வேறுபாடுகளுக்காக ஏற்பாடு செய்யப்படுகிறது. பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்களானவை பின்வருவன தவிர்ந்த சகல தற்காலிக வேறுபாடுகளிற்கும் அங்கீகரிக்கப்படுகின்றன.

- பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்களானவை வணிகச் சேர்க்கை அல்லாத கொடுக்கல் வாங்கல்களிலான நன்மதிப்பு சொத்து அல்லது பொறுப்பு ஒன்றின் முதற் தடவை அங்கீகரித்தலின் விளைவாக ஏற்படுவதோடு அக்கொடுக்கல் வாங்கலின் விளைவாக, கணக்கீடு இலாபமோ, வரி விதிப்பதற்கான இலாபமோ அல்லது நட்டமோ எந்தவொரு தாக்கமும் இன்றி காணப்படல்.
- சேய்க் கம்பனிகளிலான முதலீட்டின் மீதான வரி விதிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளில் தற்காலிக வேறுபாடுகளினை மீள பதிவளித்தலிற்கான காலம் கட்டுப்படுத்தக் கூடியதாகவும் அத்தற்காலிக வேறுபாடுகளானவை கட்புலனாகக் கூடிய எதிர்காலத்தில் மீள் பதிவு அளிக்க முடியாமைக்கான நிகழ்தகவு காணப்படல்.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களானவை கீழ் வருவன தவிர்ந்த சகல கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகள் பாவனைக்கு எடுக்கப்படாத வரிக்கழிப்புக்கள் மற்றும் வரி நட்டங்கள் என்பவற்றின் மீது கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளினைக் கழிப்பதற்கான வரி அறவிடத்தக்க இலாபங்கள் காணப்படும் சாத்தியமான அளவு கொண்டு செல்லப்பட்ட வரி கழிப்பனவு மற்றும் வரி நட்டங்கள் என்பன பயன்படுத்தப்படலாம்.

- கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளோடு தொடர்புடைய பிற்போடப்பட்ட வரிச் சொத்தானது வணிகச் சேர்க்கை அல்லாத கொடுக்கல் வாங்கல் ஒன்றின் மூலமாக பெற்றுக் கொள்ளப்படும் சொத்து அல்லது பொறுப்பு ஒன்றின் முதற்தடவை அங்கீகாரம் மூலம் ஏற்பட, அக்கொடுக்கல் வாங்கல் மூலம் கணக்கியல் இலாபமோ, வரி விதிக்கத்தக்க இலாபம் அல்லது நட்டம் எந்தவொரு மாற்றத்திற்கும் உட்படாது இருத்தல்
- சேய்க்கம்பனி மீதான முதலீடு தொடர்பான கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாட்டின் போது பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களானவை, தற்காலிக வேறுபாடுகளானவை கட்புலனாகக் கூடிய எதிர்காலத்தினுள் மீள் பெறுகை செய்யப்படல் மற்றும் தற்காலிக வேறுபாடுகளைக் கழிப்பதற்கான வரி விதிக்கத்தக்க இலாபங்கள் காணப்படல் என்பவற்றிற்கான சாத்தியங்களின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படும்.

பிற்போடப்பட்ட வரிச்சொத்துக்களின் கொண்டு செல்லல் பெறுமதியானது ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதோடு, பிற்போடப்பட்ட வரிச் சொத்தினைப் பயன்படுத்துவதற்கான எதிர்கால வரியிடத் தக்க இலாபங்கள் இல்லாதபோது அது மீள் பெறுகை செய்ய முடியாததாகக் கருதப்பட்டு அந்த அளவிற்கு குறைக்கப்படும். அங்கீகரிக்கப்படாத பிற்போடப்பட்ட வரிச் செலவுகளானது ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு எதிர்காலத்தில் கிடைக்கக்கூடிய வரியிடத்தக்க இலாபங்களின் அடிப்படையில் மீள் பெறுகை செய்யப்படக்கூடிய வரியின் அளவிற்கு அங்கீகரிக்கப்படும்.

